# மனிதன் எங்கே செல்கிறான்?

அ. மு. ப.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில்
காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மனிதன் எங்கே செல்கிறன்?

அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ.,எம். லிட்.
*துணைத்தமிழ்ப் பேராசிரியர்,*
*பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.*

**தமிழ்க்கலைப் பதிப்பகம்**
*சென்னை-30*

டிசம்பர், 1960

விலை 1—50

உரிமைப் பதிப்பு

# முன்னுரை

——:O:——

மண்ணும் விண்ணும் மனிதன் படைப்புக்கு அப்பாற் பட்டவை. மனிதன் தோன்ருத பண்டை நாள் தொட்டு அவை நிலைத்துள்ளன. அவையும், அவை சார்ந்த பிற நீரும், நெருப்பும், காற்றும் அனைத்தையும் ஆக்கும் ஆற்றல் பெற்றுள்ளன. இவை உண்டான காலத்தை விஞ்ஞானிகள் இன்று காண முயல்கின்ருர்கள். முடிவு அவர்கள் முன் தெரிவதில்லை. காலம் கடந்து கரை கடந்து இவ்வைம்பூதங்கள் வாழ்கின்றன.

இவ்வைம்பூதச் சேர்க்கையே உலகம். இவ்வுலகம், தான் சுற்றி வரும் சூரியனிலிருந்து சிதறிய ஒரு பொறி என்பர் ஆய்வாளர். ஆனல், அப்பொறி அவனிடமிருந்து பிரிந்த நாள் ‘இது’ என்று திட்டமாகக் கூற முடிய வில்லை. அச் சூரியன் நிலையும் பரந்து கிடக்கின்ற அண்ட கோளத்தில் அளவிட்டுக் கூற முடியாத ஒரு சிறு நிலை தான். “அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம், அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி” என்ருர் மணி மொழியார். அவர் சொற்படி அண்டமுகட்டில் சூரியனைப் போன்று எத்தனையோ உருண்டைகள் உழல்கின்றன. அவற்றுள் ஒருவனுகிய இச்சூரியனைச் சுற்றி நம் உலகம் போன்ற பல உலகங்கள் வட்டமிடுகின்றன. இவ்வுலகத் தோற்றத்தை அறுதியிட்டுத் திட்ட வட்டமாகக் காண முடியவில்லை.

உலகத் தோற்ற நாளைக் கணக்கிட முடியாவிடினும், இதில் தோன்றிய உயிர்த் தோற்றத்தையாவது எண்ண முடிகின்றதா? அதுவும் இல்லையே! மனிதன் தோற்ற காலம் ஏதோ இன்றைக்கு 800 கோடி ஆண்டுகளுக்கு முன் என்று ஒரு சாராரும், 200 கோடி ஆண்டுகளுக்கு

முன் என்று மற்ருெரு சாராரும் கூறுகின்றனர். எது எப்படியாயினும், உயிர் இனம் தோன்றிப் பல கோடி கற்பங்கள் கழிந்திருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதி. ஆகவே, இப்பரந்த அண்ட முகட்டின் எல்லையை எண்ணின், நம் மண் ஒரு திவலை. இதன் ஆயுட் காலத்தைக் கணக்கிடின், நம் வாழ் நாள் ஒரு நொடி. இதுவே இன்றைய மனிதன் வாழ்வு

வாழ்கின்ற மனிதன் இதை எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்த்து 'எல்லாம் பொய்' என்று சொல்லும் துறவை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கூறவில்லை; அது தேவையற்றதுங்கூட. ஆனால், இதை எண்ணின், மனிதன் மனிதனுக வாழ்வான் என்பது என் உள்ளக் கிடக்கை.

மனிதன் தன் நிலை கெட்டு விலங்காகி மாறும் நிலையினை இந்நூலின் ஒவ்வொரு கட்டுரையிலும் காட்டிச் சென்றிருக்கின்றேன். மனிதப்பண்பு எத்தகையது என்பதை உலகப் பெரியார்களெல்லாம் வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள்; வரைந்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் மேலாகத் தமிழர்தம் பண்பாட்டை விளக்கும் அறநூல்கள் பல தமிழ் நாட்டில் உள்ளன. வாழ்வு நெறிக்கு வரம்பான நூல் என்று உலகத்துக்கு உணர்த்தும் திருக்குறள் தோன்றிய தமிழ் நாட்டிலே தான் நாம் வாழ்கின்ருேம்; ஆனால், அந்நூல் வழி நடக்கக் கற்ருேமில்லை.

இதில் வரும் கட்டுரைகள் பல ஆண்டுகளில் பலப் பல இதழ்களில் வெளியானவை. மனிதன் நிலை பற்றிய இக் கட்டுரைகளைத் தொகுத்தே இப் பெயரில் இந்நூல் வெளிவருகிறது. அக்கட்டுரைகளில் முதல் கட்டுரையாகிய 'மனிதன் எங்கே செல்கிருன்?' என்பதன் பெயராலேயே இந்நூல் அமைந்துள்ளது. வெறும் முதலால்

மட்டும் பெயர் பெற்றதாகாது,' மற்றக் கட்டுரைகளும் மனிதனைப் பற்றியனவே ஆனமையான் நூல் முழுவதுக்கும் இப்பெயர் பொருந்துவதாகும். வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இதழ்களில் கட்டுரைகள் இடம் பெற்றமையால், சிற்சில கருத்துக்களும், செய்யுட்களும் திரும்பத் திரும்பக் காணப்பெறும். எனினும், கட்டுரையின் அமைப்பும் பொருள் தொடர்பும் கருதி அவை அப்படியே விடப் பட்டுள்ளன.

உலகம் தோன்றிய நாள் தொட்டு வாழ வழி காட்டிய பெரியவர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். அவர் காட்டாதனவற்றுள் நான் ஒன்றும் புதிதாகக் காட்டவில்லை. எனினும், இன்றைய நாகரிக உலகில் நடமாடும் கொடுமைகளைக் காணுந்தோறும் எழுந்த உள்ள உணர்ச்சியே இக்கட்டுரைகளாய் முகிழ்ந்துள்ளது. எனவே, இதில் ஒரு வேளை சிலரைக் குறை கூறியிருப்பேன். சில சொற்கள் உள்ளக் குமுறலால் உதிர்ந்திருக்கும். அவை குற்றமாயின், கற்றறிந்தார் ஆய்ந்து, கொள்வன கொள்வாராக! எப்படியாவது மனிதன், தன்னைப் போலப் பிறரை நோக்கி, நாடெங்கும் வாழும் நல்ல சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்பதே என் ஆசை. அந்த ஆசை என்று நிறைவேறுமோ!

தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30
10—12—60

பணிவுள்ள,
**அ. மு. பரமசிவானந்தம்**

## பொருளடக்கம்

—:O:—


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 1. மனிதன் எங்கே செல்கிறுன்? (புது யுகம், சிங்கப்பூர், 28-10-54) | ... | 9 |
| 2. தசாவதாரம் (அமுதசுரபி-சென்னை 55-11-54) | ... | 16 |
| 3. எது கலாசாரம்? (பாரத தேவி, சென்னை, 22-9-53) | ... | 29 |
| 4. தமிழன் ஒரு சமரச ஞானி (தமிழ் முரசு, சிங்கப்பூர், 14-1-56) | ... | 36 |
| 5. படிப்பது எதற்கு? (மலர், பொங்கல் வெளியீடு, 56) | ... | 48 |
| 6. மெய்யறிவு (தென்றல், ஜனவரி, 56) | ... | 56 |
| 7. உள்ளம் திறக்குமா? (பாரத தேவி, 53) | ... | 63 |
| 8. இதுவா முன்னேற்றம்? (பாரத தேவி, 4-10-53) | ... | 68 |
| 9. பாரதியார் வந்தால்? (பாரத தேவி, சென்னை, 12-9-53) | ... | 77 |
| 10. ஒன்றுமில்லை (பாரத தேவி, சென்னை-53) | ... | 85 |
| 11. மக்கள் ஊழியர் (செங்கற்பட்டு மாவட்ட ஊழியர் இதழ், 54) | ... | 92 |
| 12. திறப்புரை (இரண்டாவது திருக்குறள் மாநாடு, செங்கம், 17-1-54) | ... | 100 |

# மனிதன் எங்கே செல்கிறான் ? ★

மனிதன் தோன்றிய நாளைக் கணக்கிட முயன்று வரும் ஆராய்ச்சியாளர், எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவன் தோன்றியிருந்திருக்க வேண்டும் என்று முடிவு கூறுகின்றனர். இன்றைய மனிதனது வாழ்நாள் நீண்ட உலக வாழ்நாளில் ஒரு நொடி. ஏன்? மனித இனத்தின் காலமே பரந்த அண்ட கோள ஆயுட்காலத்தின் ஒரு நொடியேயாகும். அளப் பருந்தன்மை வாய்ந்த அண்ட கோளத்தின் ஆயுளில் ஒருநொடிக் காலமே மனித இனத்தின் காலம் என்றாலும், மனிதன் அந்த அண்டகோள எல்லைகளையெல்லாம் அளக்கும் ஆற்றல் பெற்றுவிட்டான் என்பதை அறிகின்றோம்.

மனிதன் மற்றவைகளை அடக்கியாளும் அறிவு பெற்றதுகொண்டு, அவனே மற்றெவற்றினும் உயர்ந் தவனானன். தோற்றக் காலத்தில் இருந்த மனிதன் பல வகையில் இன்றைய மனிதனிலும் வேறுபட்டிருப்பான்

என்பது அறிஞர் கண்ட முடிபு. மனிதனுக்கு முன்னரே விலங்கினமும், பறவையினமும், பூச்சியும் புழுவும் பல்கியிருந்தன எனவும் அறிகின்ருேம். அவை இன்னும் வாழ்கின்றன. மனிதன் காலத்தால் பிற்பட்டுத் தோன்றினன் என்ருலும், அவன் தனக்குமுன் தோன்றிய அனைத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்ருன். உயிர்த் தோற்றங்களை மட்டுமன்றி, இயற்கை நெறிகளையுங்கூட ஒருவாறு கட்டுப்படுத்தி வெற்றி காண்கின்ற அளவுக்கு மனிதன் முற்னேற்றமடைந்துள்ளான் என்பது கண்கூடு. இயற்கை அன்னை சில வேளைகளில் - சீற்றங் கொண்டு சீறிட்டு எழும் சமயங்களில் – மனித முயற்சிகளை முறியடித்தாலுங்கூட, பெரும்பாலும் அமைதி பெற்றுள்ள வேளைகளிளெல்லாம் தான் பெற்றெடுத்த அருமை மனிதனுடைய ஆராய்ச்சிகளுக்கு அடங்கிக் கட்டுப்பட்டுத்தானே இருக்கிருள்! வானும் கடலும் வையமும் மனிதன் ஆணை வயப்பட்டன போன்றன்ருே இன்றைய மனிதன் செயல்கள் அமைந்துள்ளன !

இவ்வாறு தனக்கு முற்பட்டதையும், தன்னைத் தோற்றுவித்த இயற்கைப் பொருள்களையும், தன்ஞல் கட்டுப்படுத்த முடியாதவற்றையுங்கூடக் கட்டியாளும் சத்தியை மனிதன் எங்கிருந்து பெற்ருன் ? ஆம்! அவன் தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள பிறவற்றையும் உற்று நோக்கி ஆராயும் வன்மை பெற்றிருக்கிருன் அன்ருே! ஐம்புலன்களால் பெறுகின்ற அறிவுகளோடு ஆருவது அறிவாகிய பகுத்தறிவையும் அவன் பெற்றிருக்கிருன். அந்த அறிவின் துணைகொண்டு நெடுநாட்களுக்கு முன்பே அவன் ஆராயத் தொடங்கினன். அவன் ஆராய்ச்சியில் அனைத்தும் அடங்கின. அவன் நல்லறிவு, நலம் தீங்கு என்ற இரண்டையும் ஆராய முற்பட்டது. நல்லதன் நலனும் தீயதன் தீமையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்தான் மனிதன். மற்றவர் வாழத் தான் வாழ்தலே நலம்

பயக்கும் செயலென்றும். அல்லாதனவெல்லாம் தீமை பயக்கும் செயலென்றும் அறிவோடு கலந்த அவன் மனச்சான்று உணர்த்திற்று. எனவே, 'வையகமும் துயர் தீர்க' என்ற நல்ல அடிப்படையிலே அவன் வாழலானுன். அவ்வாழ்வே அவனுக்கு நல்லறிவையும், அவ்வறிவால் அனைத்தையும் கட்டியாளும் ஆற்றலையும் தந்தது.

அறிவு என்னும்போது இன்று உலகில் சாதாரணமாகத் தேர்வில் பெறும் எண்ணைக் கணக்கிட்டு அதை அளக்கும் நிலை வந்துவிட்டதை நாம் அறிவோம். வாழ்விற்குத் தேவையற்ற பல பாடங்களைப் படித்தோ படியாமலோ, எப்படியோ 'மார்க்குகள்' வாங்கும் இந்த ஓர் இழிநிலையைத் தமிழன் அறிவு என்று கொள்ளவில்லை. 'கற்றனைத்தூறும் அறிவு,' என்று வள்ளுவர் கூறியது உண்மைதான். ஆனால், கல்வி பலனற்ற வகையில் செல்வதை அவர் கூறவில்லை. 'கற்றபின் அதற்குத்தக நிற்கும்' கல்வியே அவர் காட்டிய கல்வி. 'துணியும் ஆயிரம் சாத்திரம் கற்கினும், சொல்லுவார் எள்துணைப் பயன் கண்டிலார்,' என்ற பாரதியாரின் வாக்குப்படியன்றே இன்றைய உலகக் கல்வி அமைகின்றது? அதனாலேதான் தமிழர் இந்தக் கவைக்குதவாக் கல்வியைக் கொண்டு அறிவை அளக்க விரும்பவில்லை. நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஆராய்ந்து செயலாற்றும் நன்முறையையே அறிவு அளக்கும் கருவியாகக் கொண்டனர். 'அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய, செறுவார்க்கும் செய்யா விடல்,' என்ற அடிகளிலே வள்ளுவர் நமக்கு உண்மை அறிவைக் காட்டுகின்றுர். தமக்கு மாறுபட்டுத் தீங்கிழைப்பார்க்குங்கூடத் தவறியும் தீங்கு செய்யா திருத்தலே அறிவு என்பது வள்ளுவரது உள்ளக்கிடக்கை. 'அறிவினுல் ஆகுவதுண்டோ பிறிதின் நோய், தன் நோய்போல் போற்ருக் கடை?' என்ற அவர் சொற்களும் அவ்வுள்ளக் கிடக்கையை வலியுறுத்துவன அல்லவோ!

ஆம்! அவ்வாறாய நல்ல அறிவு பெற்ற உள்ளந்தான் நல்லதையும் தீயதையும் பகுத்தறிய முடியும்.

நாட்டில் இப்போது நன்மை தீமைகளை ஆராய்வதை விட்டு வேறு பலவற்றைப் பகுத்தறிவதாகக் கூறிக் கொள்ளும் மாக்கள் இனம் பெருகிக் கொண்டே வருகின்றது. அவர்களை அணுகலாகாது என்று அன்றும் இன்றும் அறம் உணர்ந்த நல்லவர்கள் அறிவுறுத்திக் கொண்டேதான் வருகிறார்கள். "நல்லதன் நலனும் தீயதன் தீமையும், இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர்", என்று எச்சரிக்கின்றார் சங்ககாலப் புலவர் ஒருவர். எனவே, மனிதன் பெற்ற அறிவின் பயன் மற்றவர் வாழத் தான் வாழ்தல் என்பதில் முடிவதாகும்.

இவ்வாறாய பகுத்தறிவே மனிதனை மற்றவற்றின் தலைவனாக்கிற்று. அவன் தன் ஆய்வு உள்ளத்தால் உலக உயிர்களின் நன்மை தீமைகளை மட்டும் ஆராய்வதோடு நின்று விடவில்லை. ஐம்பூதங்களின் அசைவு அமைப்பு முதலியவற்றால் உண்டாகின்ற நலம் கேடு இவற்றை ஆராயத் தொடங்கினான். அந்த ஆராய்ச்சித் துறையில் சிறந்த விஞ்ஞான வளர்ச்சி இன்று அவனை ஐம்பூத ஆட்சியாளனாக்கி விட்டது. கடலைக் கட்டிக் காத்து, வான் வழிப் பறந்து, நிலம் அகழ்ந்து, நீர் குடைந்து, பல அற்புதச் செயல்களை ஆக்கும் அளவுக்கு மனிதன் முன்னேறிவிட்டான். மனிதன் முயன்றால் ஆகாத காரியம் ஒன்றில்லை என்று சொல்லும் அளவுக்கு அவன் முன்னேறிவிட்டானே?

ஆம்! அவன் முன்னேறிவிட்டது உண்மைதான். ஆனால், அதே வேளையில் அவ்வளவு முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் காரணமாகிய நல்லறிவை மறந்து தன் மனிதத் தன்மையை இழக்கும் அளவுக்கு அவன் முன்னேற்றம் சென்றுவிட்டது. 'மனிதன் மீனென

நீரிடை நீந்தவும், விலங்கென நிலத்தில் ஊர்ந்து செல்லவும், பறவை என வானிடைப் பறக்கவும் கற்றுக் கொண்டான். ஆனல், மனிதன் மனிதனுக மட்டும் வாழக் கற்றுக்கொள்ள வில்லை,' என்று ஒரு மேல் நாட்டுப் புலவர் கூறியவாறு, பிற துறைகளில் வளர்ச்சி அடைந்து வந்த மனிதன், தனக்கே இயல்பான—தேவையான—மனிதப் பண்பைப் பறிகொடுத்துவிட்டான். இந்த நிலையில் அவன் எங்கே சென்று கொண்டிருக்கிறன்?

மனிதன் நாள்தோறும் வளர்ச்சியடைந்து வருகின்றன் என்று அரியாதோர் கூறுவர். ஆனல். மனிதப் பண்பாடு உணர்ந்த நல்லவர்கள் மனிதன் உளத்தால் வளர்ச்சி பெறவேயில்லை என்றுதான் கூறுவார்கள். இயேசுவைச் சிலுவையிலறைந்த மனிதன்—மகமதுவைக் கல் வீசி வதைத்த மனிதன்—சாக்கிரட்டீசை விஷம் கொடுத்துக் கொன்ற மனிதன்—ஆம்—அந்த மனிதனே தான்—இன்று நம் கண் முன்னுல் அண்ணல் காந்தியடிகளையும் குண்டிட்டுக் கொன்றன். இதில் மனித முன்னேற்றத்தை எங்கே காண்பது?

மனிதன் விலங்கினத்திலிருந்து தோன்றினன் என்பது இன்றைய ஆராய்ச்சி. திருமாலது பத்து அவதாரங்களும் உயிர்த் தோற்ற வளர்ச்சியை விளக்க வந்தனவே என்பர் ஆராய்ச்சியாளர்; 'புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்' பின் பலவாய தோற்ற நிலைகளைத் தாண்டி, மனித நிலை பெற்றது உயிர் என்பர். அது உண்மையே. உடல் மனித உடலானுலும், உணர்வு மிருக உணர்வாகவே இருக்கிறது என்பதையே இன்றைய மனிதன் செயல்கள் காட்டுகின்றன. அனைத்தையும் கட்டியாளும் அறிவும் ஆற்றலும் பெற்ற போதிலும் மனிதனின் உள்ளம் அமைதி பெருத காரணத்தாலேதான் இன்றைய உலகில் கொடும் கொந்தளிப்பே காட்சி தருகின்றது!

உலகம் நன்கு வாழ வேண்டாவா ? வேண்டும். அந்த வாழ்வை வழங்கும் ஆற்றல் மனிதனிடத்திலேதான் இருக்கிறது. அனைத்துலகும் ஆளலாம் என்று தருக்குப் பேசி, அணுக்குண்டுகளும் பிற குண்டுகளும் செய்து குவிக்கும் இம்மிருக உணர்வுடைய மனிதன், தன்னையே சிறிது எண்ணிப் பார்ப்பானாயின், உலகம் உய்யும். தன்னினும் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற இறு மாப்பு நீங்கி, தன்னையும், தான் இயற்றும் பெருஞ்சாதனை களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்ல 'அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்' உள்ள ஓர் ஆண்டவன் நிலையினை அவன் எண்ணுவானாயின் உலகம் உய்யும். இந்தத் தன் உணர்வும் தலைவன் உணர்வும் கலந்த ஒன்றைத்தான் தெய்வ நெறி என்று சொல்லுவார்கள் நல்லவர்கள். ஆனால், மனிதன் இந்த நல்ல நெறியில் செல்லாது வேறு எவ்வழியிலோ சென்று கொண்டிருக்கிறானே !

தன்னை எண்ணும்போது தன்னை ஒத்த மனிதப் பிறவியை மட்டும் அவன் காண்பதன்றி, பிற உயிர்களின் தன்மையையும் நிலையையும் காணக்கூடும். 'நாம் பெற்ற இன்பம் வையகம் பெறுக' என்ற நினைப்புத் தோன்றும். அத்தோற்ற உணர்ச்சி மனிதனை விலங்குணர்ச்சி யிலிருந்து மீட்கும். தனக்கு மேம்பட்ட ஒருவன் உளன் என்ற எண்ணமே மனிதனது தருக்கை அழித்து, ஆண வத்தை யழித்து, அவனை மனிதனாக வாழச் செய்யும். எனவே, தன்னை உணர்ந்து தலைவனை அறியும் நல்ல மனிதன் செல்லும் நெறியல்லவா மனித இனம் பின்பற்ற வேண்டிய பெருவழி! ஆனால், மனிதன் அவ்வழியிலேயா செல்கிறான் ? வேறு எங்கேயோதான் அவன் நாட்டம் செல்கிறது.

தன்னை மறந்து, தன்னைச் சுற்றிய உலகை மறந்து, ஐம்பெரும் பூதங்களை மறந்து, அவைகளுக்கும் அப்பாற் பட்ட ஒன்றை மறந்து, மிருகமாகிக் கொண்டே மனிதன்

ஓடுகிறான். அவன் ஓட்டம் நீண்டுகொண்டே செல்கிறது. 'ஆசைக்கோர் அளவில்லை.' என்று தாயுமானார் கூறியபடி மனித உள்ளம் ஆசை பற்றி அல்லல் உறுகின்றது. அவ்வாசை மனிதனை மிருகமாக்கி, அவனை மட்டுமன்றி அவனைச் சேர்ந்தோரையும்—அவன் நாட்டையும்—ஏன்-உலகையுமே அல்லலுக்கு ஆற்றுப் படுத்துகின்றது. ஆம்! மனிதன் மிருக வாழ்வை நோக்கியே சென்று கொண்டிருக்கிறான்.

இன்றைய உலக நிலையைச் சிந்திப்பார் யாரும் இந்த முடிவுக்கு வந்து சேர்வார் என்பது உறுதி. அணுக்குண்டும் நீர் வாயுக்குண்டும் தயார் செய்து, அவற்றால் எவ்வளவு உயிர்களைக் கொன்று குவிக்க முடியும் என்பதிலேதானே போட்டி மிகுந்துள்ளது! தன் ஆய்ந்த அறிவின் திறனால் கண்ட விஞ்ஞான முடிவுகளை உயிர்களின் நல்வாழ்வுக்கான ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தாமல். அவலப் பணிக்குப் பயன்படுத்துவதுதானே இன்றைய மனிதப் பண்பு! விஞ்ஞானம் மெய்ஞ்ஞான வாழ்வுக்கு அடிப்படை என்ற உண்மையை உணர்ந்தால், மனிதன் மனிதனவானே! விஞ்ஞானம் அழிவுப் பாதைக்கே எனக் கணக்கிடும் இந்த மனித சமுதாயம், விரைவில் மாயா தொழியுமோ? அண்டகோளத்தின் ஆயுளில் ஒரு நொடியெனக் கருதும் இந்த மனித இன வாழ்வை முடிக்கத்தான் இந்த நூற்றாண்டில் இடைக்கால வல்லரசுகளெல்லாம் அடி கோலுகின்றன. ஆம்! வல்லரசுகளென்றால், அவற்றை ஆக்கும் மனிதன்தானே முன் நிற்பான்? எனவே, மனிதன் தன் இனத்தைத் தானே அழிக்கும் அழிவுப் பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றான். அவன் சிந்தை திரும்பின், நாடும் நானிலமும் வாழும்; நாமும் வாழ்வோம்.

வாழ வழி காட்டிய பேரறிஞர் உலகில் பலர்; பல சமய உண்மைகளும் வையகம் துயர் தீரவே

வழி காட்டியுள்ளன. அப்பரும் ஏசுவும், வள்ளுவரும் முகமதுவும், புத்தரும் காந்தியும் காட்டிய வாழ்க்கை வழியே மனிதனை மனிதனுக வாழ வைக்கும் வழி. மனிதன் – இன்னும் தன்னிலையிலிருந்து அடியோடு தவறிவிடாத மனிதன் - சற்று நின்று நினைத்துப் பார்ப்பின், அவர்கள் வரையறுத்த நல்வழி அவன் கண்ணுக்குப் புலப்படுமன்ருே? ஆனல், அவன் நிற்பதுமில்லை; நினைப்பதும் இல்லை. எனவேதான் அழிவுப் பாதையில் அவன் விரைந்து முன்னேறுகின்ருன். அவன் சற்று நிற்க வேண்டும் – நின்று நினைக்க வேண்டும் – என்பதே நம் விழைவு. நின்ருல் நலனுண்டு! அன்றேல், யாது நிகழும் என்பதை யாரே கூற வல்லார்!

# தசாவதாரம் ☆ ☆

விளக்கினை வரிசையாக ஏற்றி வைத்து விழாக் கொண்டாடிய மரபே இன்றைய தீபாவளிப் பண்டிகை யாக உருப்பெற்றது. (தீப+ஆவளி=தீபாவளி) 'தீபம்' என்பது விளக்கு, 'ஆவளி' என்பது வரிசை. எனவே, தீபாவளி என்பது விளக்கு வரிசைவழிக் கொண்டாடும் விழாவாகும். தமிழ்மக்கள் இதை 'விளக்கீடு' எனப் போற்றுவார்கள். தீபாவளியைச் சிறப்பாகக் கொண் டாடும் வட நாட்டவர் தம் வீடுகளில் வரிசையாக விளக்கேற்றி வைத்துகொண்டாடும் சிறப்பினை இன்றும் நாம் காண்கின்றோம்.

இவ்வாறான தீப ஆவளி திருமாலினது பத்து அவதா ரங்களுள் ஒன்றாகிய கிருட்டின அவதாரத்தோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. நாட்டையும் நலத்தையும் பாழ் படுத்திய நரகாசுரனைக் கண்ணன் கொன்ற நாளாக இதைக் குறிப்பர். கொடுமைகளின் பரிசாகிய சாவினை ஏற்ற நரகாசுரன், கண்ணனை நோக்கித் தன்னுளை உலக

மக்கள் என்றும் மறவாது கொண்டாட வேண்டிக் கொண்டானென்பதும், அவனது இறுதி வேண்டு கோளுக்கு இசைந்த கண்ணன் இந்நாளை விழா நாளாக ஆக்கினன் எனபதும் மரபு பற்றிய வழக்கு.

இங்குக் கொடியவனது விழைவுக்கும் அருள் செய்த அருளாளன் கண்ணனது பிறப்பினை எண்ணும்போது திரு மாலின் பிற அவதாரங்களும் நம் மனக்கண்முன் தோன்று கின்றன. அடியவர் அல்லல் நீக்க, காத்தற் கடவுளாகிய திருமால், அவ்வப்போது இவ்வாருன அவதாரங்கள் கொண்டார் என்பர் புராண நூலார். ஆய்வாளர்களோ, திருமாலின் பத்து அவதாரங்களும் உலகின் உயிர்த் தோற்ற வளர்ச்சியை விளக்கும் தன்மையன என்ற முடிபு காண்கிருர்கள். உயிர் மனிதனுவதற்கு முன்பு எத் தனையோ மாறுபாடுகளைப் பெற்றுப் 'புல்லாய்ப் பூடாய்ப் புழுவாய்ப்' பன்னெடுங்காலம் இருந்து, அறிவு ஒவ் வொன்ருய் நிறைவுற்றுப் பின் குறையற்ற மனிதனுகிய நிலையினையே இத் திருமாலின் தசாவதாரங்கள் விளக்கு கின்றன என்பர் அறிஞர். புராணங்களை வேண்டா வென்று கூறுகின்றவர்களுக்குங்கூட இவ்விளக்கம் பயன் தரும் என்பது உறுதி.

இவ்வாராய்ச்சிக்கு ஏற்பத் திருவாசகத்தில் மணி வாசகர், உயிராகிய தாம் பெற்ற நிலைகளை யெல்லாம் அடுக்கி அடுக்கிக் கூறுகின்ருர்.

**'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்!'**

என்று தம் உயிர் பெற்ற மாற்றங்களையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்துக் கூறுகின்ருர். இவர் தம் கூற்று,

தசாவதார ஆராய்ச்சிக்குத் துணையாய் அமைகின்ற தன்றோ ?

உயிர் உலகில் தோன்றி எத்தனையோ கோடி ஆண்டுகள் கழித்தே உலகில் மனிதன் உருப்பெற்றான் என்பது விஞ்ஞானங்கொண்டு ஆராயும் இன்றைய ஆய்வாளர்தம் முடிபு. இம் முடிபினைத்தான் மெய்ஞ்ஞான நெறியில் வாழ்ந்த அறிஞர்கள் அன்றே கண்டார்கள். உயிர் வெற்று அசைவுப் பொருளாக, ஒன்றும் அறியா நிலையில் பல காலம் இருந்து, பின் ஒவ்வோர் உணர்வாகப் பெற்று வளர்ச்சியுற்றதென்றும், ஐம்புலன்களால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் அறிவுகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பெற்றதென்றும், இறுதியில் அவற்றிற்கெல்லாம் மேலான பகுத்தறிவும் உட்கொண்டு முற்றிய மனித நிலை உற்றதென்றும் அறிந்தோர் கூறுவர். இக் கூற்றைத்தான் மேலே கண்ட அடிகளில் மாணிக்கவாசகர் அன்றே சொல்லிவிட்டுச் சென்றார். தசாவதாரம் பற்றி இன்றை அறிஞர்கள் கொண்டுள்ள கருத்தும் அதுவே யாகும்.

திருமால் என்று தனிப்பட்ட வைணவர் வணங்கும் கடவுள் மட்டுமன்றிப பிற சமயத்தவர் போற்றும் கடவுளரும் உயிரோடு கலந்து நின்ற உயர்ந்தவராகவே பேசப்படுகின்றனர். இறைவன் தொண்டருள்ளத்து அடங்கி நின்று அருள் புரியும் நெறியைப் பேசாத சமயம் உண்டோ? 'நீவேறெனா திருக்க நான் வேறெனாதிருக்க நேராக வாழும்' வரம் வேண்டும் அடியார்கள்தாமே எச்சமயத்தும் உள்ளவர்கள்? எனவே, உயிர்த்தோற்ற வளர்ச்சியைக் குறிக்க, அவைகளை ஆக்கி அளித்து அழிக்கும் ஆண்டவனையே முதல் நிலையாகக் கொண்டு, ஆராய்ந்து கண்ட முடிபினை விளக்குவதில் தவறில்லை அன்றோ? ஆம்: அந்த முடிபிலேதான் வளர்ச்சியின்

தோற்றத்தை இறைவனாகிய திருமாலின்மேல் ஏற்றிக் கூறினர் அறிந்தோர்.

உயிர் அசையும் பொருளாய் இருந்து, நெடுங்காலம் சென்று, அறிவுற்ற பொருளாய் மாறிய நிலை முதலில் நீரிலேதான் நிகழ்ந்ததென்பர் ஆய்வாளர். நீர் நிலத்துக்கு முன் தோன்றிய காரணத்தால் உயிர் நிலவாழ்வு பெறுமுன் நீர் வாழ்வு பெற்றிருக்க வேண்டுமென்பது அவர்தம் துணிபு.* ஆம்! அத் துணிவிலேதான் பத்து அவதாரங்களில் முதலிரண்டும் - நீர் வாழும் மீனும் ஆமையும் – குறிக்கப் பெறுகின்றன. மீனினந்தான் முதலில் தோன்றியது; பின்பு பல மாறுதல்கள் பெற்றுப் படிப்படி வளர்ந்த வகையில் வந்தது ஆமை. துடிப்பும் துள்ளலும் அச்சமும் ஆட்டமும் உள்ள முதல் உயிரினம் மீனினம் என்பதைக் குறிக்கவே, முதலாவது மீன் அவதாரம் அமைந்துள்ளது. மீனினத்திலிருந்து நூறாயிரம் ஆண்டுகள் கழித்து, பல மாறுதலுக்குப் பின், நீர் வாழ்வோடு நிலத்திலும் ஊர்ந்து செல்லும் காலத்தே ஆமையும் பிற உயிரினங்களும் தோன்றின. அவற்றின் நிலை குறிக்கவே அடுத்து ஆமை அவதாரம் வந்தது.

நிலம் திண்மையுற்று நெடுங்காலம் சென்ற பின்பே உயிர் வளர்ச்சியுற்று வந்திருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியின் முடிவு. அவற்றுள் நிலம் அகழ்ந்து உணவு தேடும் - ஆமையின் உயிர் அறிவுக்கு மேற்பட்ட அறிவு கொண்ட - பன்றியின் தோற்றம் அமைந்திருக்க வேண்டும். ஆகவே, ஆமைக் கடுத்த வராகாவதாரம் அந்த உண்மையை விளக்க வருகின்றது.

* SIR ALISTER HARDY (64), Oxford Professor of Zoology, has proposed a new theory of the origin of Man—that he was once a see ape.

—The 'Madras Mail' Dt. 7-3-1960

அடுத்து வருகின்ற நரசிம்ம அவதாரமே மனிதத் தோற்றத்தின் விடிவெள்ளி. அதற்கு முன்பு இராப்பகல் இன்றி, வீடு வாயில் இன்றி, ஆயுதங்கள் இன்றி, வேறு யாதொரு வேறுபாடும் இன்றி விலங்கினங்கள் வாழ்ந்த நிலையிலிருந்து பின் நெடுங்காலம் சென்று அனைத்துக் கட்டுக்காவல்களையும் அமைத்துக்கொண்ட மனித இனம் உருவான காலம் ஒன்றிருந்தது. விலங்கின உயிர் வாழ்வு, மனிதனது உயிர் வாழ்வு பெற இடையில் கழிந்த ஆண்டுகள் கணக்கில. அந்த இடைப்பட்ட காலத்து விளங்குணர்வும் மனித உணர்வும் - ஏன் ? - விலங்குடலும் மனித உடலும் - கலந்த ஓர் உயிர்த் தோற்றம் இன்றி நேரில் மனித உயிர்த்தோற்றம் அமைந்திராது என்பது உண்மை. அந்த விலங்கும் மனிதனும் கலந்த ஒன்றை விளக்குவதே நரசிங்க அவதாரம். எந்த வேறுபாடுமில்லாத விலங்கினத்திலிருந்து, வேறுபாடு காணும் பகுத்தறிவு நிலைக்கு மனிதன் வந்த வகையை விளக்குவதே நரசிங்க அவதாரத்தில் இரணியன் கேட்டதாகக் கூறும் வரம். எனவே, விலங்கின உயிர் மனித உயிரினமாக மாறிய கதையே அது.

மனிதன் தன் நிலை பெற்ற அந்தத் தொடக்கக் காலத்திலேயே அனைத்திலும் உயர்ந்து சீரிய ஒழுக்கம் பெற்று வளர்ந்துவிடவில்லை. அதற்குள் கழிந்த கற்பங்கள் பல. அந்த இடைக்கால நிலையை விளக்குவனவே அடுத்து வரும் வாமனாவதாரமும் பரசுராம அவதாரமும். அறிவும், அங்க அமைப்பும் ஒன்றற்கொன்று ஏற்றத் தாழ்வு பெற்றே அவன் ஆதி காலத்தே இருந்தான் என்பதை வாமனாவதாரத்தின் முன் பகுதியாகிய சிற்றுருவமும் பின் பகுதியாகிய பேருருவமும் உணர்த்துகின்றன, அவன் பின்னால் பெறப்போகின்ற அளக்கலாகா அறிவின் ஆற்றலைக்கொண்டு விண்ணையும் மண்ணையும் அளந்தறிந்து மேல் எங்கு அறிவைச் செலுத்துவது என்று எண்ண

மிடுவான் என்பதையன்றே மூவடிக்கதை உணர்த்து கின்றது? மிருகமும் மனிதனும் கலந்த நரசிங்கத்தன்மை மாறி முதலில் மனித உடல் பெற்றவன், தன் அறிவால் பின்னர் அத்தனையையும் அளக்கும் ஆற்றலும் இயல்பும் பெறுவான் என்பதைக் காட்டுகின்றது அந்த அவதாரம். பின்னர்ப் பெரிய ஆற்றலைப் பெற்று நின்றாலும், அவன் உள் ளத்தே மிருக உணர்ச்சிகளாகிய பழி வாங்குதல், தன் முனைப்பு, யாரும் சமமில்லை என்ற தருக்கு எல்லாம் நிரம்பியிருப்பின், அவன் எத்துணைவலிமை பெறினும் பயனில்லை என்பதை விளக்க வருவதே அடுத்த பரசுராம அவதாரம், பரசுபாணியாகித் தாயையே கொன்று, துன் பிழைத்த ஒருவனுக்காக, அவன் பரம்பரையையே கருவறுக்க வேண்டுமென்ற மிருக உணர்வு தலை காட்ட, நிலை கொள்ளாப் பெருவெள்ளம் போலச் சுற்றித்திரிந்தவ னல்லவா பரசுராமன்? அவனிடம் பூரண மனிதப் பண்பு பெறாத நிலையைத்தான் நாம் காண்கின்றோம். ஆம்! நற்பண்பும், பிறர் துயரைத் தனதாகக்கருதும் நிறைமனமு முடைய மனிதப் பண்பாளன் யாவனாயினும், அத்த கைய மிருக உணர்வோடு பலமும் பிறவும் பெற்ற ஒருவனை—அவன் எவ்வளவு வலிமை பெற்றவனாயினும்— அடக்க இயலும் என்பதையே இராமன் பரசுராமனை அடக்கிய வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. ஆம்! அனைத்து நலன்களும் நிரம்பி, மனிதன் மனிதனாகவே வாழ்ந்த ஒரு நிலையைக் காட்டுவதே இராமாவதாரம்.

மனிதன் மிருக உணர்வுக்கு மாறுபட்டு, தான் இன் புறுவது உலகின்புறக்கண்டு. அதற்கு மேலாக, மற்றவர் நலம் பெற்று வாழ்வதற்காகத் தன் உரிமைகளையும் இன்பங்களையும் விட்டுக்கொடுத்து, வையகம் துயர் நீங்க வாழ்வானாயின், அவனை வெல்வார் யார்? உலகையே உலுக்கிய பரசுராமனது மிருக வீரம், இராமன் முன் மண்டியிட்டு மறைந்தது! இராவணன் முதலியோரது

கொடுமை அழிந்தது! ஆம்! அந்த நினைவிலே நிறைந்த நல் உள்ளத்துடன் வாழ்ந்த மனிதன் முன் அனைத்தும் தாழ்ந்து அடங்கும். மனிதனது நிறைந்த நலங்களின் உச்சியில் நிற்கும் ஒரு நிலையினை உணர்த்துவது இராமவதாரம். அவன் மற்றவரால் குற்றம் காண இயலாத வகையில் வாழ்ந்த மனிதனது பிரதி பிம்பம். ஆனால், வாலியை மறைந்து கொன்றான் என்ற குற்றம் இராமன் மேல் உண்டு. கடவுளாகப் போற்றப்படினும் மனிதனாகப் பிறந்து நலங்கேடுகளை அனுபவித்த அவனுக்கு இக் குற்றம் கற்பிக்கப்படுதல் வியப்பன்று. இன்ப துன்பத்தின் இடையில் உழல்பவன் முற்றிய மனிதன். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் மனிதன். நாடெங்கும் வாழ நலம் நல்குபவன் மனிதன். அவன் தன் கடமை வழிச் செயலாற்றும் போது வழுக்கிடங்கள் இல்லாமல் இல்லை. கடமை உணர்ச்சி தவறாத நிலையே அவன் உயர்நிலை. இராமன் வாலியின் வலியறிவான். அவன் முயன்றால் அன்றைப் பொழுதிலே தன் மனைவியையும் பெற முடியும் எனவும் உணர்வான். தன் வாட்டம் உடனே அகலும் என அவன் உள்ளம் உணர்த்தியிருக்கும். ஆயினும், சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கிற்குக் கட்டுப்பட்ட கடமை உணர்வே, அன்றே மனைவியைப் பெறும் தன்னலத்தை மறந்து, தனக்கு நேரும் பழியையும் பாராது, மனித உணர்வோடு அவனைக் கடமையில் இறக்கியது. அக்கடமை பற்றியே, அன்னையும் தந்தையும் இட்ட ஆணைக்குட்பட்டுத் தனக்காக்கிய நாடு துறந்து காடு நடந்தான். ஆம்! தான் வாடினும் மற்றவர் வாழ வேண்டுமென்பது அவன் கருத்து, அக்கருத்து, நிறை மனிதனது சின்னம். எனவே, தசாவதாரத்தில் மனிதனது நிறைவுற்ற உச்ச நிலையை விளக்குவது இராமாவதாரம்.

அடுத்து வருகின்ற அவதாரங்கள் மனிதனைத் தோன்றிய இடத்திற்கே. படிப்படியாக அழைத்துச் செல்லும் நிலையை விளக்க வருவனவேயாம். இராமாவதாரத்துக்கு அடுத்துப் பேசப்படுவன கண்ணன், பலராம அவதாரங்களாகும். இரண்டும் மனிதன் தன் உயர்நிலையிலிருந்து சற்று வழுக்கி வீழ்ந்த நிலையையே காட்டுகின்றன. வஞ்சகமென்பதறியாது, தனித்து நின்ற இராவணனை 'இன்று போய் நாளை வா,' என்ற இராமனது மனித உள்ளத்துக்கும், மறையாத சூரியனை மறைத்து மாயம் செய்தும், வாங்க முடியாத கவச குண்டலங்களை வாங்கியும், கொல்ல முடியாதவனைத் துரும்பு மாறிப்போட்டுக் காட்டி வஞ்சித்துக் கொன்றும் நின்ற கண்ணனது மனித உள்ளத்துக்கும் இடையிலுள்ள மாறுபட்ட நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிக் கூறுவதால், கண்ண பலராம அவதாரங்களைப் பழிப்பதாக நினைக்க வேண்டா. திருடனைப்பற்றிக் கூற வேண்டியவன் அவனைப் பற்றி நன்கு விளக்கித்தானே ஆக வேண்டும்? அது போன்றே உயிர்த்தோற்ற வளர்ச்சி பற்றிக் காட்ட வேண்டின் அது செல்லும் நிலையினையெல்லாம் காட்டித்தானே ஆகவேண்டும்? ஆகவே, சிந்தையால் தீமை தீண்டாத நல்ல உயர்ந்த மனிதனது உயிர் நிலை பின் வழுக்கி மிருக நிலைக்குச் செல்லும் வழியில் உள்ள முதல் படியைக் காட்ட வருவன இந்த அவதாரங்கள். 'வஞ்சனைக்கோர் கொள்கலமாம் கொடிய பாவி' என்று துரியோதனன் வாக்கிலும், 'இமையோர்கள் வல்விரகில் யார் வல்லாரே!' என்று கருமன் வாக்கிலும் வில்லிப்புத்தூரார் கூறிய உண்மைகள் இது பற்றியவையல்லவோ? பகைவனுயினும் வந்து பணியின் உடன் பிறப்பாளனுக ஏற்கும் உயர்ந்த மனித உள்ளம்படைத்த இராமனுக்கும், உடன்பிறப்பாளன் அஞ்சி ஓடிய போதிலும் பிடித்திழுத்து அவனைக் கொல்வது நீதியென்று

கூறிய கண்ணனுக்கும் வேறுபாடு இல்லையென்று யார் சொல்லக் கூடும்? ஆம்; அதில் கண்ணன் தவறொன்று மில்லை, அந்த அவதாரம் மனிதன் மிருகமாக மாறும் நிலையின் முதற்படியாகும். உருவத்தாலும் உள்ளத் தாலும் மிருகமாய் இருந்த உயிர், உருவம், உள்ளம் இரண்டினும் உயர்ந்த ஒழுக்கச் சீலந்தாங்கிய மனித னுயிற்று. மனிதன் பின் மனித உருவத்தோடு மிருக உள்ளம் வாய்க்கப் பெற்றுள்ளான். இன்றைய மனிதன் உள்ளத்தால் மிருகமானுன் என்பதில் இழுக்கென்ன? ஆங்கில அறிஞன் ஒருவன் மனிதனைக் குறிக்கும் காலத்து, 'மனிதன் பறவை எனப் பறக்கவும், விளங்கென ஊரவும், மீனென நீந்தவும் பயின்ருன்; மனிதனுக மட்டும் வாழக் கற்றுக்கொள்ளவில்லை,' என்று கூறியது உண்மை யன்ருே! ஆம்! எப்படியாவது மற்றவர்களை ஏமாற்றி வஞ்சித்துக் கொன்று தான் மட்டும் வாழ வேண்டுமென்று கருதுவது மிருக உணர்ச்சியன்றி வேறென்ன? 'எல்லா ரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேருென் றறியேன் பராபரமே!' என்ற மனித உள்ளமும், 'மறந் தும் பிறன்கேடு சூழ்க!' என்ற மனிதப் பண்பாடும், 'பகைவனுக் கருளும்' பண்பட்ட உணர்வும் இன்று மாறி மறைந்து வருகின்றன வல்லவா? அதைப்போன்றே தனிப்பட்ட நல்லொழுக்கங்களிலும் மனிதன் தவறிவிட் டான். இவைகளை யெல்லாம் கண்ணன் அவதாரம் நமக் குக் காட்டுகிறது. இதனுலேதான் போலும் கண்ணனை வழிபடுகின்ற அடியவர்களெல்லாருங்கூட, அவனது முதுமை நிலையில் கருத்து வையாது, கள்ளங் கொள்ளாப் பிள்ளை உருவில் அன்பு கொண்டு போற்றுகின்ருர்கள்! குழந்தைக்கண்ணன் மக்கள் மனத்தில் குடிகொண்ட அள வுக்கு முதுமைக் கண்ணன் இடம் பெறவில்லை என்பதை அறியாதார் யார்!

அடுத்து வருகின்ற பலராம அவதாரமோ, ஆக்கப் பணிக்குப் பயன்படுவனவற்றைத் தன் வலிமையினுல் அழிவுத் துறைக்குப் பயன்படுத்தும் இன்றய மனித சமுதாயத்தின் எதிரொலி. விஞ்ஞான வளர்ச்சி, அணுச் சக்தி முதலியனவும் ஆக்கத் துறைக்குப் பயன்பட்டால் மனிதன் பல வகையில் வசதி பெற்று வாழ்வான். ஆனுல், அவற்றைக்கண்டு வளர்க்கும் ஆய்வாளர்கள், அவ்விஞ் ஞான அறிவையும், அணுச்சக்தி முதலியவற்றையும் அழிவுத் துறைக்கன்றே பயன்படுத்துகிறுர்கள்? இதைத் தான் திருமால் பலராமனுய் வந்து உணர்த்துகிறுர். மக்களுக்கு இன்றியமையாத வாழ்வின் தேவையான உணவளிக்கும்—உயிர்வாழ்வளிக்கும்—அந்த உயர்ந்த கலப்பை என்னும் ஆயுதம், பலராமனது வலிமிகுந்த கையிடை மற்றவரைக் கொன்று குவிக்கும் ஆயுதமாய் அமைகின்றது. அவன் தனது எதிர்ப்பாரற்ற ஆற்றலைக் கொண்டு பல ஆக்கப் பணிகள் ஆற்றியிருக்கலாம், அணுச்சக்தியால் பலனுற்ற பணிகள் ஆக்கலாம் என்று இன்று கூறுவது போன்று. ஆனுல், அழிவு கருதும் போதுதான் அவன் கலப்பை பேசப்படுகிறது. முடிவாகச் சொல்லவேண்டுமானுல், இரண்டாக இணைந்த கண்ண பலராம அவதாரங்கள் இன்றைய மிருக உணர்வோடு கூடிய மனித இனத்தின் உயிர் வளர்ச்சியைக் காட்டுவனவேயாம்.

அடுத்து என்ன? இப்படி உய்யும் மனிதன் மிருகமாக மாறிய பிறகு, இந்த மனித இனம் திரும்பி நலம் பெற வழியே இல்லையா? பூதக் கதைகளைச் கேட்டிருக் கிறேம். மற்றவர்களைக் கொல்ல ஏவிய பூதங்கள், பகைவரைக் கொன்று பசி தீராமல் திரும்பிவந்து, அனுப்பியவரையே கொல்லுகின்ற கதைகள் நாட்டில் ஏராளம். இன்று பஞ்சபூதச் சேர்க்கைகளால் ஆக்கப்படுகின்ற அணு ஆயுதம் போன்ற ஆயுதங்கள், பகைவரை மட்டு

மன்றி, அனுப்பியவர்களையும் சேர்த்து ஒரு சேரக் கொன்று, யார் நிறுத்தினும் நில்லாது உலகெங்கும் சுற்றிப் பெரும் பிரளயங்களை உண்டாக்கி, மனிதப் பூண்டே இல்லாது—உயிர்வர்க்கமே-இல்லாது ஒழிக்கும் என்பதுஉண்மை. இதை உலகில் இப்போது நடை பெற்றுவரும் அணுகுண்டு முதலியவற்றின் சோதனைகள் ஓரளவு உணர்த்துகின்றன. இவ்வுண்மையை விளக்க வருவதுதான் ‘கல்கி’ அவதாரமாகிய இறுதி அவதாரம். யார் தடுத்தாலும் நில்லாது, மனம்போனபோக்கிலே, அடக்க முடியாத வேகத்தே, மிருக உருவோடு உணர்வும் கொண்டு, அனைத்தையும் அழித்துப் பெரும்பிரளயத்தை உண்டாக்கி, அதன் மேல் ஓடும் ‘கல்கி’ அவதாரம் காட்டும் காட்சிதான் இன்றய மனித இனம் பெறப் போகின்ற இறுதிக்காட்சி. எத்தனை **யு. என். ஓ.**க்கள் தோன்றினலும், மனித உடலில் உள்ள மிருக உணர்ச்சியை--பேராசையை—அடக்க முடியாது. அது வெறி பிடித்து, உண்டாக்கினவனே அடக்க முயன்றாலும் அடங்காது ஓடி உழன்று உலகை அழித்து, அனைத்தினுக்கும் அடங்காது ஓடி. பூதத்தோற்றத்தில் படிப்படியே ஒன்றி லொன்று அடங்கி, இறுதியில் வெளியாகி மறைந்துநிற்கும். இக்கூற்று, கேட்போர்க்கு வேடிக்கையாகத் தோன்றும். ஆனல், இன்றைய மிருக உணர்வு கொண்ட மனிதன் செல்லும் நெறி, அத்தகைய கொடிய இறுதி நாளுக்கே இவ்வுலகை ஈர்த்துச் செல்லுகின்றது. இன்றைக்கும் காலம் கடக்கவில்லை. மனிதன் ஓடாது, பறவாது, உட்கார்ந்து, மனித உள்ளத்தோடு ‘நாடெங்கும் வாழ’ நல்வழி உண்டு என்று சிந்திப்பானயின், உய்வுண்டு. ஆனல், அவன் சிந்திப்பதேது? இது நிற்க.

‘தீபாவளி தமிழருக்கு உடன்பாடு அன்று,’ என்று கூறுபவர்களும் உள்ளனர். எப்படியாயினும், இந்நாளில் அதனெடு தொடர்பு பெற்றுள்ள கண்ணனை நினைக்

கும் போது, பிற அவதாரங்களும் நம் மனக்கண்முன் வருகின்றன. அவதாரங்கள் தோன்றினவோ, அன்றிக் கற்பனையோ, எப்படியாயினும், அவற்றின் அமைப்புகள் இவ்வாறு உயிர்த்தோற்ற வளர்ச்சியை உணர்த்துகின்றன என்று கொள்வதில் தவறு இல்லையே!

இவ்வாறு திருமாலின் அவதாரங்கள் உயிர்த்தோற்ற வளர்ச்சி ஒடுக்கங்களை விளக்குகின்றன. அந்த அவதாரங்களில் ஒன்ருன கண்ணனைப் போற்றும் தீபாவளி நாளின் போது எழுந்த கட்டுரை இது. எனவே, இந்த நாளில் மனிதனை மனிதனுக வாழவைக்க முயல்வோம் என்று மக்கள் அனைவரும் உள்ளத்தால் எண்ணுவார்களாயின், அவர்தம் வீடுகள் மட்டுமன்றி, உள்ளங்களும் நல்லெண்ண விளக்குகளால் ஒளி வீசும்! அத்தகைய உள்ளொளி வீசுவதே விழாவின் அடிப்படை. மனிதப் பண்பாடு. நல் ஒளி பரந்துநானிலம் வாழ்க என வாழ்த்தி நாமும் இக்கட்டுரையை முடிக்கின்ரேம்!

# எது கலாசாரம் ?

இரண்டு வாரங்களுக்கு முன் சென்னையில் கலாசாரச் சுதந்தர மாநாடு ஒன்று நடைபெற்றதை யாவரும் அறிவர். 'கலாசாரம் என்பது என்ன ? அதற்குச் சுதந்தரம் உண்டா இல்லையா ?' என்பன போன்ற பல பொருள்கள் ஆய்ந்து பேசப்பட்டு விவாதிக்கவும் பட்டன. அம்மாநாட்டின் வரவேற்புத் தலைவர் அவர்கள் பண்டைத் தமிழர் கலாசாரத்தைத் தொட்டுக் காட்டி, 'யாதும் ஊரே ; யாவரும் கேளிர்,' என்ற உண்மையை உணர்த்தினார்கள். திறந்து வைத்த முதன்மந்திரியார் அவர்கள் மன அடக்கமே கலாசார அடிப்படை என்பதைக் குறித்துக் காட்டினார்கள். தலைமை வகித்தவரும் பொறுமை, நல்லெண்ணம். அன்பு, உலகை உணர்ந்து உற்றுழி உதவுதல் ஆகியவற்றின் அடிப்படையிலேதான் கலாசாரம் அரும்பும் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். இவர்களுடைய அருங்கருத்துக்கள் பொன்னே போலப் போற்றக் கூடியனவேயாம்.

கலாசாரம் என்பது, ஏதோ ஏட்டில் எழுதி வைப்பதன்று; பாட்டில் பாடப்படுவதன்று. அது நாட்டு வாழ்க்கையில்—மனிதப் பண்பில்—மலர்வது. காட்டில் வாழும் மிருக உணர்ச்சிக்கும் நாட்டில் வாழும் மனிதப் பண்பாட்டிற்கும் வேறுபாடு காட்டத் தோன்றுவதே கலாசாரமாகும். மனிதன் மனிதனாக வாழவேண்டுமே யன்றி, மனித யந்திரங்களாகவோ, மிருகங்களாகவோ வாழலாகாது என்பது தலைவர்கள் காட்டிய உண்மை. மனிதன் மனிதனாக வாழ்தலே கலாசாரம். அக்கலாசார அடிப்படை பற்றியே 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்ற கணியன் பூங்குன்றனாரது கருத்தும் எழுந்தது. உலக உயிர்களெல்லாம் ஒன்று என்று எண்ணும் கலாசாரம் மலர்வதற்கு அப்பேராசிரியரே வழியும் காட்டியுள்ளனர். 'யாதும் ஊரே' என்ற அடியினை ஒட்டி வரும் பிற அடிகளும் நினைத்தற்பாலனவே.

**'யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா ;**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;**
**சாதலும் புதுவதன்றே ? வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்று மிலமே ; முனிவின்**
**இன்னா தென்றலும் இலமே.'**

என்று கூறிப் பின் வாழ்வுப் பாதை செல்லும் வழியையும் காட்டுகின்றார் புலவர். உலகமே சிறந்த சோலையாகக் கொண்டு, அதில் வாழும் வேற்றுமை யற்ற உரிமைப் பறவையாக மனிதன் விளங்க வேண்டுமென்பதே அவர் தம் குறிக்கோள். அதைத்தான் 'யாதும் ஊரே ; யாவரும் கேளிர்' என்று காட்டினார். பின் அந்த நிலை பெற வழியினையும் அவரே வகுத்துக் கொடுக்கின்றார்.

மனிதப் பண்பாடு மற்றெவற்றினும் மேலானது. அந்தப் பண்பாடுதான் அவனை மிருகத்திடையிருந்து வேறு பிரிக்கின்றது. அவ்வேறுபாட்டினாலேதான் அவன்

நல்லதன் நலனும் தீயதன் தீமையும் அறியும் ஆற்றல் பெறுகின்றான். ஆம்! அவற்றின் வேறுபாட்டை அறிந்து அவற்றின் பிறப்பிடம் காணும் நிலையிலேதான் அவன் பண்பாடு உச்ச நிலையை அடைகின்றது. அவற்றை யெல்லாம் தொகுத்துக் கணியன் பூங்குன்றனார் சில அடிகளில் நம் உளங்கொள நமக்கு விளக்குகின்றார்.

மனித வாழ்வில் நன்மையும் தீமையும் நிறைந்துள்ளன; வயாவும் வருத்தமும், சோர்வும் தளர்ச்சியும், அவற்றின் நீக்கமும் அமைந்துள்ளன. செத்துமடிதலும் யாரும் தடுக்க முடியாத ஒன்றாகியுள்ளது. வாழ்வின் இனிமையும், இன்னாமையும் வெளிப்பட்டுக் காண்கின்றன. இவையெல்லாம் கலந்ததே வாழ்க்கை என்று கூறலாம். இவற்றை ஏற்று அமைதி பெறும் நல் உள்ளமே பண்பட்ட உள்ளமாகும்.

இன்பம் வருங்கால் தன்னை மறந்து தருக்கி வாழ்தலும், துன்பம் வருங்கால் அத்துன்பம் பற்றி நொந்து வாடுவதோடு, அத்துன்பம் வரக் காரணமாயிருந்த மற்றவர்களைத் தேடிப் பதிலுக்குத் துன்பம் செய்தலும் இன்று மனிதன் வாழ்வின் கொள்கைகளாய் உள்ளன. பிறருக்குத் துன்பம் இழைத்து அவர் வாடத் தான் மகிழும் அளவுக்கு மனிதன் மிருகமாகி வருவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இந்த மிருகத்தனம் எந்தக் கலாசாரத்தையும் இல்லையாகச் செய்யும். ஆனால், சற்று மனித உள்ளத்தோடு பூங்குன்றனார் தம் பொன் எழுத்துக்களை ஏட்டிலன்றி மனத்தில் எழுதிப் பார்த்தால், எது கலாசாரம் என்பது விளங்கும், இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்வில் அவ்வின்ப துன்பங்கள் யாரால் உருப்பெறுகின்றன என்பதைக் காட்டுகின்றார் அவர். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா,' என்ற அடியால் ஒவ்வொருவரும் பெறும் தீமையும்

நன்மையும் அவரவரே தேடிக்கொள்வதால் உண்டா வனவே என்கின்றார். ஆம்! மனிதன் மனிதனாக வாழ்ந் தால் இந்த உண்மை நன்கு புலப்படும். தான் வாழும் விதத்தாலேயே ஒருவன் தனக்கு நன்மையையோ தீமையையோ தேடிக்கொள்ளுகிறான். மற்றவரை ஒத்து நோக்கும் வாழ்வில் நன்மையன்றித் தீமை உண்டோ? 'தானே' என்று தருக்கி வாழும் சுய வாழ்வில் தீமை யன்றி நன்மையுண்டோ? இப்படித் தானே வரவழைத்துக் கொள்ளும் நன்மை தீமைகளுக்கு மனிதன் மற்றவர்களைக் காரணமாகக் காட்டி அவர்கள்மேல் மனத்தைத் திருப்பி மிருகமாகிறான். நன்மை தீமைகளை ஒத்தனவே நோதலும் தணிதலும் என்கின்றார் அப்புலவர். அவற்றிற்கெல்லாம் மேலாகச் சாக்காட்டைப் பற்றிப் பேசும் அவர்தம் பேச்சு உள்ளத்தைத் தொடுவதாகும். 'சாதலும் புதுவ தன்றே?' என்ற சிறு தொடர் எவ்வளவு தூரம் மனிதனை ஈர்த்துச் செல்கின்றது! துன்பத்திலெல்லாம் மிகக் கொடிய துன்பம் சாக்காடு. அச்சாக்காட்டைப்பற்றி எண்ணி எண்ணி வாடுபவரே யாவரும். எங்கோ சிலர் உழைத்து உடம்பின் பயன் கொண்டு, கூற்றம் வருங்கால் வருந்தாதிருப்பர். அந்தக் கொடுஞ் சாக்காட்டைத்தான் எவ்வளவு எளிமையாக்கிவிட்டார் அவர்! உண்மையும் அப்படித்தானே? சாக்காடு நாள்தோறும் நடக்கின்ற நிகழ்ச்சி. இறப்பு, தோன்றிய நாள் தொட்டுத் தொடர்ந்த ஒன்று. அதைப் புதிதாக எண்ணி அதனால் வாடுவது எவ்வளவு பேதைமை! வாடுவதை விட்டுச் சாதல் உறுதி என்று உணர்ந்து, அதற்கு முன் மனிதனைப் பிறந்த பயனைச் செய்து வாழ்தலன்றோ பண்பாடு என்று சுட்டிக் காட்டுகின்றார் புலவர். மற்றும், இனிமைக்கு மகிழ்தலும் இன்னாமைக்கு முனிதலும் கலாசாரமோ பண்பாடோ ஆகாது என்பது அவர் கொள்கை. வள்ளு வனார் 'இடுக்கண் வருங்கால் நகுக,' என்றார். ஆம்.

துன்பத்தில் புன்சிரிப்பு—துயரத்தின் நடுவில் உள்ள மகிழ்ச்சி. ஏன்?—துன்பத்தால் உள்ளத் தூய்மை வெளிப்படுமாதலால். ஆகவே, உயர்ந்த மனிதப் பண்பாட்டில் எவ்வித வேற்றுமையும் இடம் பெறுது. அனைத்தும் ஆன்றன என்ற உணர்வில் அது சிறக்கும். அத்தகைய அருநிலை எங்கு உளதோ, அங்குக் கலாசாரம் அரும்பிப் பூத்துக் காய்த்துக் குலுங்கிக் கனியாகிக் காட்சி அளிக்கும்.

அத்தகைய கலாசாரத்தில் மனிதன் மற்றவனை ஆராய்வதை விடுத்துத் தன்னைத்தானே ஆராயத் தொடங்குவான். எவ்வளவு உயர்ந்தவனுயினும், அன்றித் தாழ்ந்தவனுயினும், தன்னை உள்ளூற உணர்ந்தவனே பண்பாடு பெற்றவன். 'தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்,' என்பது ஒரு சமயப் பழமொழி. எனவே, தன்னை அறிதல் எல்லாத் தீமைகளின் நீக்கத்துக்கும் முதலிடமாகின்றது. அதுவே கலாசாரம்!

கலாசாரம் என்பது நல்லொழுக்கத்தின் அடிப்படை என்ருர்கள். அக்கலாசாரம் தன்னை மட்டுமன்றித் தரணியையும் வாழ வைப்பதாகும். ஒருவனை மட்டுமின்றி உலகையும் வாழ வைப்பதாகும்; 'மறந்தும் பிறன்கேடு சூழற்க,' என்ற வள்ளுவர் வாக்கு அக்கலாசாரக் கட்டடத்தின் அடிப்படை. தான் கெடினும் தக்காருக்குக் கேடெண்ணு வாழ்வு கலாசாரவாழ்வு; தான் என்ற தருக்கன்று, யாவரினும் தான் மேலானவன் என்ற எண்ணமின்றி, அனைவருக்கும் தான் தொண்டு செய்தலே கடன் என்று கருதி பணியாற்றுபவனே உண்மையில் கலாசாரப் பண்பாட்டாளனுவன். தான் மற்றவரைப் பழிக்காதோ மற்றவர்களுக்குக் கொடுமை செய்யாதோ, மற்றவரைக் கெடுக்காதோ வாழ்கின்றவன் கொண்ட வாழ்வு ஓரளவு பண்பாடு கலந்த கலாசார வாழ்வு என்ருலுங்கூட, தமிழ்

நாடு அதனினும் மேம்பட்ட கலாசார வாழ்வை விளக்கு கின்றது. தான் மற்றவரைப் பழித்துரைப்பதிலும் தன்னை மற்றவர் பழிக்காத வகையில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தான் மற்றவரைக் குறை கூறுதிருப்பதைக் காட்டிலும் தன்னை மற்றவர் குறை கூறுதிருக்கும் வகையில் தான் நடந்துகொள்ள வேண்டும். இப்பண் பாட்டைத் தமிழ் நாட்டுக்கே தலைசிறந்த ஒன்றாக விளங்கும் கற்பின்மேல் ஏற்றிப் பேசுகின்றார் ஒரு புலவர்.

கற்பென்பது, ஒரு பெண் கொண்டவனைத் தவிர மற்றொருவனையும் விரும்பாத நிலையில் அமைவது என்று தான் கூறுவார்கள். ஆனால், சாத்தனாரோ, 'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்,' என்கின்றார். அக்கற்பென் பது தன் மனத்தளவினன்றிச் செயலளவிலும் அமைய வேண்டுவதென்பது அவர் கருத்து. மற்றவர் தன்னைக் கண்டு மனத்தாலும் காமுறாத வகையில் நடந்துகொள் வதே கற்பாகும் என்று காட்டுகின்றார் அவர். ஆம்! இக் கற்பு நெறி பற்றிக் கூறியது பிற பண்பாடுகளுக்கும் பொருந்தும்.

எனவே, கலாசாரம் என்பது, தன் சொல்லளவி லன்றிச் செயலளவில் முகிழ்ப்பதாகும். ஒருவரும் தன் மேல் குறை கூறாதபடி தன் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும். எல்லாம் செய்யவல்ல காரணத்தால் உலகில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனத் தருக்கி வாழ்தலும், ஒன்றுமில்லை என்று சோம்பி வாடுதலும் நீக்க வேண்டுவனவாம். அது போன்றே, சுற்றுச் சார்பு களாலும் பிற வசதிகளாலும் சிறு செயல்களைச் செய்த வரைப் பெரிதாக மதித்துப் பேசுதலும், வசதியற்று ஒன்றும் செய்யமாட்டாதவரை இகழ்தலும் கலாசார மாகா என்பதைப் பூங்குன்றனார் இறுதியாகக் கூறு கின்றார். அதன் அடிப்படையை ஆராய்ந்தால், ஓர்

உண்மை புலப்படாமல் போகாது. வீண் புகழ்ச்சியும் கர்வமும் மற்றவர்களுக்குப் பொறாமை உணர்ச்சியே ஊட்டுவனவாகும். எந்தத் துறையிலும் இந்தப் பொறாமை உணர்ச்சியே மனிதனை மிருகமாக்கி விடுகிறது. இந்த மிருக உள்ளம் வளருமாயின், நாட்டில் பண்பாடோ கலாசாரமோ எவ்வாறு தலை தூக்க முடியும்? இவற்றை யெல்லாம் எண்ணித்தான் போலும் கணியன் பூங்குன்றனார், 'மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே,' என்று இறுதியில் திட்டமாகக் கூறுகின்றார். ஆம். ஒருவரை உயர்த்திக் கூறுவதைக் காட்டிலும் மற்றவரைத் தாழ்த்திக் கூறுதல் மிகவும் கொடியதாகும் என்பதைத்தான் 'சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே,' என்று எடுத்துக் காட்டுகின்றார் பூங்குன்றனார். எனவே, அவரவர் திறனுக்கும் தகுதிக்கும் சார்புக்கும் ஏற்ற வகையில் பணியாற்றுவதை உயர்த்தியோ தாழ்த்தியோ கூறாது, தன்னை அறிந்த காரணத்தால் தரணியை அறிந்து, அவ்வுலகுக்கு உற்ற இடர் தீர்க்க மற்றவர்களுக்கு உதவி, மறந்தும் மற்றவர் தன்னைப் பற்றித் தாழ்வாக நினைக்காது நோக்கும் வகையில் பணியாற்றி வருவதை ஏற்று நின்று, எல்லாரும்—உயிர்கள் யாரும்—யாவும்-இன்புற்று வாழ வழி வகுத்தலே கலாசாரமாகும். அதுவே, பண்பாடு. அந்நிலை பெற மனித உள்ளம் பெற்றவர்கள் கூடிப் பணியாற்ற வேண்டும். அவர்கள் வழிப் பாரெல்லாம் இன்பம் நிறைய வேண்டும். அந்த இன்பம் நிறைந்து சமரசம் நிலவும் நாள் என்நாளோ!

# தமிழன் ஒரு சமரச ஞானி ☆

உலகம் தோன்றி எத்தனையோ கோடி ஆண்டுகள் கழிந்துவிட்டன. உலகத்தின் நிலையும் அதில் இயங்கும் உயிர்ப்பொருள் அமைப்பும் அடிக்கடி மாற்றம் பெற்று வருகின்றன. எத்தனையோ உயிர்த் தோற்றங்கள் நிலை மாறிக் கெட்டும் உறழ்ந்தும் பிறழ்ந்தும் இன்றைய நிலையில் உலகம் இயங்குகின்றது. நீரும் நிலமும் மாறி மாறி ஒன்றிலொன்று விஞ்சி உண்டாக்கிய ஊழிகள் பல. அவ்வூழி தோறும் மறைந்தும் தோன்றியுஞ் சிதைந்தும் நின்ற உயிரினங்கள் எண்ணில.

இன்றைய உலகந்தான் இன்று போலவே இயங்கும் என்று சொல்ல இயலுங்கொல்! விஞ்ஞானக் கண்கொண்டு ஆராயும் ஆராய்ச்சியாளர்கள் எதிர்காலத்தே இவ்வுலகமும் இதைச் சுற்றிப் பரந்துள்ள வானமுகட்டில் நிலவியுள்ள பல கோளங்களும் எவ்வெவ்வகையில் மாற்றமுறுமென்பதை ஆராய்ந்து எழுதிக்கொண்டேயிருக்கின்றார்கள். அவர்தம் ஆராய்ச்சிகளெல்லாம் நில்லாது விரிந்துகொண்டே செல்லும் என்பது உறுதி.

நெடுங் காலத்திடையில் பட்டுழன்றுவரும் இந்த அண்ட முகட்டில் இவ்வுலகம் ஓர் அணு. இதன் காலமும் மிகக் குறைந்த—நொடிப் பொழுதோ எனத்தக்க—ஒன்று. இதில் இன்றைய மனித இனம் இன்றிருக்கின்ற நிலையிலும் அமைப்பிலுந்தான் முன்னும் இருந்தது என்று எண்ணமுடியாது. ஆராய்ச்சியாளர்கள் மனிதன் குரங்கிலிருந்து முகிழ்த்தான் என்று எழுதுகின்றனர். நிலத்தில் வாழும் உயிரினத்துக்கு வழிகாட்டியாக உள்ளவை நீரில் வாழ்வனவே என்ற கூற்றும் மெய்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வாறு அண்டகோளத்தில் ஆயுட்காலத்தின் ஒரு நொடிக்கும் குறைந்த காலத்தில், அணுவுக்கும் உள்ளடங்கும் ஒரு சிறு இடத்திலே உள்ள இந்த உலகத்தில் வாழும் மனிதன், தானே அனைத்தினும் உயர்ந்தவன் என்ற தருக்குக் கொண்டு தரணியினைக் கட்டியாளும் கொடுமைகளை யெல்லாம் செய்யத் துணிவுகொண்டு திட்டம் தீட்டுகிறான். அந்தோ! அவன் சற்று நின்று நினைத்துப் பார்த்தால், தன் செயல் எத்தனை அறிவுக்குப் புறம்பான மடமை நிறைந்த தென்பதை உணர்வான்.

உயிரினங்கள் தோன்றிய அந்த நாளிலிருந்தே ஒன்றை ஒன்று கொன்றும் தின்றும் வாழ்கின்றன என்பதை வரலாறு காட்டுகின்றது. சிறியதைப் பெரியது தின்று இன வளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பலவினங்களை இன்றும் நாம் காண்கின்றோமே! மீன்களே இந்த நிலையிலேதான் வாழ்கின்றன என முடிவு காண்கின்றனர் ஆராய்ச்சியாளர். ஊர்வனவும், பறப்பனவும், நடப்பனவும் தம்முள் மாறுபட்டு ஒன்றை ஒன்று மாய்த்து வாழும் நிலை நாம் அறிந்த ஒன்றுதானே! ஆனால், மனிதன் அவற்றிலிருந்து வேறுபட்டவனாகின்றான். 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்' ஆராய்ந்தறிந்து, தான் கெடினும் மற்றவருக்கு நல்லதையே செய்ய வேண்டும் என்ற பகுத்தறியும் உணர்வோடு வாழ வேண்டியவன் மனிதன்.

ஆம்! இதைத்தான் எல்லாச் சமயத்தவர்களும் எல்லா நாட்டவர்களும் எல்லாக் காலத்தவர்களும் என்றென்றும் சொல்லி வருகின்றனர். ஆனால், அவன் அப்படி வாழ்கின்ருனு? வாழவில்லை என்பதை வரலாறு காட்டுகின்றது. ஏன் இந்த நிலை?

மனிதன் இன்று மட்டுமன்றி, தோன்றிய நாளிலிருந்தே 'தான்' என்ற முனைப்போடும் சுய நலத்தோடுந்தான் வாழ்ந்தான் என்பது வெளிப்படை. எனினும், அம்மனித இனத்திலேயே அவ்வப்போது சீலத்தோடு நல்லுளமும் வாய்ந்த நல்லவர்கள் தோன்றி நாட்டுக்கு வேண்டிய அறவுரைகள் கூறி, தாங்களும் வாழ்ந்து காட்டிச் சென்றிருக்கிருர்கள். அவர்தம் அறவொழுக்கங்களில் சில, இன்று சமயங்கள் என்னும் பெயரால் வாழ்கின்றன.

அறிஞர் கூறிய அற நூல்களுக்குக் கணக்கில்லை. எல்லா மொழிகளிலும் இவ்வற நூல்கள் இல்லாமல் இல்லை. எனினும், உலகில் வஞ்சமும் கொடுமையும் தாண்டவமாடுவது ஏன்? ஒரு தலைமுறையில் உலகையே நிர்மூலமாக்கும் போர்கள் ஒன்று – இரண்டு – மூன்று என்று உருவாவானேன்? மனிதன் உள்ளும் புறமும் ஒத்து வாழாமையே இக்கொடுமைக்கு அடிப்படைக் காரணம்! அவன் இதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எண்ண இடமிருக்கிறது; காலமும் இருக்கின்றது; வாய்ப்பும் தவறவில்லை. எனினும், அவன் எண்ணுவதில்லை. ஒரு வேளை எண்ண முயன்ருலும், அவ்வெண்ணம் மற்றவரைக் கொன்று குவித்து, அக்குவியலின் மேல் கூத்தாடும் அநாகரிகச் செயலுக்குத்தான் அவனை இன்று ஈர்த்துச் செல்லுகின்றது. வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பெருக்கி, வையத்தை வாழ வைக்கவேண்டிய மனிதன், மிருகத்தினும் இழிவாகிச் சுயநலச் சேற்றில் சிக்கிச்

சிந்தை திரிந்து, தான் வாழும் பூஞ்சோலையாகிய பூமியைச் சுடுகாடாக்கத் திட்ட மிடுகின்றான். இக் கொடுமையை நீக்க வழியில்லையா? ஏன் இல்லை? உண்டு! உண்டு! உண்டு!

இன்றைய தமிழன் எத்தனையோ வகைகளில் மாறுபட்டிருந்தாலும், பழந்தமிழ் நாட்டில் உலகை வாழ வைக்க வழி காட்டிய அருள் உணர்வாளர் பலர் வாழ்ந்திருக்கின்றனர். ஏன்? இடைக்காலத்தும் இன்றுங்கூடப் பண்பட்ட நல்லுளம் வாய்ந்த பல பெரியர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள்—வாழ்கின்றார்கள். அவர்கள் உலகம் வாழ வழி காட்டிகளாய்ப் பல உண்மைகளை உரைத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் உரைகளை ஏட்டளவிலன்றி, வாழ்வில் மேற்கொண்டால் உலகம் வாழும்; உயிர்கள் ஓங்கும்!

அப்படி என்ன அவர்கள் அன்றும் இன்றும் கூறிவிட்டுச் சென்றார்கள்? அவர்கள் வகுத்த வழியெல்லாம் சமரச சன்மார்க்க வழிதான். 'எல்லாரையும் ஒத்து நோக்கும் ஒருமை உணர்வே மனிதனை மனிதனுக்கும் உயர் மருந்து' என்பதே அவர்கள் அறிந்த உண்மை. மனிதனை மட்டுமன்றி, எல்லா உயிர்களையுமே ஒத்து நோக்க வேண்டுமென்பது அவர்தம் அறவுரை. உலகம் இதை எண்ணிப் பார்க்கட்டும்.

தமிழ் நாட்டில் அன்றும் இன்றும் எத்தனையோ குறைபாடுகள் இல்லாமல் இல்லை. மாறுபட்டுப் போராற்றுதலும் மனம் கெட்டுக் கொடுமை புரிதலும் தமிழனுக்கு மட்டும் விதி விலக்கானவை அல்ல. எனினும், அத்தகைய கொடுமைகளுக்கு இடையிடையே அறிஞர்களின் அறவுரைகள் மணி விளக்கங்களாய் நின்று, அத் தமிழர் தம் பெருமையை நன்கு விளக்குகின்றன.

அன்று முதல் இன்று வரை அவ்வருள் உள்ளங்கள் காட்டியதெல்லாம் ஒரே வழிதான். தன்னுயிரைப் போல மன்னுயிரைக் காத்தல் அது. இக்கொள்கையைப் பல சமயத்தவரும் கூறியுள்ளார்கள்; பல நாட்டவரும் எழுதியுள்ளார்கள். எனினும், தமிழர் தம் எழுத்தில் ஒரு தனிச் சிறப்பினைக் காண இயலும். பிற நாட்டவரெல்லாம் மனிதனோடு மனிதன் ஒத்து வாழ்வதை உணர்த்தினார்கள். ஆனால், தமிழர்களோ, அந்த எல்லையையும் கடந்து, விலங்கு, பறவை, முதலியன மட்டுமன்றி, மரத்தையும் கொடியையுங்கூடத் தம் இனமாகக் கொண்டு அனைத்திடத்தும் சமரசம் கண்டார்கள். தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று நம் தலைமுறையில் கண்டு பிடித்தார்களென நாம் பெருமை கொள்ளுகின்றோம். ஆனால், தமிழன் அன்றே அச்செடி கொடிகளுக்கும் உயிருண்டு என்பதை உணர்ந்ததோடன்றி, அவை வருந்தின் அவற்றின் வாட்டம் தீர்க்கும் வகையில் உதவியும் புரிந்தான் என்பதை ஆராயும்போது அவன் சமரச உணர்ச்சி எந்த எல்லையில் பரந்து செல்லுகின்றது என்பது தெற்றென விளங்காதோ!

பாரி கொடைமடம்பட்டான் என்பது பாரறிந்த வரலாறு. பாரி தமிழ் நாட்டுச் சிற்றரசருள் ஒருவன். அவன் நாடு வாழத் தான் வாழ்ந்தான். பிற உயிர்கள் வாழத் தன்னுயிர் புரந்தான். ஏன்? அதற்கும் ஒரு படி தாண்டித் தான் வாடினும் பிற உயிர்கள் வாழ வேண்டும் என்ற அருள் உணர்வில் அவன் ஆணை சென்றது. அதை விளக்கும் சங்கப் பாடல்கள் தாம் எத்தனை!

**'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்**
**பறம்பிற் கோமான் பாரி'** **(89-91)**

என்று சிறுபாணற்றுப்படையில் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் எழுதி வைத்த அடிகளை அறியாதார்

யார்? வீடு நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த பாரி, தேரிலிருந்தே வழியில் முல்லைக்கொடி வாடுவதைக் கண்டான். பற்றிப் படரக் கொழு கொம்பின்றித் தாவித் தவிக்கும் அக் கொடியின் வாட்டம் அவன் உள்ளத்தைச் சுட்டது. 'கொடியும் வருந்தும்' என்று கூறிற்று அவன் உள்ளம். அரண்மனை சென்று ஆட்களை அனுப்பி அதற்குக் கொழு கொம்புகளை நடச்சொல்லும் அளவுக்கு அவன் உள்ளம் வழிகாட்டி மேலே செல்ல அவனை விடவில்லை. அவன் அருள் உள்ளம் அத்துணை நேரங் கூட அக் கொடி வாடுதல் தகாத ஒன்று என்று உணர்த்திற்று. சுற்றுமுற்றும் பார்த்தான். கொழு கொம்பாக நட ஒன்றும் கிடைக்கவில்லை போலும்! தான் ஏறிய தேரின் குதிரைகளை அவிழ்த்து விட்டான். தேரை அருகில் சேர்த்தான். 'முல்லையே, நீ இத்தேரையே பற்றுகப் பற்றி வளர்க!' என்று வாழ்த்தி வீடு சென்றான். இச் செயல் மூலம் சமரச உணர்வு என்பது மனித இனத்தோடு மட்டுமன்றி ஓரறிவுடைய உயிர்களாகிய தாவரங்கள் வரையில் தமிழர் உள்ளத்தே தழைத்து நின்றது என்பது புலனு மன்றோ?

இஃது ஓர் இலக்கியம். இவ்விலக்கியத்துக்கே இலக்கணம் கண்டார், என்றும் வாழும் வளமார் நூல் செய்த வள்ளுவர். உயிர் என்னும் போது அவற்றிடையிலே வேறுபாடு உண்டோ என வினவியது அவர் உள்ளம். உள்ளம் வினவியதை வாய் பாட்டாக வாரி, வழங்கிற்று. 'பிறப்பொக்கும் எல்லா **உயிர்க்கும்;** சிறப்பு ஒவ்வா செய் தொழில் வேற்றுமையான்,' என்று அவர் செம்மைக் கரம் தீட்டியிருக்கும். ஆம்! எல்லா உயிரையும் ஒத்து நோக்கும் சமரச ஞானியாய்த் தமிழன் விளங்கினன் என்பதற்கு இதனினும் வேறு சான்றும் வேண்டுங்கொல்!

*தாவர இனத்தைத் தாண்டி விலங்கினத்துக்கு வருவோம். சிலப்பதிகாரம் தமிழர் நாகரிகத்தை எடுத்துக் காட்டும் எழிலோவியம். அதில் முடிகெழு வேந்தர் மூவரும் பேசப்படுகின்றனர். பாண்டி நாட்டிலே தன் பதியைப் பறிகொடுத்து அலமரும் கண்ணகி, அரசன் முன் முறையிடுகின்ருள். ஆராயாது கொலை செய்த அக் கொடுங்கோலனைக் காணும்போது தன் நாட்டுச் சோழர் மரபும் அவள் கண்முன் நிற்கின்றது. அதற்கேற்பப் பாண்டியனும் 'நீ யார்?' என வினவுகின்ருன். வினவுக்கு விடை கூறுமுகத்தான் தன் சோழ நாட்டின் சிறப்பைக் கூறுகின்ருள் கண்ணகி :*

**'எள்ளரு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
நாவிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத்
தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே.'**

*என்று இரு பெரு வேந்தர்களைப் பாண்டியன் முன் காட்டி, வழி வழிச் சிறந்த தமிழ் மரபுக்குக் கொடுமை இழைத்த அவன் கொலைத் தன்மையை விளக்குகின்ருள். அவள் கூறிய அரசர் யாவர்? ஒருவன், புருவின் அல்லலுக்கு ஆற்ருது தானே அதற்குப் பதிலாகத் துலாத் தட்டேறி அதைக் காத்த மன்னன்* **சிபி.** *மற்ருெருவன், மடிந்த கன்றை நினைத்துக் கதறும் தாய்ப் பசுவின் துயரம் அறிந்து. அதற்குக் கழுவாயாக அக்கன்றினைக் கொன்ற தன் மகன்மேல் தேரேற்றி அறம் புரிந்த* **மனு** *வேந்தன். அவர்தம் கதைகள் எவ்வாறு அமையினும், அவர்கள் கொண்ட சமரச உணர்வே நாம் கைக்கொள்ள வேண்டுவது. ஆம்! பறவையையும் பசுவையும் உயிரெனப் போற்றிப் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்ற*

வள்ளுவர் வாய்மொழியறிந்து, அதன்படி அவற்றிற்கு உற்ற அல்லலை நீக்கும் நெறியால் தம்மையே வீழ்த்த நினைத்த அத்தமிழ்ப் பெரு வேந்தர்தம் செயல் தமிழர்தம் சமரச உணர்வுக்கு எடுத்துக்காட்டாகுமன்றோ?

சங்க காலத்திலே இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் இவ்வாறு நம்முன் நிழலிடுகின்றன. அவை அனைத்தும் உலகில் நாம் வாழ வழி காட்டிகளாய் அமைகின்றன. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய பண்பாட்டிலே வழுவாது நின்று நம்மிடை வாழ்கின்றவர் எத்தனை பேர்? உடன் பிறந்தவர்களை வழக்கு மன்றம் ஏற்றி ஆயிரம் ஆயிரமாகச் செலவினையும் அல்லலினையும் உண்டாக்கிக் கொடுமை புரிவோர் எத்தனை பேர்? உழைத்துக் கொடுத்தும் உழைத்தவனை உதாசினம் செய்து, உள்ளவற்றை எல்லாம் தம்முடையனவாகக் கொள்ளை கொண்டு அவற்றால் தம்மை மறந்து தருக்குவார் எண்ணிக்கை உலகில் குறைவா? இன வளர்ச்சியென்றும், நாட்டு வளர்ச்சியென்றும் கூறிக் கொண்டு, பெருஞ்சண்டைகளையும் உலகப் போர்களையும் உண்டாக்கிக் கொண்டு வரும் வல்லரசுகளுக்குத்தான் உலகில் பஞ்சம் உண்டா? ஒரே மனித இனத்திலே சாதியாலும், சமயத்தாலும், நீதியாலும், நிறத்தாலும், செல்வத்தாலும், பட்டத்தாலும் பாகுபாட்டை வளர்த்து, தொடுவதும் குற்றம் பார்ப்பதும் குற்றம் என்ற கண்டமுட்டு கேட்ட முட்டுக் கூறிக் கேலிக் கூத்தாக வாழும் வீணர்கள் இன்று உலகில் பெருகியுள்ளதை நாம் அறியோமோ? 'மனிதன் பகுத்தறிவுள்ளவன்; நல்லதையும் தீயதையும் ஆராய வேண்டியவன்,' என்ற நெறியை மறந்து, மற்றவருக்கு என்றும் கொடுமையே செய்து, சுயநலத்தால் தன் வாழ்வை உருவாக்கி உலகை உருக்குலைக்கும் கொலையாளிகள் இன்று வாழவில்லையா? நாகரிகம் என்ற போர்வையிலே, கோடிக் கணக்கில் மக்களைக்

கொன்று குவிக்கும் ஆயுதங்களை வளர்க்கும் பெரிய அரசாங்கங்களும் நாம் காண்பன அல்லவா ? ஆம் ! இத் தகைய கொடுமைகளெல்லாம் எதனால் விளைகின்றன ? தமிழன் அன்று கண்டு காட்டிய சமரச ஞானத்தை மனிதன் மறந்தமையே இவற்றிற்கு முதற் காரணம்.

கடைச்சங்க காலத்தில் மட்டுமன்றி, இன்று வரை தமிழ் நாட்டில் அச்சமரச ஞானத்தை உணர்த்தி வருகின்ற புலவர் பல்லோர், காவியம் பாடினும் வேறு எந்த வகையான இலக்கியம் பாடினும் அவற்றுளெல்லாம் அச்சமரச ஞானம் விளங்குவதை அறியலாம். வாழ்விலும் வாழ்வின் அடிப்படையாக அமைந்த பொருளாதார நிலையிலும் அச் சமரசம் நன்கு விளக்கப்படுகின்றது. சங்க காலத்தில் பெற்ற பொருளை மற்றவருக்கும் உதவும் நெறி நன்கு பேசப்படுகின்றது. வறுமையில் வாடிய புலவர் வளம் பெற்ற காலத்து, அதைத் தமக்கென வைத்துக் கொள்ளாது எல்லோருக்கும் வாரி வழங்கக் கொடுத்த பொருளாதாரச் சமரசம் நாம் இன்று கைக்கொள்ள வேண்டிய ஒன்றன்றோ ? குமணன் நல்கிய வளனைக் கொண்டு வந்து தம் வாழ்வரசியிடம் கொடுத்த பெருஞ் சித்திரனார்,

**'இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்து மென்னாது**
**எல்லார்க்கும் கொடுமதி மனைக்கிழ வோயே !**

என்று கூறும்போது நாம் வியவாதிருக்க முடியுங்கொல்!

கடவுளைப் பாட வந்த இடைக்காலப் புலவராகிய திருநாவுக்கரசர், 'வைத்த பொருள் நமக்கு ஆம்' என்று நெஞ்சத்துக்கு அறிவுறுத்தி அளவுக்கு மீறிய பொருளீட்டும் கெட்ட எண்ணத்தைக் கெடுக்கவில்லையா? கோசலை நாட்டைத் தம் சமரச உணர்வால் கனவு காணும் கம்பர், 'எல்லாரும் எல்லாச் செல்வமும்

எய்தலாலே, இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ!' என்று எழுத்தோவியத்தில் தீட்டிக் காட்டவில்லையா?

இடைக்காலத்திலிருந்து இன்றைய நிலைக்கு வந்தாலும் அத்தகைய சமரச ஞானிகளைக் காண இயலும். கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் நடைபெற்ற கொடுமைகளை மாற்றி, சமரச சன்மார்க்கத்தை நிலை நாட்ட நின்ற தாயுமானுர், இராமலிங்க அடிகளார் போன்றவரை நாடு நன்கு அறியுமே! இறைவனிடம் தாயுமானுர் முறையிடும் வேண்டுகோள், பரந்த சமரச உணர்வை அனைவருக்கும் ஊட்டும் என்பது உறுதி. 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்று அறியேன் பராபரமே!' என்று இறைவ்னிடம் அவர் முறையிடுவது சமரச ஞானத்தாலா, அன்றி வேறு வகையாலா? இராமலிங்க அடிகளார் பாடல்கள் தாம் எத்துணைச் சமரச ஞானம் தழுவியுள்ளன!

சமயத் தலைவர்களை விடுத்து, அரசியல் தலைவர்களைக் காணினும், அவர்களும் சமரச ஞானத்தையே உணர்த்துகின்றனர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் கூற்றை ஒன்றியன்றோ அரசியற்கவிஞர் பாரதியார்,

**'காக்கை குருவி எங்கள் சாதி—நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்.'**

என்று எக்களித்துப் பாடினுர்? எல்லாவற்றிலும் மேலாக அவர் சமரச ஞானம் மாற்றானுக்கும் அருள் செய்யத் தூண்டும் அளவு செல்லுகின்றது. 'பகைவனுக்கருள்வாய்' என்று அவர் தம் மனத்தை நோக்கி வேண்டும் போது நம் முன் சமரசமன்றி வேறு என்ன தோன்றும்? 'பகை நடுவினில் அன்புருவான நம் பரமன் வாழ்கின்றுன்!' என்று இறைவனை அன்புருவாளனுக்கி,

அவனை அப்பகையின் இடையிலே நிறுத்தி, சமரச ஞானம் அறிய வழியற்றோரையும் அவ்வழிக்கு அவர் ஈர்த்துச்செல்லும் நிலை உயர்ந்ததன்றோ?

இத்துணைப் பெருநெறியாகிய சமரச வாழ்வில் தமிழர் அனைவரும் பழகின் உயர்வுண்டு. இவர் தம் வாழ்வுக்கும் கூற்றுக்கும் மூலகாரணமாய் நிற்கும் ஒன்று இப்போது நம்முன் நிழலிடுகின்றது, ஆம்! அதுதான் 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்ற ஒப்பற்ற அறநெறி—சமரசஞான வழி காட்டி-சங்க இலக்கியத்தில் தலையாய தொடர். இத்தொடர் கொண்டே அன்று தொட்டு இன்று வரை தமிழன் தன் நிலை கெடா வகையில் சமரச ஞானியாய்த் திகழ்கின்றான்!

அத்தகைய பரந்த சமரச ஞானத்திடையில் முகிழ்த்ததுதான் இன்றைய 'தமிழர் திருநாள்'. தமிழனது தலை சிறந்த நாள் இந்த நாள்தான். இவ் விழாவில் அவன் அனைவரையும் ஒத்து நோக்கிச் சமரச உணர்வோடு உலாவுகின்றான். ஏன்? இது மட்டுமென்ன! தமிழன் விழாக்கள் அத்தனையுமே சமரச நோக்கின் அடிப்படையில் பிறப்பனவேதாம். விழா என்றால், ஏதோ வேடிக்கையாகப் பண்டம் பலகாரம் செய்து உண்டு, புத்தாடை உடுத்திக் கொள்வது என்ற அளவில் அது நின்று விடாது. விழாவைப்பற்றி நாட்டு மக்களுக்கு முன்னறிவிக்க வள்ளுவ முதுமகன் அரச யானையின் மீதிருந்து அறிவுறுத்தியதாக மணிமேகலை போன்ற பழங்கால இலக்கியங்கள் பேசும் எழுத்தோவியங்களைக் காணின், அவன் விழாவின் நோக்கம் நன்கு புலப்படும். விழாவைப் பற்றிக் கூறுமுன் வாழ்த்து முகத்தான் விழாவாற்ற நாடு எந்நிலையில் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றான்.

**'பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி',**

காவிரிப்பூம்பட்டினத்திலே வள்ளுவ முதுமகன் வரப் போகும் விழாவினை உணர்த்தினன் என்பர் சாத்தனர். விழா என்ருல், எவரோ ஒரு சிலருக்குத்தான் என்ற உணர்ச்சி மறைய வேண்டும். நாட்டிலே வாழ்கின்ற அத்துணைபேரும் பசியற்றவராகி, பிணியிலராகி, தம்முள் மாறுபாடில்லாத் தன்மையராகல் வேண்டும். 'பசியும் பிணியும் பகையும்' நீங்க வேண்டும். வசியும் வளனும் சுரக்கவேண்டும். மழை பெய்து அம்மழையால் நாட்டின் வளம் பெருக வேண்டும். இவ்வாறு அமைந்த நாட்டிலே தான் விழாச் சிறப்படையும்.

தமிழர் திருநாள் இவ்வுண்மையை நன்கு விளக்கு கின்றது. அத்திருநாளாகிய இப்பொங்கல் நாளில் அப் படிப்பினை உணர்ந்து நாமும் நாடும் நானிலமும் வாழத் தமிழர் அனைவரும் உறுதி கொண்டு உழைப்போமாக!

# படிப்பது எதற்கு? ★ ★

அன்று சென்னை நகரமே 'நிர்த்தூளிப்பட்டது" என்று பேசிக்கொண்டார்கள். அப்படியென்றால், அது வரை காணாத பெருங்கூட்டம் கூடி எங்கும் புழுதி எழுப்பி மக்கள் திரண்டிருந்தார்கள் என்பது பொருளாகும். சென்னை நகரத்துக்கு வாராத பெரு விருந்து வந்ததாம். ரஷ்ய நாட்டு இரு பெருந்தலைவர்களும் சென்ற நவம்பர் மாதம் 28-ஆம் தேதி சென்னைக்கு வந்தார்களல்லவா? அந்த நாளைத்தான் அப்படியெல்லாம் வியந்து பேசினார்கள். அது உண்மையுங்கூட.

சென்னை நகருக்கு இதுபோன்று வெளிநாட்டுப் பெருந்தலைவர் யாரும் இது வரை வந்ததே இல்லையே! இந்தியா உரிமை பெற்ற பிறகு எத்தனையோ வெளி நாட்டு மக்கள் வந்தபோதிலும் இதுபோன்ற வகையில் அவர்களை மக்கள் வரவேற்கவில்லை. உலகையே ஆட்டிப் படைக்கும் வகையில் ஆளும் ரஷ்யப் பெருந்தலைவர்களைக் காண யார்தாம் விரும்பமாட்டார்கள்? சென்னை

மக்களும் விரும்பினார்கள் ; திரள் திரளாக எங்கணும் கூடினார்கள். கூட்டங்கள் சில நடந்தன. படித்தவரும் படிக்கின்றவரும் தனியாகக் கூட வேண்டுமென்று முயன்று தனிக்கூட்டம் ஏற்பாடு செய்தனர். ஆனல், அந்தப் படிப்பாளிகளின் கூட்டந்தான் வெளி நாட்டுத் தலைவர்தம் உள்ளங்களில் எத்தனை தாழ்ந்த வகையில் நினைவு உண்டாகும்படி நடந்துகொண்டது என்பதை நினைக்கும்போது நம் நாட்டுக் கல்வி நிலை இப்படியுமா இழிநிலை எய்தவேண்டும் என்று எண்ணிற்று என் உள்ளம்.

கூட்டத்திற்கு இடையிலே நானும் ஒருவன். பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் அவற்றின் ஆசிரியர்களுக்கும் என்றே ஏற்பாடு செய்யப்பெற்ற கூட்டம் அது. அதற்காகத் தன்னந்தனியாக நுழைவுச் சீட்டுக்களும் வேறு வழங்கினார்கள். வழிகளிலெல்லாம் காவலர் நின்று, சீட்டுக் காட்டியவர்களைத்தான் உள்ளே விட்டார்கள். கூட்டம் நிறைந்திருந்தது. பள்ளிகளின் மாணவர்கள் வந்தால் அவற்றின் ஆசிரியர்களும்தாமே நடத்தி வழிகாட்டி வந்திருப்பார்கள். ஆரம்பப் பாட சாலைச் சிறுவர் சிறுமியரும் குழுமியிருந்தனர். நடுவில் பெண்களையெல்லாம் அமர்த்தினர். சுற்றி நெடுகிலும் ஆடவர் கூட்டம். படிக்கும் மாணவரும் பயிற்றும் ஆசிரியரும் என்று கூறிக்கொள்ளும் அந்தக் கூட்டம், அன்று நடந்துகொண்ட விதத்தைக் கண்ட ரஷ்யத் தலைவர்கள், 'இதுதான் சென்னையில் கல்வித் தரம்போலும் !' என்று கருத்தில் நினைத்து உளத்தால் சிரித்திருப்பார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமா !

கற்றவர் ஒழுங்காக நடக்கக் கடமைப்பட்டவர். கற்பிக்கும் ஆசிரியர்கள் நடந்து காட்ட வேண்டியவர்கள். ஆனல், அன்றைய நிகழ்ச்சி, ஒன்றும் கல்லாத பாமரர்

செயலினும் கீழ்ச்சென்றது. இன்றைய நம் மாநிலக் கல்வி நிலையங்களும், அதைப் பொறுப்புடன் நடத்தும் தலைவர்களும் இவ்வாறு செய்ய விடுவது நாட்டுக்கே இழுக்காகும்.

ரஷ்யத் தலைவர்கள் மேடையில் அமர்ந்ததுதான் தாமதம்! நாற்புறத்தும் உட்கார்ந்திருந்த அந்தப் 'படித்த, படிக்கின்ற, பயிற்றும்' பெரியவர்கள் விலங் காஞர்கள். நாற்கால் பாய்ச்சலில் ஓடிஞர்கள், எங்கே இளம்பெண்களும் சிறுவரும் கூடியிருந்தார்களோ, அந்த இடத்தை நோக்கி. தலைவர்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளெல்லாம் பாழாயின. பாவம்! மேலிருந்து நம் கல்வி அமைச்சர், 'ஒழுங்கை நிலை நாட் டுங்கள்! நிலை நாட்டுங்கள்!' என்று தொண்டைவற்றக் கத்தியதுதான் மிச்சம். நாட்டுப் படிப்பு மனிதனை மனித ஞக்குவதா யிருந்தால்தானே ஓடி வந்தவர்கள் கேட்பார் கள்? கேட்கவில்லை. எப்படியோ இரண்டொரு நிகழ்ச்சி கள் நடந்தன. பேச விரும்பியிருந்த தலைவர்கள்கூட, தாங்கள் பேசிஞல் தங்கள் உள்ளத்தில் உருவான 'படித் தவரை'ப் பற்றிய தாழ்வான எண்ணம் வெளிப்படுமோ என்று பேசாது, உடன் வந்த மற்றெருருவரைப் பேச வைத்தார்கள்; 'படித்தவர்' செயலைச் சொல்லாமல் சொல்லி வியந்தார்கள். நிகழ்ச்சி நிறைவேறிற்று.

இந்த நிகழ்ச்சியின் மூலம் நான் யாரையும் குறை கூற விரும்பவில்லை. குறை கூற ஆரம்பித்தால் பல ருடைய பகைமையை நான் சம்பாதித்துக் கொள் வதைத் தவிர்த்து வேறு உருவான பலன் ஏற்படப் போவதில்லை என்பதையும் நான் அறிவேன். ஒழுக்கம் பற்றியும் உயர்ந்த பண்பாடுகள் பற்றியும் பேசும் வள்ளு வருக்கு வாரந்தோறும் மாநாடுகள் கூட்டும் இந்த யுகத் திலேதான் நாம் வாழ்கின்ரேம். ஆஞல், அவ்வொழுக்

கத்தையும் பண்பாட்டையும் காற்றில் பறக்க விட்டோம். அன்று சென்னையில் உள்ள ஒரு மகளிர் கல்லூரியின் 'பஸ்'ஸில் வந்த அந்த இளம் பெண்கள், 'மூர்மார்க்கட்' டைத் தாண்டுவதற்குள் கல்லூரியில் பயிலும் மேதகு மாணவர்களால் பட்ட அல்லலைக் கண்டவர்கள், 'போதும் கல்லூரிப் படிப்பு நாட்டுக்கு!' என்று கூறுது விடமாட்டார்கள், அவர்கள் உண்மையில் நாட்டுக்கு நல்ல பெயர் தேடித் தருபவர்களாய் இருந்தால். ஆக இன்றைய கல்வி நாட்டில் இவ்வாறு கெடுவானேன்?

நாட்டையாளும் நல்ல பேரமைச்சர் திரு. ஜவகர்லால் நேரு முதல் சாதாரண உத்தியோகத்தர் வரையில், 'மாணவர் தரமும் ஒழுக்கமும் மங்கிவிட்டன!' என்று வருந்திக் கண்ணீர் விட்டுக் கூறுகின்றனர். ஆண்டு தோறும் பல பல்கலைக் கழகங்களின் பட்டமளிப்பு விழாக்களில் கவர்னர்களும் பிறரும் ஒழுக்கம் பற்றியும் பண்பாடு பற்றியும் பேசாமல் இல்லை. எல்லாம் பேச்சோடு பேச்சாகச் சென்று மறைகின்றனவேயன்றி, வாழ்வில் பயன் தரவில்லை. காரணம் என்ன?

ஆரம்பக் கல்வி தொடங்கி, கல்லூரிக் கல்வி வரையில் ஆண்டுதோறும் எத்தனையோ மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு நூலுக்குப் பதில் மற்றொரு நூல், ஒரு வகுப்புக்குப் பதில் மற்றொரு வகுப்பு, ஒரு மொழிக்குப் பதில் மற்றொரு மொழி என்று இந்த வகையாக மாறுதல்களைக் காண்கிறோமேயன்றி, அடிப்படையில் மனிதனை மனிதனாக்கும் கல்வி நாட்டில் மலரவில்லை. 'ஆங்கிலேயன் காலத்தில் அவன் நம்மை அடிமையாக்கும் வகையில் கல்வித் திட்டத்தை வைத்திருந்தான்; அதை மாற்ற வேண்டும்,' என்று பலரும் பேசுகின்றனர். ஆனால், அந்த மாற்றத்தின் வழி உண்

டாகும் பயனை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணினால், பலன் விளையும்.

'கல்வி நிலையங்கள் ஒழுக்கக் கூடங்களாக வேண்டும்,' என்று பலரும் பேசுவது காதில் அடிக்கடி விழுகின்றது. அதற்குக் கல்வி நிலையங்களை நடத்துபவரும், கல்வித் தலைவர்களும் முன்னின்று செயலாற்ற வேண்டும். முன் கூறியபடி வள்ளுவருக்கு மாநாடு நடத்தி அவர் கொள்கையைக் குழி தோண்டிப் புதைக்கும் வகையிலேதான் இன்றைய கல்வி செல்லுகின்றது. வள்ளுவர் வகுத்த ஒழுக்க நெறி தவறாதவர்கள் மேலிருந்து மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக அமையின், நாட்டுக் கல்வி சீர்பெற்றுத் திகழும்.

நாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தின் பின்புறம் இரண்டு 'பெரிய மனிதர்' உட்கார்ந்திருந்தனர். அவர்கள் இருவரும், ஒரு பள்ளியின் ஆசிரியர்கள்தாம் என்பதை அவர்கள் பேச்சு உணர்த்திற்று. மாணவர்களுக்குக் கொடுக்க அவர்களிடம் கொடுக்கப்பட்ட 'டிக்கெட்டு'கள் பலவற்றை மணவருக்குக் கொடாது தாங்களே வைத்துக் கொண்டு, வேண்டியவருக்குக் கொடுக்க அங்கு வரச் சொல்லி, அவர்களைக் கண்டுபிடிக்க முடியாது ஏமாந்த அவர்கள் பேச்சு, அவர்களை ஒரு பள்ளி ஆசிரியர்கள் என்பதைஎடுத்துக் காட்டிற்று. அம்மம்மா! அரங்கு நடுவில் செல்லும்மகளிரைப் பற்றிய அவர்கள் பேச்சுக்கள் படிக்காத அநாகரிகனும் நினைக்காத பேச்சுக்கள். ஆம்! பேசியவர் யார்? மாணவர்களுக்கு ஒழுக்கம் பயிற்றும் உயர்ந்த ஆசிரியராகிய 'ஞானபோதகர்'. இந்த நிலை நாட்டில் நிலவும் வரையில் கல்வி உருப்படுமா? இப்படிக் கூறுவதனால் எல்லா ஆசிரியர்களும் ஒழுங்கற்றவர்கள் என்று நான் கூறவில்லை; ஆசிரியருள் ஒரு சிலர் இப்படி இருக்கின்றனர் என்பதையே காட்டினேன்.

படிப்பது எதற்கு என்று மாணவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களை எண்ணத் தூண்ட வேண்டுவது ஆசிரியர் பொறுப்பு. அந்தப் பொறுப்பு ஆசிரியர்களுடையது மட்டுமன்று; மேல் ஆணை செலுத்தும் அதிகாரிகளும், அரசியலாருங்கூட அப்பொறுப்புக்கு உரியவராவார்கள். எனவே, அனைவரும் கலந்து விடை காண வேண்டிய கேள்வியே, 'படிப்பது எதற்கு?' என்பது.

ஏதோ ஒரு அளவு படித்து வயிற்றுப் பிழைப்புக்கு வேலை தேடுவதற்குத்தான் கல்வி என்றால் அதுவும் இன்று பொய்யாகிறது. வெற்று ஏட்டுப் படிப்புப் படித்துப் பட்டம் பெறும் பட்டாதாரியைக் காட்டிலும் ஒன்றும் படியாத உழைப்பாளி அதிகமாகச் சம்பாதிப்பதைக் காண்கின்றோம். வேண்டுமானால் பகட்டாக உடை உடுத்திக்கொண்டு, உழைக்காது, மற்றவரை ஏவல் இட்டு 'அநாகரிக' வாழ்வு வாழப் படிப்பு ஓரளவு துணை செய்யும் போலும்! 'கற்க கசடறக் கற்பவை; கற்றபின் நிற்க அதற்குத்தக,' என்று வள்ளுவர் வாக்கில் ஒரு சொல்லைக்கூட நாம் சரியாகப் பின்பற்றவில்லை என்று தான் சொல்ல வேண்டும். நாம் இன்று கற்க வேண்டுபவை மட்டும் கற்கவில்லை; அவ்வற்றையும் கசடு அறக் கற்கவில்லை. அனைத்துக்கும் மேலாக 'அதற்குத்தக நிற்கவில்லை.' இவ்வற்றை அனைவரும் அறிவோம். அறிந்தும் பேச்சிலன்றிச் செயலில் இறங்க விருப்பமில்லை. அதனாலேயே 'எதற்கு?' என்பதன் விடை விளங்காமற் போகின்றது. திருவள்ளுவனார் மற்றொரு குறளில் திட்டமாகக் கற்றதன் பயனை விளக்குகின்றார். 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்?' என்றார் அவர். 'வாலறிவன்' என்பதற்குக் கடவுள் என்று பொருள் கூறினார் முன்னனையோர். வேறு பொருள் காண்கின்றனர் இக்காலத்தில் சிலர். எப்படி

யாயினும், ஒழுக்கத்தால் மேம்பட்டவனை அது குறிக்கும் என்றல் தப்பாகாது. யாவரும் அதை ஏற்றல் வேண்டும். எனவே, கல்வி மக்களுக்கு ஒழுக்கத்தை உண்டாக்கித் தருவதற்கேயாகும் என்பது திட்டமாகத் தெரிகின்றது.

இவ்வாறு கல்வி பற்றி வரையறுத்த விளக்கம் உள்ள நாட்டில், கற்பாரிடம் ஒழுக்கம் இல்லாத காரணம் யாது? கள்ளமறியாப் பிள்ளை உள்ளங்களைக் குறை கூறுவதினும் அவ்வுள்ளங்களை உருவாக்கும் பெரியவரைத் தான் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்களிலும் எத்தனையோ நல்லவர்களும் ஒழுக்கமுடையவர்களும் இருக்கிறார்கள். இருந்தும், இந்த நிலையா? ஏன்? ஆம்! நாட்டுக்கல்வி அடிப்படையிலேயே அழுக ஆரம்பிக்கின்றது. செயலாற்றும் தலைவர்கள் செம்மை நிறைந்த உள்ளத்தோடு பணியாற்ற வேண்டும். கல்வியை உருவாக்குவதில் ஒழுக்கக் கல்வி இடம் பெறல் வேண்டும். நல்லவர்களும் ஒழுக்கமுடையவர்களும் கல்வித் துறையை நடத்த முன் வரவேண்டும். உள்ளத்தே கள்ள உணர்வும், வேறுபட்ட வெளியுணர்வும், மக்களை மாக்களாகக் கருதும் கயமையையும் கல்வி நிலையங்களிலிருந்தும், அத்துறைத் தலைவர்களிடமிருந்தும் விடை பெற வேண்டும். அரசாங்கம் ஒழுக்கக் கல்வியை ஓம்பும் வகையில் திட்டம் அமைக்க வேண்டும். அடிக்கடி கல்வியை மாற்றும் திட்டம் கைவிடப்படல் வேண்டும். ஆகும் செலவோடு அதிக செலவாகப் பல 'கமிட்டி'களை ஏற்படுத்தி, அவர்களைச் சுற்றிவரப் பணித்து, பல செய்து, பின் அவர்கள் கூறுவது பற்றியே சிந்தியாது விடுதல் நல்லதாகாது. 'தலைவர் திருந்தினால் தரணி திருந்தும்,' என்பது இன்றைப் புதுமொழி. 'மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி,' என்பது அன்றைய பழமொழி. இன்று நாமே நாடாளும் மன்னர் என்றார்

பாரதியார். எனவே, நாட்டில் ஒழுக்கம் ஓம்பும் வகையில் கல்வி உருவாக வேண்டும். ரஷ்யத் தலைவர் முன் நடந்த நிகழ்ச்சியைக் கண் கொண்டு கண்ட நம் கல்வி அமைச்சர்தம் உள்ளத்தே அன்றே இந்த எண்ணம் உருவாகியிருக்கும் என்பது ஒருதலை. இக்கட்டுரையே ஒருவேளை அவர்தம் உள்ளத்தெழுந்த உணர்வு அலையின் ஒருதிவாலையாக அமையினும் அமையும். ஆம்! கல்வி அமைச்சரும் நாடாளும் நல்லவர் பிறரும் முதன்முதலாகக் கல்வித் துறையைத்தான் கவனிக்க வேண்டும். வருங்காலச் சமுதாயத்தை உருவாக்கும் ஒரு பணி இது. வெறும்பேனு ஓட்டும் உத்தியோகப் புருடர்களாக மட்டும் படிப்பவர்களைச் செய்துவிடாது, ஒழுக்கமுடையவர்ராக ஆக்கும் வகையில் கல்வியைப் பரப்ப வழி காண வேண்டும். அந்த ஆக்கவேலையை அதைப்போலவே கல்வி நலமும் ஒழுக்க உரமும் பெற்ற நல்லவரைத் தேடிக் கண்டு, அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். 'நாடெங்கும் வாழக் கேடு ஒன்றுமில்லாத' நல்ல சமுதாயம் அந்த ஒழுக்கக் கல்வியினுலேதான் உருவாகும். ஏட்டுக் கல்வியாலும் அக்கல்வியை வாழ்வுக் கல்வியாக்கும் வல்லவர் வழியாலும் படிப்பைச் சமுதாயத்துக்கு உரியதாக்கும் வழித் துறையினை—மெய்யறிவை உணர்த்தும் பெருநெறியினை—உடனே நம் சென்னை அரசாங்கம் வகுக்குமாக! அதன் வழி நாடு நலம் பெறுவாக!

# மெய்யறிவு ★ ★

'அறிவென்பது யாது? அது யாரிடத்து அமைந்துள்ளது? அதனால் உண்டாகும் பயன் யாது? அது பெற்றோர் எவ்வாறு வாழ்வர்?' என்பன போன்ற சில கேள்விகளுக்கு விடை காணல் ஒருவாறு மெய்யறிவை விளக்குவதாகும்.

அறிவென்றால், தேர்வில் 100க்கு 100 மார்க்கு வாங்குவது என்றுதான் பலர் நினைக்கின்றனர். பள்ளியிலோ கல்லூரியிலோ படித்து ஒவ்வொரு தேர்விலும் நிறைய 'மார்க்கு' வாங்குகின்றவனை அறிவுள்ள பையன் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். அதிக மார்க்கு வாங்குபவர்களை அறிவுடையவர் எனப் பாராட்டி அரசாங்கமும் பிறவும் பதக்கம் முதலியனவும் வழங்குகின்றன. நூலை அப்படியே பயின்றோ, நெட்டுருப் போட்டோ, தேர்வில் அதிக எண் வாங்குவதைத்தான் அறிவு என்று எண்ணும் நிலை இன்று நாட்டில் இருந்தாலும், தமிழர் அது ஒன்றுதான் அறிவு என்று கொள்ளவில்லை.

அறிவு கற்றனைத்து அதிகமாகும் என்பது உண்மை தான். வள்ளுவர்,

**'தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.'**

என்று அழகாக உவமை வகையால் விளக்குகின்றார். ஆனால், அந்த உவமை வழிக் கல்வியையோ அல்லது அதில் பெறும் எண்களையோ அறிவு என்று கூற வில்லை. நீர் உள்ளே நெளிந்து செல்லுகின்றது; அதைத் தோண்டுபவன், தான் தோண்டும் நிலைக் கேற்பப் பெறு கின்றான். அது போன்றே அறிவு ஒருவனுடைய தனிப் பட்ட சொத்தாக அமையாது, எல்லார் உள்ளத்திலேயும் உள்ள ஒரு பொருள். அது கல்வியால் விளக்கம் பெறு கின்றது. இதைத்தான் வள்ளுவர் உவமை மூலம் விளக்கு கின்றார்.

உலகில் கற்றும் அறிவற்ற மக்கள் பலரைக் காண் கின்றோம். இன்றைய உலகில் நடக்கும் கொடுமைகளுக் கும் கொள்ளைகளுக்கும்—ஏன்—பெரும் போர்களுக்குங் கூடக் காரணமானவர் யார்? படித்தவர்களா, படியாத வர்களா? படித்தவரே என்பது பாரறிந்த உண்மை யன்றோ! அவர்களை அறிவுடையவர் என்று சொல்லலாமா? அன்றி அறிவற்றவர் என்று கூறலாமா? எண்ணிப் பார்த் தால், அவர்கள் படித்தும் அறிவற்றவர்கள் என்னும் முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும்.

உலகில் மூடரைக் கல்லாத மூடர், கற்றறி மூடர் என இரு வகையாகப் பிரிப்பர். கல்லாத மூடரைக் காட்டிலும் கற்ற மூடராலேதான் நாட்டுக்கும் உலகுக்கும் பெருந் துன்பங்கள் நேர்கின்றன. கல்லாத மூடன், தன் அறி யாமையினாலே அடங்கி ஒடுங்கி, மற்றவரை வருத்தா வகையில் தன் வாழ்வு செல்லும் வழியே செல்வான். ஏற்றமோ குன்றவோ, எது வரினும், அது அவன் ஒருவன்

வாழ்வினை மட்டும்தான் பாதிக்கும். ஆனால், கற்றறி மூடன், தன் அறிவின் மதிப்பை அதிகமாகக் கணக்கிட்டு ஆற்றும் கொடுமையினாலே அவனியே அல்லல் உறுவதைக் காண்கின்றோம். தமிழ் நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் இத்தகைய கற்றறி மூடர்கள்(Educated fools) உள்ளனர். அவர்களால் நாடும் உலகமும் அல்லல் உறுகின்றன. இவற்றை எல்லாம் எண்ணித்தான் போலும் சமரச ஞானியாகிய தாயுமானவர் 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள், கற்று மறிவில்லாத என் கன்மத்தை என் சொல்லுகேன்!' என்று வருந்திப் பாடுகின்றார்! எனவே, கல்வியாலேதான் அறிவு நிரம்புகின்றது என்பது சரியன்று.

பின் அறிவு என்பதுதான் என்ன? அனைத்தையும் விளக்க வந்த வள்ளுவர் அறிவைப் பற்றியும் கூறத் தவறவில்லை. மனிதன் மனிதனாக வாழ வழி காட்டுவதே உண்மையில் அறிவாகும். அறிவைப் பலவாறு பகுத்துக் காண்கின்றார் அவர். நூல் அறிவு ஒரு பகுதிதான். ஆனால் அதுவே முடிந்த அறிவன்று. உலக அறிவு மற்றொன்று. நூலறிவு மட்டும் பெற்று, உலக அறிவு இல்லாதிருப்பின் அதனால் பயனில்லை என்பதை வள்ளுவர் 'உலகத்தொடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார்,அறிவிலாதார்,' என்று விளக்குகின்றார். கல்வி கற்றும், 'எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு,' என்ற உண்மையை உணராது, உலகம் வாழினும் வீழினும், வாடினும் சாவினும், கவலையற்றுத் தாந்தோன்றித் தம்பிரான்களாய்த் திரிவோர், கற்றும் அறிவில்லாதவரே என்பதைத் திட்டமாகக் கூறுகின்றார். எனவே, நூலறிவினும் மேம்பட்ட அறிவு உண்டு என்பது தேற்றம். அந்த மேலான மெய்யறிவுக்கு, வழிகாட்டிகளாகவும் கீழ்ப்படிகளாவும் அமைவனவே நூலறிவும் உலகறிவும். இந்த உண்மையை உணராது, கல்வி அகங்காரமும், பிற

செல்வம் முதலியவற்றின் செருக்கும் பெற்ற தனி மனி தரும் சர்வாதிகார அரசாங்கங்களும் ஆற்றும் கொடுமை யாலன்றோ உலகம் ஒரு தலைமுறையில் இரு பெரும் போரைக் கண்டு, மூன்றாவது போரையும் காணுவோமோ என்று அஞ்சத் தக்க நிலையில் செல்லுகின்றது? இக் கொடுமை நீங்க மெய்யறிவைக் காண்பது தேவை யன்றோ? ஆம்! காணல் வேண்டும். யாது மெய்யறிவு ?

அறிவினைப் பல வகைகளில் ஆய்ந்து காணும் அறிஞர் திருவள்ளுவர், அறிவின் உச்சியில் ஓர் உயர்ந்த மெய்யறிவை வைத்துப் போற்றுகின்றார். அதுதான் முன் கூறியபடி மனிதனை மனிதனாக வாழ வைப்பது. மனிதன் மனிதனாக வாழ வழி என்ன ? இப்போது வாழ்கின்றவர் கள் மனிதராக அல்லாமலா வாழ்கின்றார்கள்? பலகோடி மக்கள் வாழும் இந்த உலகில், மனிதன் செயலளவில் அன்றிப் பெயரளவிலேதானா வாழ்கின்றான்? இக்கேள்வி கள் எழுவது இயல்பு. உலக நிலையை நோக்கின், சுருக்க மாக 'ஆம்' என்று விடையிறுக்கலாம். அதை உலகப் போக்கு வலியுறுத்துகின்றதே!

மனிதனையும் விலங்கினையும் அறிவால் வேறு படுத்த நினைத்த தொல்காப்பியர், நன்கு அவ்வேறுபாட்டைப் புலப்படுத்துகின்றார். 'நல்லதன நலனும் தீயதன் தீமை யும்' ஆராய்ந்தறிந்து நல்லாற்றில் ஒழுகி, வையகம் வாழத் தான் வாழும் பகுத்தறிவாகிய ஆறாவது அறிவைப் பெற்றவனே மனிதன் என்பது தொல்காப்பியர் முடிவு. மனித உடம்போடு கூடினும் அந்த ஆராயும் பகுத்தறிவும் அதன் வழி உலக உயிர்களை ஒத்துநோக்கும் பண்பாடும் இல்லையேல், அவன் மானிட உடலோடு வாழினும் மிருக மாகவே மதிக்கப்படுவான் என்பதைத் தொல்காப்பியர் திட்டமாகத் தெரிவிக்கின்றார். அவர்,

'மக்கள் தாமே ஆறறி வுயிரே.'
'மாவும் மாக்களும் ஐயறி வினவே,
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.'

என்று பாகுபடுத்திக் காட்டும் திறன் பாராட்டற் குரிய தன்றோ ? நலங்கேடுகளை ஆராய்ந்து 'நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை,' என்ற மெய்யறிவால் வாழ்பவனை மக்கள் இனத்தவன் என்றும், அஃதற்ற மனித உடலோடு காட்சியளிப்பவனை விலங்கினத்தவனென்றும் பிரித்துக் காட்டித் தொல்காப்பியர் உண்மை அறிவு எது என்பதை ஒரு வகையால் விளக்கிவிட்டார்.

ஆம் ! உலகில் மனிதராய்ப் பிறந்தார் மக்களாய் வாழ வேண்டும். அவ்வாறு வாழ்வதற்குப் பல பேரறிஞர்கள் வழி காட்டியுள்ளார்கள். நம் திருவள்ளுவரே அறிவினுள் எல்லாம் தலையாய அறிவை நமக்குக் காட்டத் தவறவில்லை. மேலே கண்டபடி, அறிவைப் பல கூறுகளாக நுணித்தறிந்த அவ்வள்ளுவர், மேலாய அறிவினை வாய்விட்டுப் பேசி விளக்குகின்றார். 'அறிவினுள் எல்லாம் தலை என்ப, தீய செறுவார்க்கும் செய்யா விடல்,' என்ற அவர் வாக்கு மெய்யறிவை நமக்குக் காட்டுகின்றது. நூலறிவும், உலக அறிவும், பிற எல்லா அறிவுகளும் இந்த மெய்யறிவுக்கு மனிதனை அழைத்துச் சென்றால்தான் அவன் உண்மையில் மனிதனாக வாழ முடியும் ; அன்றேல், விலங்கினும் கீழாகத் தள்ளப்படுவான் என்பது உறுதி.

இன்று உலகில் எத்தனையோ கோணங்களில் பகை வளர்ந்து வருகின்றது. தனி மனிதனுக்குள் பகை வளர்ந்துள்ளதை நாட்டிலும் உலகிலும் வளர்ந்துள்ள நீதி மன்றங்களின் எண்ணிக்கை எடுத்துக் காட்டுகின்றது. சிறுசிறு பொருளுக் கெல்லாம் பெருஞ்சண்டையிட்டு, நீதி மன்றம் ஏறி, உள்ள பொருளையும் கொள்ளை கொடுக்கும் வழக்கத்தை நாம் அறியோமா ? எத்தனை எத்தனை

நீதி மன்றங்கள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன? பாவம்! தோன்றிய அத்தனையும் வரும் வழக்குகளின் எண்ணிக்கையைக் கண்டு செயலாற்ற முடியாமல் திகைக்கின்றன. ஏன் இந்தக் கொடுமை? தனி மனிதனின் பகைமை அன்றோ இதற்குக் காரணம்?

தனி மனிதன்தான் அவ்வாறு என்றால், வீட்டுக்கு வீடும் நாட்டுக்கு நாடும் பகைமையற்று வாழ்கின்றனவா? இல்லையே! இனப்போராட்டமும், மொழிப் போராட்டமும், சமயப் போராட்டமும், சாதிப் போராட்டமும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட நாகரிக உலகில் இன்று நாம் காண்கின்றவைதாமே? இக்கொடுமைகள் எதனால் நிகழ்கின்றன? இவற்றை நடத்துகின்றவர் யார்? படிக்காதவர்களா? படித்தவர்கள் தாமே? எனினும் இவர்களை அறிவற்றவர்கள் என்று தானே கூற முடியும்?

உலக அரங்கந்தான் என்ன வாழ்கின்றது? இந்திய நாட்டுக்கு ரஷ்யத் தலைவர்கள் வந்து சென்றால், அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் குலை நடுங்கிச் சீறுவானேன்? நான்கில் ஒரு பகுதி மக்கள் தொகையுள்ள ஒரு நாட்டுக்கு உலக அரங்கில் இடமில்லாதிருப்பானேன்? ஆம்! காரணம்? ஒரே காரணந்தான்! வள்ளுவர் காட்டிய மெய்யறிவை, கற்றவரெனத் தம்மைப் போற்றிக்கொள்ளும் உலகத்தவர் அறியாமைதான் அக்காரணம்.

ஆம்! உலகம் வாழ வேண்டுமாயின், வள்ளுவர் காட்டிய அம்மெய்யறிவை மேற்கொள்ளுவதன்றி வேறு வழியில்லை. மனிதனை மட்டும் ஒத்து நோக்கி வாழ்வதோடு நம் வாழ்வு அமையாது என்பதை வள்ளுவர் மற்றொரு குறளில் விளக்குகின்றார். எல்லா உயிரையும் ஒத்து நோக்க வேண்டிய கடப்பாட்டுடன் நாம் வாழ

வேண்டுமென்பதை, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,' என்று கூறுகின்ருர். எனவே, உலகில் உயிர் பெற்று வாழும் அத்தனைப் பொருள்களும் துன்பமற்று வாழ வழி காட்டுவதே உண்மை அறிவாகும். அந்த அறிவினைப் பெற்றவர் தாம் வாடினும் கவலையுருர் ; உற்ருரையும் பகைவரையும் ஒத்தே நோக்குவர் ; அதனுலேதான், 'தீய செறுவார்க்கும் செய்யா விடல்' என்கின்ருர் வள்ளுவர். பகைவன்–நமக்கு ஊறு இழைத்தவன்–என்ற எண்ணத்தையும் விட்டு, அவனுக்குப் பதிலாகத் தீமை செய்யாதது எதுவோ, அதுவே அறிவினுள் எல்லாம் தலையாய அறிவாவது என்பதை வள்ளுவரைவிட வேறு யார் தெள்ளத் தெளியக் காட்ட முடியும் ?

அத்தகைய மெய்யறிவு—'பகைவனுக் கருள்வாய்' என்று பாடுவதோடு செயலினும் அச்செய்கையைக் காட்டும் செம்மை அறிவு—இன்று நாட்டிலும் உலகிலும் இல்லைதான். எனினும், தமிழினம் வாழும் வரையில், வள்ளுவர் வாய்மொழி வாழும் வரையில், அக்கொள்கையை—மெய்யறிவை—உலகில் வாழ வைக்க முடியும் என்ற உறுதி நம் உள்ளத்திலிருந்து நீங்கவில்லை என்பதும் நன்கு புலப்படுகின்றது. சென்றது போக ! இனியாவது அம்மெய்யறிவாகிய ஒருமை உணர்வை வளர்க்கத் தமிழராகிய நாம் முனைய வேண்டும். தமிழர் திருநாளாகிய தனிப்பெரும் பொங்கல் நாள் அந்த நல்ல அறிவின் அடிப்படையினுலேயே ஆக்கப்பட்டதாகும். 'பெற்றது கொண்டு சுற்றம் அருத்தி, மற்றவரையும் ஓம்பும்' ஒரு பெருவிழா அன்ருே தமிழனது தனிப் பெரும் பொங்கல் நாள் ! அந்த நாளிலே தமிழராகிய நாம், சொல்லும் செயலும் சிறக்க, உள்ளம் திறக்க, வள்ளுவர் கண்ட மெய்யறிவை வையகம் முழுதும் மேற்கொள்ள வழி காட்டிகளாக அமையும்படி நம் வாழ்வை வளமாக்குவோமாக !

# உள்ளம் திறக்குமா ? ★ ★

ஆறறிவு படைத்தவன் மனிதன் என்று பேசப் படுகிருன். அன்று தொட்டு இன்று வரை எழுதும் இலக்கியங்களும் இலக்கணங்களும் எவ்வுயிரினும் மேம் பட்டவன் மனிதன் என்று வரையறுத்து எழுதுகின்றன. ஏட்டில் அவைகள் நின்று நிலவுகின்றன. படிப்போர் பலர்; பயில்வோர் சிலர்! ஆனல், படித்த அதை வாழ்வில் கொண்டு வரும்போது—நடைமுறையில் காட்டும்போது— பெரும்பாலும் மாறுபட்டே நிற்கின்றனர். அனைத்திலும் மேம்பட்டவன் ஆறறிவுடையவன் என்று மேடை அதிரப் பேசிவிட்டு, வாழ்க்கையில் அற்ப நாய்க்குக் கொடுக்கும் சிறப்பைக்கூட மனிதனுக்குக் கொடுக்க மறுக்கின்றனர். அவர்தம் செயல் கண்டு நாணுவதா, அன்றிச் சினம் மூண்டுச் சாடுவதா என்று முடிவு கட்ட வேண்டிய பொறுப்புப் பொது மக்களுடையது. அதற்குரிய நாளும் அண்மையிலுள்ளது !

தமிழ் நாட்டுக் கோயில்களெல்லாம் எல்லாருக்கும் திறந்து விடப்பட்டன. அன்பாலன்று: அரசியலார் தம் சட்டத்தால். அச்சட்டம் கண்டு சழக்கர் வாய் மூடினர். வைதிகம் வாட்டம் அடைந்தது; அனைத்துக் கோயில் களும் அரிசனங்களுக்கு—தீண்டப்படாதார் என்பாருக்கு—திறந்து விடப்பட்டன. கோயில்கள் திறந்துவிடப் பட்டனவே ஒழிய, மக்கள் உள்ளங்கள் திறக்கப்பட் டனவா என்பது சற்று ஆராய வேண்டுவது ஒன்று. கோயில் திறக்கப்பட்டதால் ஏழை மக்களுக்கு உண்டாவது ஏற்றமா அன்றி ஏமாற்றமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 'இறைவனைக் காணச் சேரவாரும் செகத்திரே,' என்று திரு. சிவசண்முகமோ அன்றி வேறு யாரோ கூப்பிட்டு ஒரு நல்ல நாளில் அனைவரையும் உள்ளே அழைத்து வந்து கூட்டம் போட்டதாலே கோயில் நுழைவு ஆகிவிட்டதாக முடிவு செய்யப் பெறுமா? அன்று தலைவர்களுடன் கோயிலுக்குள் சென்ற ஊர்ப் பண்ணையாள் மறுநாள் பண்ணைக்காரரிடம் பெறுவது என்ன? கோயிலுக்குச் சென்ற காரணத்தால் சில ரூபாய் அபராதம், அல்லது அவன் பயிரிட்டிருந்த நிலத்தை இழத்தல். இது நாடெங்கும் காணப்படும் நிகழ்ச்சி. அரசியலாரும் அவ்வாறு சட்டம் செய்ய, ஊரிலுள்ள மிராசுதார்களும் பத்திரிகையில் தங்கள் படம் வரும், அல்லது பெரியவர்களால்—சிவசண்முகத்தின் சிபாரிசால்—ஒரு பதவி அல்லது வியாபாரம் வரும் என எண்ணிக் கதவைத் திறந்து பூட்டிவைத்தலால் ஏழை மகன் வாட்டம் நீங்கான். எண்ணம் வேண்டும். உள்ளத்தே எண்ணுமாறு வேண்டுகிறேன். ஏழைக்கு ஏற்றத்தை எண்ணுங்கள். அதற்கு உங்கள் உள்ளங்கள் திறக்கப்பட வேண்டும். திறக்குமா? சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

கோயில்களில் கோடிக்கான பொருள்கள் கேட்பாரின்றி முடக்கிக்கிடக்கின்றன. ஒரு சிலர் கையில் அப்பொருள்கள் அகப்பட்டு நல்வழிக்குப் பயன்படாது தேக்கப்பகின்றன. அறநிலைய அமைப்பைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட சபையும் அத்துறையில் சிறந்தமுறையில் பணியாற்றவில்லை என்பது பொது மக்கள் எண்ணம்.

ஆனால், இந்நிலை மாறிக் கொண்டே வருகிறது. பல கோயில்களின் செல்வமும் அவற்றின் வருவாயும் கல்விக்கும் பிற நல்ல வகைகளுக்கும் பயன்படுகின்றன. இந்த அளவில் பயன் பட்டு அவை நாட்டை வாழ்விக்க வேண்டும்.

பெருஞ் செல்வம் மதிற்சுவர்களுக்குள் செலவு செய்ய வழியறியாது வாடிக் கிடக்க, எதிரில் குந்தக் குடியசையற்று, கட்டக் கந்தையற்று, குடிக்கக் கூழற்றுக் கோடிக்கணக்கான மக்கள் வருந்தும் காட்சியாகவன்றோ இன்று நாட்டுக் காட்சி—சமயக் காட்சி—கோயிற் காட்சி அமைந்திருக்கின்றது? கோயிலுக்கென அமைக்கப்பட்ட அழகிய அணியரங்குகள் வௌவால் பறக்கும் நிலையிலேதானே இருக்கின்றன? அக்கோயில் மண்டபங்களெல்லாம் கல்விச் சாலைகளாகமாறின் பயன் உண்டே! இவற்றையெல்லாம் எண்ணுமா உள்ளம் ? எண்ணித் திறக்க வழி கோலுமா ?

தாழ்த்தப்பட்டவனுக்கு—ஏழை என்று ஒதுக்கப் பட்டவனுக்கு — ஊர்தோறும் 'பாகிஸ்தான்' தேடிக் கொடுத்து, அவனை ஓர் ஒதுக்கிடத்தில் வாடவிட்டு உல்லாச உப்பரிகை வாழ்வு நடத்தும் புன்மை, உலகில்—நாட்டில்—நிலத்தில்— இருக்கும்வரையில் உள்ளம் மூடப்பட்டதேயாகும். ஒருவன் உண்ண உணவுக்கு ஏங்க, மற்றொருவன் உணவு செரிக்க மாத்திரை உண்கின்ற அநாகரிக வாழ்வு இருக்கும் வரையில் உள்ளம் மூடப்பட்டுத்

தான் கிடக்கும். ஒருவன் கட்டக் கந்தைக்கும் கையேந்தி நிற்க, மற்றவன் பட்டுடுத்துப் பொன் பூண்டு காரில் நாயுடன் பவனிவரும் பாழ் வாழ்வு இருக்கும் வரையில் உள்ளம் மூடப்பட்டதுதான். ஒருவன் வாடி வருந்தி உழைக்க மற்றவன் அவ்வுழைப்பின் பலனை உறிஞ்சி உல்லாச வாழ்வு வாழும் வரையில் உள்ளம் மூடப்பட்டது தான். 'உள்ளம் திறக்கும் நாள் உளதோ!' என்று ஏழை மக்கள் ஏங்குகின்றூர்கள்; 'ஏனிந்த வேறுபாடு?' என்று கூக்குரலிட முயல்கின்றூர்கள். அவர்தம் வாட்டத்தை சில அரசியல் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கின்றன. இந்நிலையில் நல்லவர்கள் கூடி நின்று வன்கண்மையை இல்லையாகச் செய்யலாம். ஏழை மக்கள், 'உழைக்கும் உடமை நமதாகச் செய்வோம் !' என வீறு கொள்கின்றனர். ஆனல், பணம் அவ்வெண் ணத்தை முறியடிக்கிறது; பட்டமும் சட்டமும் அவர்களைப் பராரியாக்குகின்றன. கோயில் திறப்பினைச் செய்த அரசிய லார், அவர் தம் வாழ்வமைப்புக்கு வழி திறக்கவும் சட்டம் செய்ய வேண்டும். இந்திய ஆட்சி மன்றத்தே அது போன்ற சட்டம் வருமெனக் காண்கின்றோம். உண்மை யில் நல்லவர் உள்ளம் திறக்குமானல், ஏழைகளை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானல், 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித் திடும்' வீர வாழ்க்கையில் அவர்கள் வாழ விரும்பினர்க ளானல், செயலால் செய்ய வழி உண்டு. சிந்தை திறக்க நெறிகாட்டும் இத்துறையில் சிலர் உழைக்க முன் வந்துள் ளனர். வினேபாரின்பாவே தொடங்கிய பூதானமும், இந் திய அரசாங்கத்தார் எஸ்டேட்டு வரியும், சென்னையின் தஞ்சைப் பண்ணையாள் சட்டமும் இச் சிறந்த மாளிகை களின் முதற்படிகள்.

ஊர்தோறும் ஒருவருக்கும் ஒதுக்கிடம் வேண்டா; அனைவரும் எல்லாத் தெருவிலும் கலந்து வாழட்டும். அற

நிலையங்களுக்கெல்லாம்—கோயில்களுக்கெல்லாம் —இது வரையில் ஒதுக்கப்பட்டவர்கள் அறநிலையப் பாதுகாப் பாளர்களாக அமையட்டும், ஆயிரம் காணி வைத்து அல்லல் படுபவன், இல்லாதவனுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வழி செய்யட்டும். பண்டை முறைப்படி யாதொரு வேறுபாடும் இல்லாது அனைவரும் இறை வனைத் தொட்டு வழிபாடு செய்ய வகை காணட்டும். சாதியால் வேறுபாடு, சமயத்தால் வேறுபாடு என்ற மாறுபட்ட கொள்கைகள் மண்மூடிப் போகட்டும். பொருள்கள் அனைவருக்கும் பொது என்று முரசறை யட்டும். ஒருவன் உழைக்க மற்றொருவன் குபேர வாழ்வு வாழ வழி இல்லை என்று சட்டம் செய்யட்டும். 'உழைத் தால் உணவு; அன்றேல் அவதி,' என்ற ஆக்க வழி கோலட்டும். கோயில்கள், குளங்கள், மடங்கள், பிற பொருள்கள் அனைத்தும் என்றும் யாவருக்கும் உரியன என்று முடிவு காணட்டும். 'வாழ்ந்தால் அனைவரும் வாழ்தல்' என்ற நல்ல குறிக்கோளை வாழ்விடை நடத்த வழி கோலட்டும். இவற்றையெல்லாம் செயலில் காட்ட முன் வரின், அன்று நாடு வாழும்; நாம் வாழ்வோம்; நலமெ லாம் வாழும், அதற்கு அனைவர் உள்ளமும்—சிறப்பாக அரசியலில் உள்ளவர் உள்ளமும், செல்வர் உள்ளமும் திறக்கப்பட வேண்டும், இன்றேல், அவர்கள் 'செய்வ தெல்லாம் வெளி மயக்கு என்பதை மக்கள் உணர நாளாகாது. உணரத் தொடங்கி விட்டார்கள். உணர்ச்சி யின் பலன் வேறு வகையில் மீறுவதன்முன் உற்ற உள் ளங்கள் திறக்குமா? திறப்பின் அதுவே முன்னேற்றப் பாதை முகிழ்த்தற் குரிய வழி !

# இதுவா முன்னேற்றம்? ★ ★

விசுவாமித்திரரின் சூட்சிகளுக்கு இலக்கானுன் அரிச்சந்திரன். உயர்ந்த சூரியகுலத்து ஒப்பற்ற மன்னனாய்த் தோன்றி மாநிலம் காவல் செய்த அரிச்சந்திரன், கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக அனைத்தையும் இழந்தான். உள்ள பொருளை யெல்லாம் கொடுத்தும் மேலும் பொருள்தர வேண்டியிருந்தமையால், விசுவாமித்திரருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற மனைவியையும் மகனையும் அடகு வைத்தான் அரிச்சந்திரன். அடகு வைத்தல் என்பது ஒரு பொருளைப் பணத்துக்கு ஈடாக வைத்துப் பணம் பெற்றுக்கொண்டு, பின் பணம் கிடைத்த பொழுது அப்பணத்தைக் கொடுத்து வைத்த பொருளை மீட்டுக்கொள்வது. நகை முதலிய பொருள்களையும், வீடு தோட்டம் நிலம் முதலியவற்றையும் அடகு வைத்துப் பொருள் பெற்றுக்கொண்டு வாணிபம் புரியும் மக்களைக் காண்கின்றோம். அதற்கென அரசாங்கத்தார் பல வரையறைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். ஆம்.

இதே நிலையிலேதான் அரிச்சந்திரன் தன் கடனுக்காக, மனைவியையும் மைந்தனையும் ஒருவரிடம் அடகு வைத்துப் பொருள் பெற்றான். 'இது புராண வரலாறு; என்றோ நடந்ததாகப் புலவர் எழுதிய கதை' என்று நாம் பேசுகின்றோம். அந்தப் பழங்காலத்திலிருந்து எத்தனையோ வகையில் மக்கள் இனம் முன்னேறிவிட்டதென்று கூட்டங்கள் கூடிக் கூவிப் பிதற்றுகின்றோம்; ஏட்டில் எழுதுகின்றோம்; ஆனால், நாட்டில்—நாட்டு வாழ்வில்—அந்த மாற்றம் உண்டா என்று கேட்கின், இல்லை என்றே வெளியாகும் செய்திகள் பதில் தருகின்றன.

அரிச்சந்திரன் காலத்தைக் காட்டிலும் இன்று மக்களினம் எவ்வளவோ முன்னேறிவிட்டது என்பர் சிலர். மக்களை அடகு வைத்தல் போன்ற செய்திகளை அவர்கள் கண்டிருப்பார்கள். ஆனால், எப்படியோ உலகம் முன்னேறிவிட்டது என்று கூறத் தயங்குவதில்லை. ஆம். ஒரு வகையில் முன்னேற்றந்தான். கொடுத்த வாக்கை மீறலாகாது என்ற ஒரு மெய்ம்மை நெறிக்காக நாட்டையும் பிற செல்வங்களையும் இழந்து, உற்ற மனைவியையும் மக்களையும் இழந்து, தன்னையும் காசுக்கு அடிமைப்படுத்தினான் அன்றைய மனிதன் அரிச்சந்திரன். இன்றைய மனிதன், வாக்குறுதி என்ற ஒன்றையே வரலாற்றில் வைத்துவிட்டு, வாழ்வில் அதைக் காற்றில் பறக்கவிட்டு, வேளைக்கொன்று வாக்களித்து, விடிந்தால் வேறொன்று கூறி, இறுதியில் எல்லாவற்றையுமே இல்லையென்று போக்கடித்து, மற்றவர் தம் செல்வங்களைக் கெடுத்துத் தான் மட்டும் தருக்கி வாழும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுவிட்டான்! இது முற்றிலும் உண்மைதான். அன்றைய மனிதன் அரிச்சந்திரன், தான் அரசனாதலால், தானே மற்றவர்களுக்காக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற கடமை உணர்ச்சியை மேற்கொண்டு மற்றவர்களுக்குச் சொல்லி உபதேசிப்பதைக் காட்டிலும்

செய்து செயலில் காட்டிஞல்தான் 'மன்னன் எவ்வழி, மன்னுயிர் அவ்வழி,' என்பதுபோல நாடு நேரிய வழியில் செல்லும் என அறிந்து, தானே சொன்ன சொல்லை இல்லை என்ருல் தரணியில் வாழும் மக்கள் நிலை கெடுவார்களே என்று ஏங்கி, அச்சொல் மாருமல்—அச்சொல்லுக்காக அனைத்தையும் இழந்து, நாட்டுக் காவலை மறந்து, சுடுகாட்டுக் காவலை மேற்கொண்டான் இன்றைய மனிதனே, அரசியலிலே எதை வேண்டுமாஞலும் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டு, அதற்கேற்ப 'அரசியல் அயோக்கியர்களின் சூதாடுகளம்' என்று மேலைநாட்டுப் பெரும்புலவரும் கூறியுள்ளார் என்று சான்றுங் காட்டிக்கொண்டு, மக்களை ஆளும் தன்மையால் தான் எப்படி மாறினும் கவலையில்லை என்று வேளைக்கொன்றும் நாளைக்கொன்றும் காட்டியும் கூறியும், அவ்வாறு செய்வதை வேறு 'அரசியல் தந்திரம்' என்ற பெயரிட்டுச் சிறப்புறச்செய்து, வெற்றி பெற்ருல் செம்மாந்து தருக்கியும், தோல்வியுற்ருல் 'வெற்றிகரமான வாபஸ்' என்று பெயரிட்டும் வாழ்கின்ற அளவுக்கு முன்னேறி விட்டான்! அன்றைய மனிதன் அரிச்சந்திரன், உற்ருராயினும் யாதொரு வேறுபாடும் காட்டாது, சுடலையில் தன் மைந்தனைச் சுட வந்த மனைவியிடத்தும் சுடுகாட்டுக்குக் கட்டவேண்டிய கட்டணத்தைத் தவருது கட்டத் தான் வற்புறுத்தி வாங்க வழி செய்தது மல்லாமல், தானே தன் மனைவியைக் கொல்ல வந்த கொடும் பொழுதிலும் உள்ளம் குலையாது கடமை வழித் தனிநின்று பணியாற்ற முன்வந்தான். இன்றைய மனிதனே, எதற்கெடுத்தாலும் சாதியாலும் சமயத்தாலும், நீதியாலும் நிறத்தாலும், கட்சியாலும் கொள்கையாலும் மனித இனத்தையே பலவாருகப் பிரித்து, 'யார் எது கூறினும் கூறுக' என்று அஞ்சாது அவனவனுக்கு உற்றவரை ஓம்பி, மற்றவரை வெறுக்கும் அளவுக்கு

முன்னேறிவிட்டான்! இவ்வாறு அன்றைய நிலையைக் காட்டிலும் இன்றைய மனிதன் எத்தனையோ வகையில் முன்னேறிவிட்டான் என்பதை வரிசையாகப் பலபடச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், உண்மையில் அவன் முன்னேறியதுண்டா? வழுக்கி வீழ்ந்தவன் தானே இன்றைய மனிதன்? மேலும், இவ்வாறு பல துறையிலும் முன்னேறிய மனிதன் அடகு வைக்கும் அடிமை வாழ்வில் மட்டும் இன்னும் அரிச்சந்திரன் வாழ்ந்த அந்த நாளிலிருந்து ஒரு சிறிதும் முன்னேற வில்லை என்பது கண்கூடு. நாள் இதழ்ச் செய்தி அதை உறுதிப்படுத்துகிறது.

நாட்டில் வாழ்கின்ற மனிதன் காட்டில் வாழும் விலங்குகளினும் மேலானவன் என்கின்றார்கள். ஆனால், நாட்டு நிகழ்ச்சிகள் உண்மையில் மனிதன் மிருகமாகி வருவதைக் காட்டுகின்றன. வன விலங்குகள் ஒன்றை யொன்று பகைக்கும்; ஒன்றை யொன்று கொல்லும். மனிதனோ, மிகக்கொடிய ஆயுதங்களால்—அணுக்குண்டு முதலியவற்றால்—நல்லவர் அல்லவர் எல்லோரையும் ஒரு சேரக் கொன்று கூத்தாடுவான். வன விலங்குகளில் கொடிய சிங்கம் தனக்குப் பசி எடுத்தாலன்றிப் பிற உயிர்களை வருத்தாது என்று சொல்வார்கள். கரடியோ, இறந்தவரைத் தீண்டாது என்பார்கள். இவைகள் உண்மையாயின், மனிதன் இக்காட்டு மிருகங்களினும் கொடியவனாவன். தான் மகிழ வேண்டும் என்பதற் காகவே மற்றவர்களுக்கு மட்டற்ற துன்பம் இழைப் பதும், கெட்டவரை மேலும் அடுத்துக் கெடுப்பதும் வழக்கமாக நாட்டில் நிகழ்கின்றன அல்லவா? ஆம்! இந்த நிலையில் மனிதன் எந்த வகையில் மிருகத்தினும் முன்னேறிவிட்டான்? இது நிற்க,

நாள் இதழ்ச் செய்தி நம் உள்ளத்தைத் தொட்டது என்று கூறினேன். அச்செய்தியைப் பலரும் படித்

திருப்பர். படித்தாலும் ஏதோ என்று விட்டிருப்பர். படித்தும் அதில் கருத்தும் கவலையும் செலுத்தாதிருப்பர். எனக்கென்னவோ, அச்செய்தி படித்ததுமுதல் சிந்தை தடுமாறுகிறது; இதுவும் இந்த நூற்றாண்டின் இடைக்கால நாகரிகமா என்று கேட்கத் தோன்றுகிறது. அச்செய்தி இதுதான்; நாகபுரியிலே இருந்து வந்தது. நம் பொன்னாட்டின் நடு நாட்டு நிகழ்ச்சி இது.

மத்திய நாட்டிலே ரைகார் ஜில்லா ஒரு பகுதி போலும். அங்கே வாழ்ந்த தேரா பெல்டார் என்பவருக்குப் பணம் தேவையாய் இருந்தது. அதற்காக, பிரேமியா பெல்டாரிடம் சென்று கடன் கேட்டார். அவர், 'அடகுப் பொருள் இருந்தால்தான் கொடுப்பேன்' என்றாராம். பாவம் பணம் வேண்டியவர் ஏழை. அடகு வைக்கப் பொருளில்லைபோலும்! அழகிய அவர் பெண் ஒருத்தி அருகிருந்தாள். அவளை அடகு வைத்து ரூ. 675 கடனைப் பெற்றாராம். பணம் கொடுத்து, ஒரு நாள் குறித்து அந்நாளில் பணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்றும், அன்று தாராவிடில் அடகுப் பொருள் —அப்பெண்—கடன் கொடுத்தவனுக்கு உரியவளாவாள் என்றும் முடிவு போலும்! பாவம்! பணம் வாங்கினவருக்குக் கொடுக்க வழியில்லை. பெண்ணை அக் கடன்காரருக்கு ஒப்படைக்க வேண்டும். இவர் ஒப்படைக்கும் வரையில் கடன்காரர் காத்திருக்கவில்லை. பணம் கொடுத்த அந்தப் பிரேமியா பெல்டார் கடன்காரரைத் தேடி வந்து அப்பெண்ணை அனுப்புமாறு கேட்டார். அவர் கேட்டுத் தன்னைக் கொடுக்கும் வரையில் அப்பெண் அங்குக் காத்திருக்கவில்லை; மானம் தாளாது அருகிலே உள்ள ஆற்றில் வீழ்ந்து மடிந்தாள். அடகு ஏற்பாட்டின்படி கடன் கொடுத்தவருக்கு உரிய பொருள் போயிற்று, அவர் பொருள் இழந்து ஏமாந்தார்: இது தான் வெளி வந்த செய்தி. 'என்ன! இப்படியும் இருக்-

குமா இந்த நூற்றுண்டில்?' என்றுதான் உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறது. மயங்க வேண்டா. 26–9-53 தினமணியைப் புரட்டிப் பாருங்கள். நாகபுரியின் செப்டம்பர் 24-ஆம் தேதியிட்டு, 'அடகுப்பெண் ஆற்றில் விழுந்தாள்' என்ற தலைப்பில் இச்செய்தியைக் காண்பீர்கள்.

'பத்திரிகையில் வரும் செய்திகள் அத்தனையும் உண்மை என்று இந்தக் காலத்திலேதான் கொள்ள முடியவில்லையே! அது போன்று ஒரு வேளை வேடிக்கைச் செய்தியாகவும் இது இருக்கலாம்,' என்று முதலில் நினைத்தேன். ஆனால், 'நாளும் தேதியும், ஊரும் பேரும், தொகையும் பிறவும் திட்டமாகக் குறிப்பிட்ட பின் ஐயப்பட இடமில்லையே!' என்றது என் மனம். செய்தி பொய்ச்செய்தியானால், கவலை இல்லை; உண்மையில் நடந்த ஒன்றாய் இருந்து விட்டால்...

செய்தி சிறியதுதான். சிந்தித்துப் பார்க்கும் செயல் வீரர்களுக்குத் திக்கெல்லாம் தீமூட்டும் கொடுஞ் செய்தியல்லவா இது? இதைப் படித்ததும் என் பக்கத்திலிருந்து ஒரு நண்பரைப் பார்த்து, 'இந்த இருபதாம் நூற்றுண்டிலா, அதுவும் உரிமை வாழ்வு பெற்ற நம் இந்திய நாட்டிலா இக்கொடுமை?' என்று கேட்டேன். அவர் மிகச் சாவதானமாக, 'ஆமாம். இது போன்ற செயல்கள்—அப்பக்கங்களில் சாதாரண மனிதர்களை அடகு வைக்கும் அடிமை வழக்கங்கள்—உண்டு,' என்று கூறினர். இன்னும் என் சிந்தனை நீண்டது.

**''ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் மில்லை**
**சாதியில்'**
**இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில்**
**இல்லையே.'**

என்று எக்களிப்புடன் பாடினரே அந்தப் பாரதியார், இந்தச் செய்தியைப் படித்தால் என்னுவார் என்று கேட்டது என் மனம். அடிமை நாட்டிலாவது இந்த அவதியை ஒருவாறு பொறுக்கலாம். உரிமை நாட்டிலேயே—நம்மை நாம் ஆளும் நாட்டிலேயே—இந் நிகழ்ச்சியா என்று எண்ண உளம் தடுமாறிற்று. மனிதன் மனிதனை அடிமை கொண்டு வாழ்ந்த அமெரிக்கா போன்ற நாடுகளிலே 'நீகிரோ' அடிமை இல்லையென்று அன்ருடம் அவர்தம் பத்திரிகைகள் நமக்குப் பறை சாற்றுகின்றன. வாழ்வைப் பொருளுக்குப் பணயம் வைக்கும் வழியில் மனிதன் வாழ்வதிலும், அவன் மாய்தல் எவ்வளவோ மேல்தானே! உண்மையில் ஒரு சிலர் உயர்ந்த வாழ்வு வாழ, பெரும்பாலான மக்கள் தத்தம் வாழ்நாட்களை யெல்லாம் மற்றவர்களுக்கு ஒப்படைத்து அவர்கள் தரும் ஊதியத்தைக்கொண்டு வயிறு வளர்க்கும் காலம் இது என்பதை அறியாதார் யார்? மனித இனம் ஒருவரை ஒருவர் பற்றி வாழக் கடமைப்பட்டதுதான். உலகம் அனைத்தையுமே ஒன்றெனத் தழுவி, எல்லோரையும் நம்பி, ஒருவர் மற்றவருக்காக வாழ்கின்றதை எண்ணி, ஒன்றிய உணர்வில் உற்று வாழ்தல் மனித வாழ்வின் இலட்சியம். ஆனல், ஒருவன் மற்றவனது அடகுப் பொருளாகி, அடிமை என்னும் பெயரில் அல்லும் பகலும் உழைத்து நிற்க வேண்டும் என்ற நியதியில் நாட்டு நிலை செல்லின், அது அறிந்து வருந்தாதிருக்க முடியுமா?

நாகபுரி நாட்டு வாசி மகளை அடகு வைக்கும் அளவுக்கு என்ன வந்துவிட்டது? நாமறியோம். எனினும் அது நாட்டு நிலையை ஒருவாறு காட்டுகிறது. நாட்டில் மக்களை அடகு வைக்கும் முறைதான் பல வகையில் வழக்கத்தில் உள்ளது. வரதட்சிணை என்பது அம்முறைகளின் நெறியிலே ஒரு தனிப்பட்டது. பொருளை அடகாக

வைத்துப் பொன் பெறுகின்ற அடகு முறையிலும், பொருளையும் கொடுத்துக் கூடவே பெண்ணையும் கொடுத்தல் ஒரு தனிப்பட்டதுதானே? ஆள் அடிமையாகிய அடகு இன்னும் நாட்டுப்புறங்களில் தீராத பிரச்சினையாகவே உள்ளது. 'காலில் நகமுளைத்த கால் முதற்கொண்டு அடிமை வாழ்வு' வாழ்ந்ததைக் காட்டும் காட்சிகள் நம் மனக் கண்முன் நிற்கின்றன். எனினும். இப்படிப் பெண்ணை அடகுப் பொருளாகப் பணயம் வைக்கின்ற காட்சி நமக்குப் புதிதாகவே உள்ளது.

பாரதத்திலே திரௌபதியைப் பணயமாக வைத்துச் சூதாடுகின்றான் தருமன். அதில் அவன் தோற்க, அதற்காகப் பணயப் பொருளாய் நின்ற திரௌபதி, பற்றி ஈர்க்கப்படுகின்றாள். ஆனால் அவள் அதற்கு முன் அத் தருமன் 'தன்னைத் தோற்று என்னைத் தோற்றானா?' என்பது போன்ற கேள்விகளைக் கேட்டுத் தன்னை அடகு வைத்தது தகாதது எனக் காட்டுகின்றாள். ஆனால், இந்தப் பேதைப் பெண் அப்படி ஒன்றும் கேட்கவில்லை. அயலான் கைப்படுமுன்–ஏன்—கண்ணிற்படுமுன் 'சாதல் நலம்' என்று ஆற்றில் விழுந்து இறந்தாள்.

இந்நிகழ்ச்சி பத்திரிகை அளவில் வந்ததால் இந் நாட்டில் பாராளும் மன்றத்திற்கும் இது எட்டியிருக்கத் தானே வேண்டும்? இந்திய யூனியனும் இது பற்றி அறிந்திருக்கத்தானே வேண்டும்? ஆம். அவர்கள் இக் கொடுமை நீக்க என்ன வழி செய்தார்கள் என்பது ஒருவேளை மேல் வரும் செய்திகளால் விளக்கமுறலாம். அதை நாம் இனியும் பொறுத்திருந்து காண்போம். எனினும், இம்மனிதன் இப்படி முன்னேறிக்கொண்டே செல்வதாகக் கூறிக் கொண்டு பாழுங்குழியிலேயா—படுபாதாளத்திலேயா—இன்னும் இருக்க வேண்டும்

என்ற எண்ணம் அனைத்தினுக்கும் மேலாக எழுகின்றது. இதுவா முன்னேற்றம்? இதற்காகவா பாரதியார் 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை சாதியில்' என்று பாடினார். அந்தோ இன்று அப்பாரதியார் வந்தால்...

# பாரதியார் வந்தால் ★ ★

நிலையா உலகில் நிலைத்த புகழை நாட்டி, மாண்டு மண்ணோடு மண்ணாய் மறைந்தார் பாரதியார். ஆம். அவர் இனிமேல் திரும்பி வரமாட்டார் என்பது உறுதி. அதை உணர்ந்தேதான் பலர் அவரது பெயரைக் கூறிக் கொண்டே பல கொடுமைகளை இழைக்க முற்பட்டுள்ளனர். ஆனால், எதிர் பாராத விதமாக, ஏதோ இப்போது விளைகின்ற விஞ்ஞான முறைகளின் முயற்சியால் ஒரு வேளை மீண்டு வருவாராயின்...! வந்தால் என்ன?

இது எண்ணிப் பார்க்க வேண்டுவதுதான். இதோ இன்று செப்டெம்பர் 11-ஆம் நாள் நாடெங்கும் கொண்டாடப்படுகிறது. அவர் பிறந்த எட்டயபுரத்தில் மெய்யடியார்கள் கட்டிய மண்டபங்கூடக் கண் முன்னே காட்சி தருகிறது. ஏன்! வானொலியில் அரசாங்கத்தார் அவர் பாடலைப் பாடக்கூட ஏற்பாடு செய்துள்ளனர். ஆம். ஒரு வேளை அந்தப் பாரதியார் உயிர்த்தெழுந்து வருவாரானால் இச் செயலை எல்லாம் கண்டு சிந்தை

மகிழ்வார் என்று தானே நாமெல்லாரும் நினைக்கிறோம்? நினைப்பார்; நெஞ்சம் குலைந்து சாம்புவார்.

பாரதியார் இன்று இருப்பாரானால், 'ஐயோ! இதற்காகவா நாம் சுதந்தரம் வேண்டிப் பாடினோம்!' என்று எண்ணி ஏக்கமுறுவார் என்பதில் ஐயமில்லை. பாரதியார் இந்தியாவின் அடிமை விலங்கை அறுக்கப் பாடினார்; மக்கள் வாழ்வை மலர்விக்கப் பாடினார்; மன்னனும் ஏழையும் ஒன்றென்பதை உணர்த்திப் பாடினார்; சாதி பேதமற்ற சமுதாயம் வேண்டிப் பாடினார்; அவற்றுடன் பிறந்த தமிழ் நாட்டை நினைந்து பாடினார்; தமிழர் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்று பாடினார்; உலகில் தமிழ் மொழி போலத் தலை சிறந்த மொழி இல்லை என்று எக்களித்துப் பாடினார். ஆனால், பாடிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. பாடிய அக்கலைஞரும் மாண்டு பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவர் இறந்து எத்தனையோ ஆண்டுகள் கழித்து அவர் விழைந்த விடுதலை கிடைத்தது. கிடைத்தும் என்? அவரைப்போன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் பாடியும் பாடுபட்டும் சிதைந்தும் சிறையிடை உழன்றும் பெற்ற சுதந்தர நன்னாட்டிலேதான் நாம் வாழ்கின்றோம். விரும்பிய சுதந்தர நாட்டில் இன்று பாரதியார் வந்தால் எவ்வளவு மகிழ்வார் என்று எண்ணத்தானே தோன்றுகிறது! ஆனால்... ..அவர் வந்தால்...!

'வந்தால் என்ன? வரட்டும். காட்டுவதற்கு வரண்ட தமிழ் நாடு இல்லையா? வாயாரப் பேசும் வெற்றுரைத் தமிழர்கள் இல்லையா? 'தமிழ் மொழி என்ன—எழுத்துக்களே எக்கேடு கெட்டால்தான் என்ன?' என்று கூறும் அறிஞர்கள்தாம் இல்லையா என்று தமிழ் உள்ளம் படைத்தார் கேட்கலாம்.

'வந்தால் என்ன? வறுமைக்குக் குறைவா? அவர் காலத்தில் இருந்ததைக்காட்டிலும் பிச்சை எடுக்கும் பெருங்கும்பல் அதிகரித்துள்ளதைக் காட்ட முடியாதா? சாதி வேண்டாவென்று கூறிக்கொண்டே, தனித்தனிச் சாதிகளின் மகாநாடுகளைக் கூட்டி அவற்றால் தாமே பயன் பெற்று, அவரவர் சாதியையும் அதன் மூலம் உண்டாகும் வெறியையும் வளர்த்துக்கொண்டிருக்கும் வாய் வீரரைக் காட்ட முடியாதா? எழுத்தில் எல்லோரும் ஒன்று என்று எழுதி வைத்து, ஊர்தோறும் சேரிகளை வளர்த்து வரும் சீர்திருத்தவாதிகளுக்குத்தான் பஞ்சமா? 'பேசும் படங்கள், நாடகங்கள் மூலம் கலையையும் சமயத்தையும் வளர்க்கின்றோம்!' என்று பறைசாற்றிக் கொண்டே, மற்றவர்களைப் பழிப்பதையே தம் தொழிலாகக் கொள்ளும் கலைவாணர்களைக் காட்ட முடியாதா? சாவடியும் சத்திரமும் கோயிலும் பள்ளியும் ஏழைகள் பொருட்டு இனமாகக் கட்டித் தருவதாகச் சொல்லி, அதற்கு வேண்டிய பொருள்களைப் 'பர்மிட்டு' மூலம் பெற்று, அவற்றை ஒன்றுக்கு மூன்றாக விற்று, தருமம் செய்வதாகக் கணக்கிடும் தொகையைக் காட்டிலும் பன்மடங்காகப் பொருள் பெருக்கும் பெரிய மனிதர்களுக்குத்தான் நாட்டில் பஞ்சமா? செய்யத் தகாத கொடுமைகளையெல்லாம் செய்துவிட்டு, அக்கொடுமைகள் மறைய ஆண்டவனுக்கு வைரமுடி சாத்தி மறைக்கும் பெருஞ்செல்வர்களுக்குத்தான் நாட்டில் குறைவா?' என்று சமூக சீர்திருத்தவாதி ஒரு புறம் கேட்கலாம்.

'வந்தால் இதோ, அரசியலிலேதான் எத்துணைச் சீர்திருத்தங்கள்! உலக அரங்கத்தில் எத்தனை முன்னேற்றம்! எவ்வளவு திட்டங்கள் ஏட்டில் தீட்டப் பட்டுள்ளன! எவ்வளவு உத்தியோகங்கள் அதிகரித்துள்ளன! வேண்டியவர்களுக்கு, வேண்டிய உத்தியோகங்கள் தரப் புதுப்புது பிரிவுகள் எத்தனை உண்

டாக்கப்பட்டுள்ளன! ஒரு புறத்தே 'நாங்கள் உரிமைக்குப் பாடு பட்ட காரணத்தால் ஐந்து ஏக்கர் நிலம் வேண்டும்' என்று போர் ! மற்றொரு புறத்தில் உண்மையிலே பாடு பட்டு, உழைத்து, விடுதலையைத் தேடித்தந்த நல்லோர் கள் கேட்பாரற்றுக் கிடக்க, அன்று ஆங்கில அரசருக்குத் துணையாயிருந்த பெரியவர்களையெல்லாம் அழைத்துச் சட்டங்கள் செய்யவும், பட்டங்கள் ஆளவும் சொல்ல வில்லையா ? ஜனநாயக வாழ்வு தேவை என்று பறை சாற்றிக்கொண்டே அந்த ஜனநாயகத்தைப் படுகுழியில் புதைக்கும் தலைவர்களுக்குத்தான் பஞ்சமா ?

அனைத்தையும் தனி உடைமையற்ற அரசாங்கப் பொது உடைமையாக்கி மக்களுக்கு நன்மை செய் வோம்,' எனக் கூறிக்கொண்டே அப் பொதுஉடைமைச் செயலால் மக்களுக்கும் அதில் பணியாற்றுவோருக்கும் எல்லையில்லாத் தொல்லை தரும் நல்ல பணிகளைத்தான் காட்டாதிருப்போமா ? உண்ண உணவற்று எண்ணற்ற மக்கள் பட்டினியால் வாடி மடிவதைக் கவனியாது, அவர் தம் வாட்டம் தீர்க்க வழி காணுது, ஊரையும் பேரையும் பற்றிப் பெருங் கலாம் விளைக்கும் தலைவர்களையும், அவர் களை எப்படியாவது அடித்து ஒழிக்க வேண்டும் என்ற ஆணையாளரையும் காட்ட முடியுமே !' என்று அரசியல் வாதி கூறுவான்.

ஆம் ! இப்படியே ஒவ்வொரு துறையிலும் காட்டிக் கொண்டே போகலாம். அந்தப் பாரதியார் உரிமை நாட்டில் பெற விழைந்த எத்தனையோ இன்று பெறப் படாமல் உள்ளன. பெற வேண்டுவதைப் பெற முடியா விட்டாலும் கவலையில்லை. சமூகத்துக்கே கொடுமை இழைக்கும எத்தனையோ பேர், நாட்டில் பெறத்தேவை யற்ற ஆணையுடன் உலவுகின்றதைக் காணத்தான் உள்ளம் நடுங்குகிறது ! கண்ணீரையும் செந்நீரையும்

சிந்தி, உயிரையே தியாகம் செய்து, காந்தியடிகள் முதல் பலர் பாடு பட்டுப் பெற்ற சுதந்திர நாட்டில் இன்று இந்த நிலை இருப்பதைக் கண்டால்—இறந்த பாரதியார் எழுந்துவந்து கண்டால்—என்ன நினைப்பார்? 'செப்டெம்பர் பதினோராம் நாளில் தமிழ் நாடெங்கும் பாரதியாரின் பாட்டு முழங்கும். அவரைப் பற்றிய பேச்சு விண்ணை முட்டும். இவற்றைக் கேட்டால் பாரதியார் ஒரு வேளை சொக்கிப்போவார்!' என்று நினைக்கக் கூடும். ஆனால், பாரதியார் அவ்வளவு ஏமாளியல்லர். வெளி நாட்டார் யாராவது நம்மைக் காண வந்தால், அவர்களை உல்லாசப் பவனியால் ஊக்கி, உப்பரிகைகளில் இருத்திகான, இசைகளையும் கலைக் காட்சிகளையும் கேட்கவும் காணவும் செய்து, நகரசபை மண்டபத்து நல்வரவேற்பளித்தலைக் கொண்டே, வந்தவர்கள், 'இந்தச் சென்னையைப் போன்ற சிறந்த நகரம் இல்லை!' என்று புகழ்ந்து போவார்கள்! அவர்கள் அறிவார்களா, பஸ் நிற்குமிடந்தோறும் பட்டினிப் பட்டாளப் படையெடுப்பையும். தெருக்களில் சமைத்துத் தின்னும் சீரழிந்த கூட்டத்தையும், கொசுக்கள் கூடிக்கொல்லும் ஏழைகள் வாழிடங்களையும்! ஆனால், பாரதியார் அத்தகைய ஏமாளிகள் கூட்டத்தில் ஒருவராக வைத்து எண்ணப்படமாட்டார்; அவர் அறிவார் உண்மையை—அமரத்துவம் பெற்ற காரணத்தால்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று எக்களித்துப் பாடினார் அவர். ஆனால், இன்று அத்தமிழ் மொழியில் மாசு சூழ்ந்துள்ளதை அறிந்தால், என்னுவார் அவர்! "கூறத்தகாதவன் கூறினான்' என்று அவரே கூறியபடி, தமிழ் மகனாய்ப் பிறந்தவனே இன்று தமிழுக்குக் கேடு சூழ்கின்றான்; தமிழை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டே தனிப்பட்டோரும் கழகங்களும் தமிழ்க் கொலைப்பணியில்

தலை சிறந்திருப்பதை நினைத்தால், தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் கூறிய

**' தமிழினைப்போல் இனிமை மொழி சாற்றுதற்கும் இல்லை"**
**இந்நாள்**
**தமிழரைப்போல் மொழிக்கொலையில் தலை**
**சிறந்தோர் எவர் உளரே ?'**

என்ற அடிகள்தாம் நினைவுக்கு வருகின்றன. 'புத்தம் புதிய கலைகளைச் சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை,' என்று கயவன் கூறியதாகக் குறிக்கிறார் பாரதியார். அந்தக் கொடுமையையும் தாண்டி, நல்ல வழக்கத்திலுள்ள 'ஆறு' என்ற தமிழ்ச் சொல்லிருக்க, 'நதி' என்ற சொல்லைத்தான் நிலநூலில்—அவர்கள் வாக்குப்படி பூகோள சாஸ்திரத்தில்—உபயோகிக்க வேண்டும் என்ற சட்டம் இடும் அளவிற்குத் தமிழ்க்கொலை நடப்பதை அவர் அறியின், அந்தோ ! அந்தக் கொலையாளர் வேறு தமிழ் ஆராய்ச்சியாளரும் ஆகிவிட்டால்......அப்புறம் தமிழுக்கு வாழ்வு ஏது? ஆம். இன்றைய வேகத்தில் தமிழ்மொழிக் கொலை தொடர்ந்து நடைபெறின்—எழுத்தும் சொல்லும் பொருளும் அனைத்தும் தமிழ் அறிஞர்களாலேயே சிதைக்கப்பெறின்-கி. பி. 2000 என்ற ஆண்டு வரும் போது, 'இந்திய நிலப்பரப்பின் தென் கோடியிலே பல ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் என்ற ஒரு மொழி வழக்கில் இருந்ததாம்,' என்று வேறொரு மொழியில் வரலாற்று நூலில் படிக்கும் அளவுக்குத்தான் தமிழ் வளரும். அந்தோ ! பாரதியார் இன்று வந்து இந்நிலையினைக் கண்டால் என்னுவார் ? ஒரு புறம் இலக்கியங்கள் வேண்டா என்ற கொலையும், மற்றொரு புறம் எழுத்துச் சிதைக்கும் கொலையும், பிற கொலைகளும் நடப்பதைக் கண்டு, 'தமிழ் நாடு தாய்க்கொலைக்குப்' பேர் போனதாயிற்றே, என்றுதானே வருந்துவார் ?

மொழி கிடக்க. சமுதாயந்தான் என்ன முன்னேற்றத்தைக் கண்டுவிட்டது! 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்!' என்று கதறினர் பாரதியார். இன்று சுதந்தரம் பெற்ற பின்னும் அந்த நிலை நீங்கிய பாடு இல்லையே! பட்டினிப் பட்டாளம் பெருகிக்கொண்டுதானே வருகிறது? சென்னை நகரில் ஒரு சிறந்த செல்வர் வீட்டு நாய்க்கு ஒரு நாளைக்குச் செலவாகும் தொகை கூட ஓர் ஏழைக்குத் திங்கள் ஒன்றுக்குக் கிடையாதே! இதைப் புள்ளி விவரத்தோடு வேண்டுமானலும், யாருமே சேகரிக்கலாம். இப்படி மனிதன் மிருகத்தினும் கேடாக மதிக்கப்பட்ட வாழ்க்கையைக் கண்ணாரக் கண்டும், அதைத் தீர்க்க எந்த அரசியல் கட்சியும் முன்னுக்கு வாராத நாட்டைக் காட்டிலும் 'கடும்புலி வாழும் காடு நன்றே' என்பது உண்மையிலும் உண்மை அன்றோ? மேடைப் பேச்சும் ஏட்டுக் கணக்கும் உண்மையில் நாட்டு வாழ்க்கையில்—நல்ல வழியில்—என்று செயலில் வருகின்றனவோ அன்றைக்குத்தானே உலகம் சீர்படும்? அதற்கு முன் பாரதியார் வந்தால் வம்புதானே! அவர் அன்று எழுதிய படி இன்று சகத்தினையே அழித்தாலும் அழித்துவிடுவாரே! இப்படி ஒரு புறம் ஏழைகள் வாடவும், மற்ருெரு புறம் விலங்குகளும் விலாப்புடைத்துண்டு பஞ்சணையில் உறங்கவும் காணும் உலகம் இருப்பதைக் காட்டிலும் அது அழிந்து ஒழிவதும் நல்லதுதானே? 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே', என்று உளம் கனிந்து பாடுகிருர் பாரதியார். ஆனல், இன்ருே, நண்பனையும் உள்ளத்தே பகைவனுக நினைக்கும் பான்மையில் மனித சமுதாயம் சென்றுகொண்டே இருக்கிறதே! உதட்டில் உறவும் உள்ளத்தில் பகையும் கொண்டு ஒருவனுக்கு மற்றவன் பள்ளம் தோண்டும் முறையில் சமுதாயம் சென்றுகொண்டிருப்பதை அறியா

தவர் யார்? இந்தச் சமுதாயத்தைக் கண்டால் பாரதியார் இதனுடன் கொஞ்சிக் குலாவுவாரா, கொதித்தெழுவாரா? நீங்களே சொல்லுங்கள்.

சமுதாயம் கிடக்கட்டும். அரசியல்தான் என்ன வாழ்கிறது! அதிலும் எத்தனையோ கொடுமைகள் மலிந்துள்ளன! அரசியல் அரங்கம், பதவி வேட்டைத் தலமாகிவிட்டதே யன்றிப் பணியாற்றி மக்களுக்குத் தொண்டாற்றும் இடமாய் இல்லையே! இன்னும் இன்றைய அரசியல் பற்றி எழுதின், அளவிலடங்காது. மற்றும், அது குட்டையைக் குழப்பியதாகவே முடியும். ஆதலால், அது பற்றி ஒன்றும் கூருது விடுத்து, உண்மையில் பாரதியாரைப் பாராட்டவேண்டுமாயின், அவர் சொன்னவற்றையெல்லாம் செயலில் கொண்டு வர முயல வேண்டுமே ஒழிய, வீண் ஆடம்பர விழாக்களும், மண்டபங்களும், மற்றைய ஆரவாரங்களும் பயனற்றன என்று கூறி முடிக்கின்றேன். பாரதியார் வாழ, அவர் புகழ் வாழ, அவர் வாய்மொழிப்படியே பணியாற்ற வாரீர்! அப் பணியேயன்றி பிற ஆரவாரங்களெல்லாம் இறுதியில் ஒன்றுமில்லாதனவாகவே முடியும்.

# ஒன்றுமில்லை ★ ★ ★

உலகம் தோன்றிய நாள் தொட்டு 'ஒன்றுமில்லை' என்ற சூனிய வாதமும் நிலவித்தான் வருகின்றது. கண்ணால் காண்கின்ற உலகமும், இவ்வுலகிலே காணும் பல வகைப்பட்ட பொருள்களும், அப் பொருள்களால் ஆகிய பயனும், இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாய் நிற்கின்ற பொருளும் நிலைத்த தன்மை உடையன என்று காண்கின்றவர் ஒரு சிலர். உலகி னுக்கும் உண்டாக்கிய இறைவனுக்கும் உள்ள சில வேறு பாடுகளை அறிந்து, அவற்றிற்கேற்ப நடந்துகொள்கின் றவர் ஒரு சிலர். உயிர் நிலையுள்ள ஒன்றாயிருப்பினும், அது உடலுள் புகுந்து உலகினுள் உலவுகின்ற காலம் மிகக்குறுகியதுதான் என்று அறிந்து, அக்குறுகிய காலத்துக்குள் அவ்வுடம்பு பெற்ற பயனைத் தாமும் துய்த்து உலகுக்குந் தம்மால் இயன்ற உதவியையும் புரிவர் அறிந்தோர். ஒருபுறம் உலகமே பொய் என் பாரும், மற்றொருபுறம் உலகம் மட்டுந்தான் மெய் என்

பாரும் வாழ்வதைக் காண்கிருேம் நாம். ஆனல் ஆழ்ந்தறிந்து நோக்கின், இரண்டுமே உண்மையற்றன என்பன தெளிவாகும்.

'உலகம் எக்கேடு கெட்டால்தான் நமக்கென்ன ?' என்று எண்ணித் தருக்கி வாழும் தன்னல வாதியர் இன்று உலகில் மிக அதிகமாக வளர்ந்துள்ளனர். என்னவாயினும் கவலையுருது, தம் வாழ்வே வாழ்வாகக் கருதி, வளம் பெருக்கி, மற்றவர் வாடத் தாம்வாழும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுவிட்டார்கள் அவர்கள். அவர்கள் பாதை ஒரு திருந்திய பாதையாகக் காணப் படினும், அதில் கல்லும் முள்ளும் நிறைந்திருப்பதை உணர்வுடையார் அறிவர். ஒரு சிலர் உலகை நோக்கி வருந்திக் கூறி, அவ்வுலக முன்னேற்றம் கருதியே தாம் அல்லும் பகலும் அனவரதமும் பாடு பாடுவதாகக் காட்டிக்கொண்டே, அவ்வுலகில் வாழும் ஏழைகளை ஏமாற்றிப் பொன்னையும் பொருளையும் பெருக்கித் தம்மை யும் தம்மைச் சேர்ந்தோரையும் வளர்த்துக்கொள்ளுவர். இவர்களைத் தவிர மற்றொரு சாரார், பசி பட்டினி என்று ஏழை மக்களிடம் பேசி, அவர்களிடமிருந்தே 'சந்தாத் தொகை' வாங்கிக்கொண்டு, அந்தப் பணத்திலேயே பட்டமும் பதவியும் பெற்றுப் பணக்காரர் ஆனதையும் பார்க்கிருேம். இவர்களாலெல்லாம் நாட்டுக்கு நன் மையா தீமையா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த உணர்ச்சி அற்ற மரக்கட்டைகளால் உலகுக்குத் தான் பயன் உண்டா என்று சிந்திக்கவேண்டும். ஆம்! சிந்திப்பின், முடிவில் உயர்ந்த உண்மை தோன்ருமல் போகாது.

ஒருவர் தம் நண்பரைக் கண்டு ஏதேதோ பேசிச் சிறிது உதவியும் பெற்று வரவேண்டுமென்று திட்ட மிட்டார்; வீட்டை விட்டுப் புறப்பட்டு, நண்பர் வீடு

போய்ச் சேர்ந்தார். நண்பர் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்; இவரைக் கண்டதும் 'வருக' என்று வரவேற்றார்; வந்த காரியம் என்ன என்று கேட்டார். இவர்—எவ்வளவோ சொல்லி, ஏதேதோ பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தவர்—'ஒன்றுமில்லே; சும்மா இப்படி உங்களைப் பார்த்துவிட்டுப் போகத்தான் வந்தேன்' என்றார். நண்பரோ, இவரை விடவில்லே; 'சும்மா வருவதாவது! ஏதாவது காரியம் இருந்தால்தானே நீங்கள் வருவீர்கள்?' என்று கேள்வி மேல் கேள்வி' எழுப்பினர். வந்தவரும் முதலில் ஏதோ உலக விஷயங்கள் பேசுவதுபோல ஆரம்பித்தார்; கொரியாச் சமாதானம் தொடங்கிக் கொத்தவாற்சாவடிப் பலசரக்கு விலேகள் வரையில் பலப்பல பேசிக்கொண்டே சென்றார். நண்பருக்கு இதுபோன்ற பேச்சுக்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பது பழக்கம். எனவே, அவரும் சளைக்காது கேட்டுக்கொண்டிருந்தார். கடைசியாக இவரும் தம் குடும்பத்தைப் பற்றிக் கூறி, தனக்கு வேண்டிய, பொருள்களைக் கேட்டுவிட்டார். நண்பர் நகைத்து 'ஐயா' உங்கள் 'ஒன்றுமில்லே'யில் இவ்வளவும் அடங்கியுள்ளதே! கொரியாவும் கொத்தவாற்சாவடியும், வீடும் பொருளும் யாவும் அடங்கியுள்ளனவே!' என நகைத்து, இவருக்கு வேண்டியதைக் கொடுத்தனுப்பினர்?.

இந்த 'ஒன்றுமில்லே'யைப் போல உலகில் எத்தனே பேர் ஒன்றுமில்லே என்று பேசுறார்கள்! அவர் தம் ஒன்றுமில்லா வாழ்வில் எத்தனேயோ உண்மைகள் பொதிந்துகிடக்கும். ஏன்? உலகமே... அதிலுள்ள பொருள்கள் யாவுமே—பஞ்ச பூதங்களே —இந்த ஒன்றுமிலாச் சூனியப் பரவெளியிலிருந்து

தோன்றியவைதாமே? அந்த ஒன்றுமில்லா வெட்ட வெளியில் இத்துணைப் பேருலகங்களும் பிறவும் அடங்குகின்றன என்றால், அவ்வெட்ட வெளியை ஆராய்தல் அவசியமன்றோ? ஆம்! அந்தப் பெருவெளி ஆராய்ச்சிக்கு உணர்வு தேவை. உணர்ச்சி அற்ற மரக்கட்டையாய் வாழ்வோருக்கு வாழ்க்கை பலன் தாராது.

வானவீதியில் செல்லும் மீன் இனங்களைக் காணும் சாதாரணக் கண்களுக்கு அவை அன்றாட வாழ்வில் காணும் சாதாரணப் பொருள்களாய் அமைந்து ஒன்றுமில்லையாய்க் காண்கின்றன. ஆனால், ஆய்வுக்களத்தில் அமர்ந்து அல்லும் பகலும் தொலை நாடியின் வழியாக ஆய்ந்து முடிவு காணும் ஒருவனுக்கு அம்மீனினமும் அவற்றைச் சார்ந்த பிற உலகங்களும் பலப்பல புது உண்மைகளை உணர்த்திக்கொண்டேதான் இருக்கும். ஆராய்ச்சி உணர்வும் சலியா உளமும் பேருழைப்பும் உடைய ஒருவர், ஒவ்வொரு பொருளிலும் புதுமை கண்டு கொண்டே இருப்பர். அல்லாதோர், 'ஏதோ பேருக்கு வாழ்ந்தோம்!' என்று 'ஒன்றுமிலா வாழ்வில்' முடிவர். ஆம்! அழியக்கூடிய இந்த உடம்பு அழிவதற்குள் பிறந்த பயனை ஆராய்ந்தறிந்து, இவ்வுடம்பால் உற்ற பயனைத் தமக்கும் மற்றவர்களுக்கும் தரும் வகையில் பாடு படுவர் நல்லவர். அப்படிப் பயன்படுபவர்–வருந்தி உடம்பின் பயன் கொண்டார்–கூற்றம் வருங்கால் வருந்துவதில்லை. வாழ்வும் சாவும் அவர்களுக்கு ஒன்றேதான். ஆகவே, கலக்கமோ ஏக்கமோ அவர்களை ஒன்றும் செய்யாது. பரந்த உலகத்தே சில நாட்களே வாழ்ந்து தாம் ஆற்ற வேண்டிய கடமை அறிந்து அத்துறையில் வாழ்வார் என்றும் வாழ்வார். அல்லாதார், என்றும் அல்லாதவராகவே முடிவர்.

இத்தகைய அரும்பெறல் உண்மைகளை நமக்கு நம் தமிழ் நாட்டுப் புலவர் பலர் கதைகள் வாயிலாகவும்

நீதிகள் வாயிலாகவும் அடிக்கடி விளக்கி உள்ளனர். அத்தகைய புலவருள் பரஞ்சோதியாரும் ஒருவர். அவர் பாடிய திருவிளையாடற்புராணத்தை அறியாதார் இருக்க மாட்டார்கள். அவருடைய கதைகளில் பல ஒரு வேளை காலத்துக்கு ஒவ்வாதனவாய் இருக்கலாம். ஆனால், கருத்துக்களோ, என்றென்றும் மேற்கொண்டு வாழ்விடை ஓம்பி வளர்க்க வேண்டுவனவாகும்.

திருவிளையாடற்புராணத்தில் பழியஞ்சின படலம் என்பது ஒரு பகுதி. ஒரு பார்ப்பனன் தன் மனைவியையும் பிறந்த இளங் குழந்தையையும் அழைத்துக் கொண்டு, திருப்பத்தூரிலிருந்து மதுரைக்கு வந்தான்; வரும் வழியில் அருகே உள்ள ஆலமரத்து நிழலில் மனைவியையும் மகவையும் இருக்க விட்டு மனைவியின் நீர் வேட்கையைத் தணிப்பதற்கு நீர் கொண்டுவரச் சென்றான். சிறிது நேரத்தில் நீர் கொண்டு வந்து பார்க்கையில் தன் மனைவி மார்பில் அம்பு பாய்ந்து இறந்து கிடந்தாள். குழந்தையோ அழுது கிடந்தது. அவன் தன் மனைவியைக் கொன்றார் யாராயிருக்கலாம் என்று தேடினான். படர்ந்த அந்த ஆலமரத்தின் மற்றொரு பக்கத்தில் ஒரு வேடுவன் இளைப்பாற உட்கார்ந்திருந்தான். அவனே தன் மனைவியைக் கொன்றவனாய் இருக்கக்கூடும் எனக் கருதி, அவனை அழைத்து அரச மன்றம் சென்று முறையிட்டான். பாண்டியனே, அவன் கொன்றிருப்பான் என்ற கருத்தில் அவ்வேடனை வருத்தி உண்மையை உரைக்கக் கூறினான். வேடனோ, உண்மையில் தான் ஒன்றும் அறியாதவன் என்றும் குற்றமற்றவன் என்றும் மன்றாடினான். வேதியனோ, அண்மையில் வேறு யாரும் இல்லையாதலால், அவ்வேடனே கொன்றவன் என வழக்காடினான். பாண்டியன் ஒன்றும் தெளியானாகி, மறுநாள் நியாய முடிவு செய்தான். பின், மன்னன் மதுரைச் சொக்கநாதரைப் பரவி, முடிவு காண முடியாத நிலையினைக் கூற, இறைவர்

கனவிடைத் தோன்றி, மறுநாள் அம்மதுரையின் நகரின் புறத்தே வணிகர் வீதியில் நடைபெறும் மணத்தில் மாறு வேடத்துடன் அவனையும் மறையவனையும் வந்திருக்கப் பணித்தார். இறைவர் மொழிப்படி மன்னவனும் மறையவனும் மண வீட்டில் மறைந்திருந்தனர்.

மண வேளை வந்தது. மங்கல நாண் புனையும் நேரம் நெருங்கிற்று. மற்றவர்களுக்குத் தெரியாது மன்னவனும் மறையவனும் காணுமாறு இயமன் தூதுவர் தோன்றினர். ஒருவன், 'மணமகன் உயிரை இம்மங்கல நிகழ்ச்சிக் கிடையில் எவ்வாறு கொண்டு செல்வது?' என்ருன். மற்றவன், 'அதில் ஒன்றும் கடினமில்லை. அன்ெருரு நாள் மரத்தில் தொத்திக் கிடந்த அம்பினை வீழ்த்திப் பார்ப் பனியைக் கொன்று அப்பழியையும் அருகிலிருந்த வேடன்மேல் சுமத்தியது போன்று, மங்கல ஆரவாரத் தால் மருண்டது போன்று அருகிலிருக்கும் பசுவின் தாம் பறுக்கச் செய்து, அது மணமகன் உடலை முட்ட, அத ஞல் அம்மணமகன் உயிரைக் கொள்ளலாம்' என்ருன். கேட்ட அரசன், 'மறையவனே, கேட்டனையோ?' என் ருன். 'அவன் கூறிய நிகழ்ச்சி நடப்பின், தன் மனைவி இறந்ததும் சரி' என்ருன் மறையவன். மணமுரசு ஒலிக்க, மங்கல நாண் புனையும் வேளையில் ஒலியால் மருண்டு தாம்பறுந்த பசு மணமகனை முட்ட, அவன் முடிந்தான். அரசனும் 'பின் மறையவனுக்குப் பொருள் கொடுத்து மற்ெருரு மணம் செய்துகொள்ளச் சொல்லி அனுப்பி விட்டு, வேடுவனைச் சிறை மீட்டு, அவனை வணங்கி, 'தெரியாதே யாம் இழைத்த தீத்தண்டம் பொறுத்தி!' எனவேண்டி, வேண்டிய பொன்னும் பொருளும் கொடுத் தனுப்பிய பின், உண்மை உணர்த்திய சொக்கநாதரை வணங்கி வழிபட்டான். ஆம்! இது சாதாரணமாக நம்ப முடியாத கதைதான். என்ருலும், இக்கதையின் இடை யில் மணமகன் முடிவிலேதான் பரஞ்சோதியார் ஓர்

*உண்மையைக் காட்டுகிருர். அதை அவர் வாக்கிலேயே பார்ப்போம் :*

'மணமகனே பிணமகனுய்
மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய்
அழுகையொலி யாய்க்கழிய,
கணமதனில் பிறந்திறும்இக்
காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவர்; உணர்
ஒன்றுமிலார்க்கு ஒன்றுமிலை.'

*என்ற பாடலில் அவர் காட்டிய உண்மையை உணர்வுடையார் அறிவர்; அல்லாதார்க்கு அது ஒன்றுமிலாப் பாட்டாகத்தானே தோன்றும்? ஆம்! இந்த உண்மையை உணர்ந்தவராகி உலகில் தன்னலமற்று உழைப்பவரே மக்கள் ஊழியர் ஆவர்—மற்றவர் யாரோ ?*

# மக்கள் ஊழியர் ☆ ☆

'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழியே நிலனே!' என்பது பழங்காலப் புலவர் வாக்கு. நாட்டு மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்களோ அவ்வாறே நிலமும் சீர்பெறும். அதாவது, மக்களது வாழ்க்கை முறை, பண்பாடு, ஒழுக்கம், கலை நலம் முதலியவற்றைக் கண்டே ஒரு நாட்டை உலகத்தார் உயர்த்திப் போற்றியும் தாழ்த்திப் பேசியும் அந்நாட்டின் நிலையை வரையறுப்பர். எனவே, ஒரு நாடு நல்ல நாடு என்று உலகத்தோரால் புகழப்பட வேண்டுமாயின், அதில் வாழும் மக்கள் அனைவரும் நல்லவராகவே இருக்கவேண்டும்.

நாட்டு மக்கள் என்பவர் யாவர்? அவர்கள் அந் நாட்டில் நிலைத்து வாழும் குடிகளாவர். அவர்கள் நன்கு வாழ வேண்டுமாயின், அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது யாது? நல்ல அரசாங்கம். ஆம். ஆளும் தலைவர்கள் நல்ல நேரிய வழியில் நடந்

தால் அந்நாட்டு மக்களும் நல்வாழ்வு பெறுவர், பழங் காலத்தே மன்னர்கள் நாடாண்டனர். அவர்கள் தம் கீழ் உள்ள குடிகளை உயிராகவும் உடலாகவும் போற்றிப் புரந்தனர். புறநானூற்றுப் பாடல் ஒன்று 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கூறுகின்றது. இதன்படி உலகெலாம்-உலக மக்களெல்லாம்-உடலா கவும், மன்னன் உயிராகவும் இருந்து ஒன்றி வாழ்ந்தமை பெறப்படுகிறது. கம்பர் அயோத்தி மன்னனைக் கூறும் போது அவனை உடலாகவும் மக்களை உயிராகவும் காட்டுகின்றார். 'உயிரெலாம் உறையுமோர் உடம்பும் ஆயினான்,' என்று தசரதனைக் காட்டுகிறார். எப்படித் தம் உயிருக்கும் உடம்புக்கும் பிரிக்க முடியாத பெருந் தொடர்பு உள்ளதோ, அப்படியே ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் தொடர்பு அமைய வேண்டுமென் பது நல்லவர் கருத்தென்பது மறுக்க முடியாத உண்மை யாகும்.

இன்று உலகில் மன்னர் நிலை மறைந்தது; மக்கள் ஆட்சி எங்கும் மலர்கின்றது. இருக்கின்ற ஒரு சில மன்னர்கள் கூட, மக்கள் மன்றத்திற்கு இடம் கொடுத்து ஒதுங்கி வாழும் வாழ்வையே விரும்புகின்றனர். எனவே, மக்களாட்சியால் பல நாடுகள் இன்று ஆளப்படுகின்றன. நாட்டில் செல்வாக்குப் பெற்றவர் தம் கட்சியே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து நாட்டை ஆளுகின்றது. எனவே முன் கூறிய அந்த உடம்போடு உயிர் கூடி நின்ற பண் பாடு இந்த நாடாளும் நல்லவர்கட்கும் மக்களுக்கும் பொருத்தமாக அமைய வேண்டும். அந்த அமைப்பை நிலை கெடாது பாதுகாக்க வேண்டியவர்கள்-உறவை வளர்க்க வேண்டியவர்கள் - ஆள்வோருக்கும் ஆளப் படுவோருக்கும் இடையில் இருக்கும் சாதாரண உத்தி யோகத்தர்களேயாவர்.

ஆட்சி மக்கள் ஆட்சியாய் அமைந்துள்ள காரணத்தால், மக்கள் மனப்போக்கின்படி அடிக்கடி ஆளும் கட்சியார் மாறிக்கொண்டே வருவார்கள். அறவழி தவறாது, ஆளவேண்டிய வழி பிழையாது, உற்றார் மற்றார் என்ற வேறுபாடுகள் நோக்காது, ஒல்லும் வகையான் ஒழுக்க நெறி நின்று ஆளும் நல்லவர், நெடுங்காலம் நாடாள்வர். அல்லவர், அடிக்கடி மாறிக்கொண்டேயிருப்பர். ஆள் வருகின்றவர் தாம் ஆள உரிமை பெற்றவர் என்று எண்ணாது, 'மக்களுக்குக் கடமையாற்றவே அரச பீடத்தே அமர்ந்தோம்,' என்று எண்ணி, தங்களை மக்கள் எசமானர்களாக எண்ணாது, மக்கள் ஊழியர்களாகக் கருதி ஆள வேண்டுவதே நல்ல ஆட்சி முறையாகும். அந்த ஆட்சி முறையிலும் ஆளுகின்ற மேற்பதவியிலுள்ள தலைவர்கள் சாதாரண மக்களோடு எப்போதும் தொடர்பு கொள்ள இயலாது. அவர்கள் சாதாரண மக்களோடு தொடர்பு கொள்ளும் வகையில், நடுவில் நின்று பணியாற்றுபவர்களே அரசாங்க ஊழியர் என்றும் மக்கள் ஊழியர் என்றும் (Govt. Servants: Public Servants) இன்று கூறப்படும் உத்தியோகத்தர்களாவர். அவர்கள் வழித்தான் மக்கள் நிலையை அரசாங்கம் அறிந்துகொள்ள முடியும். எனவே, ஆளுகின்றவர் மன்னராயினும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராயினும், அன்றி வேறு யாராயினும், மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்தம் தொடர்பின் வழி நாட்டின் நிலையை உணர்ந்து, அவர்கட்கு வேண்டிய ஆக்கப் பணி புரியும் நல்ல தொண்டை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்க ஊழியர்களுடையதேயாகும்.

இன்றைய மக்களாட்சி முறையில் யார் வேண்டுமானாலும் ஆள வரலாம். இன்றைக்கிருப்பார் நாளை பதவி விட்டு விலக்கப்படலாம். என்றும் அவர்கள்

ஆட்சி வாழ்வு நிலையற்றதே. ஆனால், அரசாங்க உத்தியோகம் ஏற்பவர்கள் ஒரு முறை நிலைபெற்று விடுவாராயின், குறைந்தது அவரது ஐம்பத்தைந்தாவது வயது வரை அவரது பதவி பறிபோக வழியில்லை. நெறி தவறாது உண்மை வழியில் ஒழுகின், அவர்கள் நிலை உயருமேயன்றித் தேய்வு பெறாது. எனவே, வந்து வந்து செல்லும் ஆளுகின்ற தலைவர்களைக் காட்டிலும், ஆயுள் முழுவதும் நிலைத்து நின்று மக்கட்பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கே பொறுப்பு அதிகம் என்பது துணிபு.

உத்தியோகத்தர் என்னும்போது அவருள் எத்தனையோ பிரிவுகள் நம் மனக்கண் முன் வருகின்றன. சாதியாலோ, சமயத்தாலோ, நீதியாலோ, நிறத்தாலோ உலகில் எந்த வேறுபாடும் காணலாகாது என்று அரசியற்றலைவர்களும், சீர்திருத்தவாதிகளும் ஒரு சேர முழங்கிக்கொண்டிருக்கும் அதே வேளையில் அந்த வேறுபாடுகள் இன்னும் பலவாறு வளர்ந்துகொண்டே செல்கின்றன. அந்த வேறுபாடுகளோடு உயர்தர உத்தியோகத்தர், கெஜட்டுப் பதிவு உத்தியோகத்தர், பதி வில்லா உத்தியோகத்தர் என்று உத்தியோகத்திலே சில வேறுபாடுகள் உள்ளதைக் காண்கிறோம். செல்வர் வறியர் என்ற வேறுபாடும், படித்தார் அல்லார் என்ற வேறுபாடும், நகரத்தார் நாட்டுப்புறத்தார் என்ற வேறுபாடும் இன்னும் எத்தனையோ வேறுபாடுகளும் நாள்தோறும் பெருகிக் கொண்டேதான் செல்கின்றன. இத்தகைய வேறுபாடுகள் இல்லாத காலமே மனிதன் மனிதனாக வாழும் காலமாகும்.

அரசாங்க உத்தியோகத்தர்களிலே கெஜட்டுப் பதிவு பெற்றவர், பெறாதவர் என்ற இரு வகையார் இன்று இருக்கின்றனர். இவர்களையன்றிச் சாதாரணப் பணியாளர்களும் பிறருங்கூட இருக்கின்றார்கள். இந்தப்

பதிவு பெற்றவருக்கும் பெருதவர்களுக்கும் பலவகையில் வேறுபாடுகள் இருக்கக் காண்கிறேம். உயர்ந்த படிப்புப் படித்துப் பட்டம் பெற்று, பல ஆண்டு பழகி, ஆளும் நெறியறிந்து, அதிக ஊதியம் பெறுகின்றவர் பெரும் பாலும் கெஜட்டுப் பதிவாளர்கள். அல்லாதார், மற்றை இனத்தார். இருவருள் நாட்டு மக்களுக்கு நேரில் பணி யாற்றி, அவர் குறையறிந்து முடிக்க முன் நிற்க வேண்டி யவர் யாவர் ? உயர்தர உத்தியோகத்தர்கள் தங்களுக்கு மேலுள்ள உத்தியோகத்தரோடும் ஆளும் அமைச்சர் முதலானவர்களோடும் தொடர்பு வைத்துச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்வார்கள்; மற்றச் சாதாரண உக்தியோகத்தர்கள்தாம் (N. G. O.) ஊர்களில் வாழும் நாட்டு மக்களை நேரில் காண வாய்ப்பினைப் பெறுகின் றனர். கிராம மக்களுள் பலருக்குத் தாலுக்காக் கச்சேரி கூடத் தெரியாது. ஊருக்கு வந்து போகும் தாசில் தாரை அவர்கள் அறிவார்கள். சிலர் தங்களுக்குத் தேவையானவற்றிற்குத் தாலுக்காக் கச்சேரி வந்து தாசில்தாரையோ, கீழுள்ள குமாத்தாவையோ கண்டு கேட்பார்கள். அவர்களும் கிராம மக்களுக்கு வேண்டிய வகையில் உதவி புரிவார்கள். தேவையானல் கிராமங் களுக்குச் சென்று, அவரவர் குறைகளை நேரில் கண்டு தீர்த்து வைப்பார்கள். உதாரணமாக, 'நாட்டில் நல்ல விளைவு இல்லை; வரி வஜா வேண்டும்,' என்று கேட் டால், தாசில்தார் வந்து பார்த்து, உண்மை உணர்ந்து, வேண்டுவது செய்வதைக் காண்கின்றேம். இதைப் போன்றே ஒவ்வொரு துறையிலும் தொண்டு நடை பெறும். எனவே, கிராம மக்கள் மிகச் சுலபமாக நெருங்கக் கூடியவர்களும், குறைகளைக் கூறக் கேட்பவர் களும், அவர் தம் தேவையை நிறைவேற்றி வைப்பவர் களும் இந்தச் சாதாரண உத்தியோகத்தர்களேயாவர்.

நாட்டில் எப்படியோ சிறுபான்மையோர் பெயர் கொண்டே பெரும்பான்மையோரை வழங்கும் பழக்கம் வந்துவிட்டது. சிறு பான்மையினரான பிராமணரைக் குறித்து, பெருபான்மையோரைப் பிராமணரல்லாதார் என்று குறிக்கின்றனர். சென்னையின் ஒரு பகுதியாக ஆந்திராவைப் பிரித்து, 'ஆந்திரா' எனப் பெயரிட்டு, மிகுதியுள்ள பரந்த பகுதியை எஞ்சிய சென்னை (Residuary state) என வழங்குகின்றனர். அது போன்றே சிறு பான்மையினராகிய கெஜட்டுப் பதிவாளரைக் கூறி, பெரும்பான்மையினரான மற்றவரை அஃதல்லாதார் என்கின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். அவர் வேறு ஒரு நல்ல பெயரால் வழங்கப்பெறின் வரும் குற்றம் யாதுமில்லை. ஆளுகின்ற தலைவர்கள் ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரண உத்தியோகத்தர்களின் பொறுப்புப் பெரிது என்று கூறினேன். மாவட்டத்தின் ஒரு மூலையில் இருக்கும் கெஜட்டுப் பதிவு பெற்ற ஜில்லா உத்தியோகத்தர்களுக்கும், மேல் உள்ள ஆணையாளர்களுக்கும் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடைபெறும் நிகழ்ச்சியை அவ்வப்போது ஆய்ந்து அறிவிப்பவர்கள் இவர்களேயாவார்கள். அதைப் போன்றே, அரசாங்க ஆணைகளை அமுலுக்குக் கொண்டுவரும் பொறுப்பும் இவர்களைச் சார்ந்தது ஆகும். மக்கள் விருப்பமறிந்தோ, அன்றி அறியாமலோ ஆளுவோர் சட்டம் இயற்ற, அதை நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று உயர்ந்த உத்தியோகத்தர் உத்தரவிட, அதை மக்களிடம் நேருக்கு நேர் நின்று நடைமுறைக்குக் கொண்டு வரும் பொறுப்பு இச்சாதாரண குமாஸ்தாக்களையும், இவர்களுக்கு நேர் மேலுள்ள தாசில்தார் போன்ற அதிகாரிகளையுமே சாரும். பொது மக்கள் வம்புக்கும் வசவுக்கும் முன்நின்று ஆட்சியாளர் தம் ஆணையைச் செலுத்

தவோ, அன்றி அரசாங்கத்துக்கு உரிய வரியை வசூல் செய்யவோ, அவர்கள் படும் பாடு சொல்லத் தரமன்று. எனவேதான் அவர்கள் பொறுப்புப் பெரிது என்றேன்.

இத்தகைய பெரும் பொறுப்பு ஏற்று, ஆட்சி மண்டபத்தின் அடிக் கடைக்கல்லாக அமர்ந்த இந்த கெஜட்டுப் பதிவில்லா உத்தியோகத்தர்கள் நன்கு காக்கப்பட்டாலன்றி, எந்த அரசாங்கமும் சரியான பணியை ஆற்ற முடியாது. இந்த உத்தியோகத்தில் உள்ளவர்களுள் பெரும்பாலோர் நடுத்தர வகுப்பினரே; ஒரு சில ஏழைகளும் இருப்பார்கள். இவர்கள் இரு புறத்தும் இடி வாங்க வேண்டியவர்கள். மேலுள்ளார் ஆணையை நிறைவேற்ற வேண்டும்; கீழுள்ள குடிகளின் குறைகளையும் போக்க வேண்டும். ஆகவே, இவர்தம் கடமை பெரிது! பெரிது! மிகப் பெரிது!

மக்கள் ஊழியர் (Public Servants) என்ற பெயர் உண்மையில் இவர்களுக்குத்தான் பொருந்தும். இவர்கள் மக்களுடன் நன்கு கலந்து பழக வேண்டும். ஒரு சிலர் கிராம மக்களை நன்கு அறிந்து கொள்ளாது, அவர்தம் குறை முடிக்க முடியாது இருக்கலாம். ஆனால், பெரும்பாலோர் உண்மையில் மக்கள் உளமறிந்து நடப்பவர்களாகத்தான் உள்ளனர். அன்றேல், மக்களாட்சியோ மன்னனாட்சியோ நடவாது! உயர்ந்த உத்தியோகப் பதவிகள் ஏற்படா! நாடு நாடாய் இராது! எனவே, இவர்களே நாட்டின் உயிர்–உடல்–எல்லாம். இவர்தம் வாழ்வு திருந்தினாலன்றி, நாட்டு வாழ்வு திருந்தியதாகாது.

மக்கள் ஊழியராகிய இத் திருக்கூட்டத்தார் மாவட்டந்தோறும் கூடுகின்றனர்; மாநில மாநாடும் அமைக்கின்றனர்; குறைகளைக் கொட்டிக் கொட்டி அளக்கின்றனர்; கூறவேண்டுபவரிடத்தில் கூறுகின்றனர். எனினும் இவர்

தம் குறைகள் முழுதும் நிறைவாக்கப்படவில்லை என்பது கண்கூடு. நாமே நம்மை ஆளும் இந்த நல்ல நாளில், இவர்தம் குறை முடிவு பெற வேண்டும். இவர்தம் குறையின் நிறைவே மக்கள் மனநிறைவு. இவர்களும் மக்கள் மனமறிந்து, அவர்தம் குறை முடித்து, நாட்டை நாடாகச் செய்ய வேண்டும். அதே வேளையில் அரசாங்கமும் இம் மக்கள் ஊழியர் மனம் மகிழக் குறை முடிக்க வேண்டும். எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்க எண்ணும் நல் உள்ளம் அனைவரிடமும் மலரின், மக்கள்—மக்கள் ஊழியர்—ஆளும் நல்லவர்—அமைச்சர்—அன்றி அரசர் ஆகிய அனைவரும் நலம் பெற்று வாழ வழியுண்டு! அந்நலம் பெற அனைவர் உள்ளமும் திறக்கப் பெறல் வேண்டும். வல்லவர் அத்திறப்புக்கு வழி அமைப்பார்களாக! வாழ்க வையகம்!

# திறப்புரை ★

திறத்தல் அவசியந்தான். எதைத் திறக்க வேண்டும்? இதோ இந்த மாநாட்டுப் பந்தலோ அன்றி மண்டபமோ முன்னரே திறந்திருக்கிறதே! மக்கள் பல்லோரும் இங்கு முன்னரே கூடியுள்ளனரே! எனினும், திறப்புரை என்ற பகுதியும் செயலும் இங்கு எதற்காக? திறந்துள்ள ஒன்றைப் பின்னும் திறப்பதா? இவை போன்ற கேள்விகளுக்கு இடம் ஏழலாம். எனினும், இம்மாநாட்டின் மூலம் மக்கள் உள்ளங்கள் திறக்கப்பட வேண்டும். எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வசதிகள் திறக்கப்படவேண்டும். எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும் சன்மார்க்க நெறி திறக்கப்பட வேண்டும். ஆம்! 'இதுவரையில் அந்நெறி அடைபட்டுக் கிடந்ததா? கிடக்கிறதா?' என்று கேட்கத் தோன்றும் சிலருக்கு. உண்மையில் ஓரளவு மூடித்தான் அடைப்பட்டுக் கிடக்கிறது. உலகம் உண்டாகிப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும், வள்ளுவரும், காந்தியும், பிற பெருநெறிப் பண்

பாளர்களும் வழிகாட்டிய பின்னும், இன்னும் அறநெறி அடைப்பட்டுத்தான் கிடக்கின்றது, இன்றைய உலகம், இயேசுவின் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைக் காட்டினும், ஆபிரகாம், நபி நாயகம் ஆகியோர் வாழ்ந்த காலத்தைக்காட்டிலும், அப்பரும் மணிமொழியாரும் வாழ்ந்த அந்தக் காலத்தைக்காட்டிலும் ஒரு சிறிதும் முன்னேறவில்லை என்பது காந்தியடிகளாரது முடிவின் மூலம் நமக்கு நன்கு விளங்குகிறது. ஆம்! மனிதன் மிருக உணர்வினின்று விடுபட்டு, மனித உணர்வோடு வாழும் பண்பாடு இன்னும் அரும்பவில்லைதான். அந்நிலையில் உள்ளங்கள் திறப்ப தெங்கே? உறுதி தரும் அறநெறிப் பாதை திறப்ப தெங்கே?

அடைந்த அறவாழ்வு திறக்கப்பட வேண்டுவதேயாகும். அந்தத் திறவுகோலை என்றோ நமக்கு வள்ளுவர் அளித்துள்ளார். அத்திறவுகோல் ஒவ்வொரு தமிழனிடத்திலும் இருக்கிறது. உலகில் வாழும் ஒவ்வொருவரிடமும் அத்திறவுகோல் இல்லாமல் இல்லை. ஒன்று திறக்க விருப்பமில்லாமையோ, அன்றித் திறந்தால் சுயநலம் பாழ்படும் என்ற கருத்தோதான், இது வரை அக்கோல் உபயோகிக்கப்படாததற்குக் காரணம். உலகப் பேரரசுகள் தொடங்கிச் சாதாரணத் தனிமனிதன் வாழ்க்கை வரையில் இவ்வுண்மை பொருந்தும். ஒவ்வொருவனும்—ஒவ்வொரு சமூகமும்—ஒவ்வொரு நாடும்—தானும் தாமும் மட்டும் வழவேண்டும் என்ற சுயநலத்தாலேதான் உள்ளங்கள் அடைப்பட்டுக் கிடக்கின்றன. எனினும், என்றேனும் ஒரு நாளில் உள்ளங்கள் திறக்கப்படத்தான் வேண்டும். அன்றேல், உலகம் ஒரு பெரிய சுடுகாடாக அன்றோ மாறிவிடும்! இதை எண்ணிப்பார்க்க முடிகிறதா?

உள்ளங்கள் திறப்புற்று, உயிரினம் செழிப்புற்று வாழ வழி வகுத்த அறவோர்களில் தலை சிறந்தவர்

திருவள்ளுவர். அத்திருவள்ளுவர் பெயரால் நாடெங்கும் நல்ல கழகங்கள் பணியாற்றி வருகின்றன. அவற்றுள் இச்செங்கம் திருவள்ளுவர் கழகமும் ஒன்றாகும். தொடங்கிய இரண்டாண்டுகளுக்குள், இக்கழகம் பல அரும் பணிகளைச் செய்து உள்ளது; ஆண்டுதோறும் மாநாடுகளும், வாரந்தோறும் வகுப்புகளும் நடத்தி, மக்கள் உணர்வைத் தூண்டி உள்ளங்களைத் திறக்கின்றது, வள்ளுவரைப் பற்றியும், அவர்தம் வாய்மொழியைப் பற்றியும் மக்களுக்கு உணர்த்தி அவர்களை ஓரளவு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக்கி வருகின்றது. ஆம்! இத்தகைய அரும்பணிக் கழகத்தில் இரண்டாம் ஆண்டு வள்ளுவர் விழா இன்று நடைபெறுகிறது. இவ்விழா நிகழ்ச்சியைத் தொடங்கு முகத்தான் திறந்து வைக்க வேண்டும். நான் இப்பெரும்பணியாற்ற வல்லேனல்லேனாயினும், அன்பர்தம் ஆணையும் ஆதரவும் உடன் கொண்டு, அவ்வாணை வழிக் கடனாற்ற முன்னிற்கின்றேன். இம்மாநாட்டுத் திறப்பு மூலம் மக்கள் மனங்கள் திறப்படைந்து மாநிலம் வாழ ஒரு சிறிதேனும் வழியும் வாய்ப்பும் அமையவேண்டும் என்பதே என் அவா! ஈண்டுக் குழுமிய தமிழன்பர்கள் அத்துறையில் ஆவன செய்வார்களாக !

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு,' என்று நம்மையும் நாட்டையும் வானளாவப் புகழும் வரையில் தமிழன் முன்னேறி விட்டான் என்பது உண்மைதான். ஆனால், அவ்வள்ளுவர் உரைத்தது என்ன என்று அறிந்து அதன்படி நடக்க நினைக்கின்றவர்கள் எத்தனைப்பேர் இந்நாட்டில் உள்ளனர்? 'கற்க கசடற கற்பவை; கற்றபின் நிற்க அதற்குத் தக,' என்ற வள்ளுவர் வாய்மொழிப்படியே அவர் நூலைக்கற்று, அதற்கேற்ப நடக்கின்றவர் யாவர் ? ஊருக்கு உபதேசியாக வள்ளுவரைப்பற்றி வானளாவப்

பேசுகின்றவர்களில் பெரும்பாலோருடைய வாழ்க்கை பழுதுற்றதாகவே உள்ளது. வள்ளுவர், மனிதன் மனிதனை வாழ வழி வகுத்த வள்ளல். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நல்லெண்ணமே அவர் குறள் முழுதும் தலை தூக்கி நிற்கும். எந்த அறத்தை எடுத்து விளக்கினும், அவ்வறத்தின் உட்பொருள், 'நாடு வாழ நாம் வாழவேண்டும் என்ற செம்மை நெறியிலே தான் சென்று முடியும். 'உலகம் வாழவேண்டும்; அவ்வுலகில் நாமும் வாழவேண்டும்,' என்ற நல்ல கொள்கை உடையவர் எத்தனை பேர் உள்ளனர்? அப்பண்பாளர் நாடுதோறும் ஒரு சிலர் இருந்தாலுங்கூட உலகத்தை அச்சுறுத்தும் அணுக்குண்டுப்போரும் பிற கொடுமைகளும் இடம் பெற வழியில்லையே! இன்றைய உலகம், யார் அறத்தாறு வாழ்கின்றவர் என அறிந்து அவருக்கு மதிப்பளித்துப் பெருமைப்படுத்துவதை விடுத்து, யார் அதிகமாக உயிர்களைக் கொன்று குவிக்க முடியும் என்று தேடித் திரிந்து, அத்தகைய ஆயுதங்களை வைத்திருப்பவர்களையும், அவர்தம் நாட்டையுமே போற்றுகின்றது. ஒரு புறம் உலக சமாதானம் என முழங்கிக்கொண்டே, மற்றொரு புறத்தே ஆயுதச் சத்தியைப் பெருக்கிக் கொள்ளும் நாடுகளே இன்றைய நாகரிகத்தின் தலைசிறந்த நாடுகளென மதிக்கப்படுகின்றன. 'பெயக் கண்டும் நஞ்சுண்டு அமையும்' அன்றைய நாகரிகம் இன்று காண முடியாத ஒன்று. ஒரு குற்றமும் செய்யாத ஏழை எளியவர்களையும், குழந்தைகளையும், நோயாளிகளையும் பிறரையும் ஒரு சேரக் கொன்று குவிப்பதே இன்றைய அணுக்குண்டு நாகரிகம். உள்ளப் பண்பாடாகிய நாகரிகம், உதட்டளவு நாகரிகம் ஆகிவிட்டது. மனத்தால் அறிந்து மகிழ வேண்டிய நாகரிகம், வெளி வேடங்களாகிய ஆடை அணிகளாலும் மாடமாளிகைகளாலும் மறைத்து நசுக்கப்பட்டது. இவற்றின் விளைவுதான் நாட்

டுக்கு நாடு காணப்படும் போரும் பிணக்கும் பிற கொடுமைகளும். இவற்றை நீக்க வழியில்லையா ? ஏன் இல்லை ? உண்டு. எக்காலத்தும் உண்டு. அதுதான் வள்ளுவர் வாக்கை வாழ்விடைக் கொண்டு வருதல்.

வள்ளுவரின் நாகரிகம் தலைசிறந்தது. மறந்தும் பிறன் கேடு சூழாப் பெருநெறியே அவர் வகுத்த அற நெறி.

**'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணாசெய் யாமை தலை.'**

என்பது அவர் வகுத்த அறம். அவர்தம் அறமும், அறிவும், தவமும், வாய்மையும், பிற யாவுமே மற்றவர்களுக்கு மனத்தாலும் தீங்கு எண்ணாச் செம்மை வாழ்விலேயே சென்று முடியும்.

**'மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற.'**

என்ற குறளும்,

**'அழுக்காறு அவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்'**

என்ற குறளும், மனிதன் மன அழுக்கற்று மற்றவர்மேல் பொறாமை கொள்ளாது, தேவைக்குமேல் கொள்ள வேண்டுமென்ற பேராசையையும், அதன் வழித்தோன்றும் கோபம் கொடுஞ்சொல் என்ற இவற்றையும் நீக்க வேண்டும் என்ற உண்மையையுமன்றோ வலியுறுத்துகின்றன? எனவே, அறநெறியென்பது மற்றவர் செல்வம் கண்டு மனத் தழுக்கில்லாதிருப்பது; பிறர் பொருளைத் தமதாகக் கொள்ள விரும்பும்—வாழ்வின் தேவைக்கு அதிகமாகச் சேர்த்து வைக்க விரும்பும்—அவாவை அறுப்பது; அவற்றின்மூலம் பற்றி வரும் பிற கொடுமைகளை நீக்குவது என்பது நன்கு புலனாகின்றதன்றோ !

இதைப் போன்றேதான் வள்ளுவர் அறிவையும் விளக்குவார்; அறிவென்பது ஏதோ தேர்வில் வெற்றி பெற்றுச் சிறப்பதென்பது வள்ளுவர் கருத்தன்று.

**'அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**
**தன்னேய்போல் போற்ருக் கடை?'**

என்ற அவர்தம் வாய்மொழி எதை விளக்குகிறது? பிறர் துயரைத் தம் துயரெனக் கருதி, உடுக்கை இழந்தவன் கைபோலத் தாமே வலியச் சென்று மற்றவர் துன்பம் துடைப்பவரல்லரோ அறிவுடையராவர்? அவரே எல்லாம் உடையவர் ஆவர். மற்றல்லாதார் யாரோ!

வள்ளுவர் தவம் என்று காட்டுவதும் இக்கருத்துப் பற்றியதேயாகும். தனக்கு வரும் துன்பத்தைத் தாங்குவதோடு, தான் பிற உயிர்களுக்குத் தீங்கிழையாதிருத்தலே தவம் என்பது அவர்தம் அசைக்க முடியாக் கொள்கை. காடு திரிந்தும் தாழ்சடை வைத்துக் காவி உடுத்தும் வாழ்தலைத் தவம் என்று அவர் கருதவில்லை உலகம் பழிக்கும் கொடுமைகளை ஒழிப்பதே அவர் கண்ட தவம். தமக்குத் தீங்கிழைத்தானுக்கும் ஊறு செய்யாதிருப்பதே அவர் உணர்ந்த தவம்.

**'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு.'**

என்பது அவர்தம் வாக்கு. இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் வாய்மைக்குத் தரும் விளக்கம் அமைகின்றது. வாய்மை என்ருல் கண்டதைக் கண்டபடியே சொல்லுதல் என்றுதான் அனைவரும் அறிவர். கண்டதை ஓரளவு மாற்றினும், அது இன்றைய நாகரிக உலகத்திற்கும் பொய்யாகத்தான் காணப்படும். ஆனால், வள்ளுவர் கண்டதைக் கண்டபடி சொல்வதை வாய்மை என்று கூறவில்லை; மற்றவர்களுக்குத் தீங்கிழைக்காத சொற்களையே வாய்மையென்கின்ருர்.

**'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்**
**தீமை யிலாத சொலல்'**

என்ற சொற்களை எண்ணி எண்ணி வாழ வேண்டுவது தமிழர்தம் கடமையன்றோ? மற்றவர் மனம் கோணு வகையில் பேசுவது வாய்மை என்றால், பிறருக்கு நன்மை தருவதற்காகப் பொய்கூடச் சொல்லலாமோ என்ற ஐயம் எழுவது இயற்கையன்றோ? வள்ளுவர் அந்த ஐயத் தையும் போக்குகின்றார். 'பொய்யால் நன்மை வருவ தாயின், அதைச் சொல்லலாம். ஆனால் அந்த நன்மை மற்றொருவருக்குத் தீங்கிழைக்கும் வழி வரலாகாது,' என்பதே அவர் கொள்கை. ஆம்! யாருக்கும் யாதொரு தீங்கும் பயவாத வகையில், மற்றவர்களுக்கு நன்மை உண்டாகக் கூறும் பொய்ம்மையும் வாய்மையின் பாற் பட்டதேயாம் என்பர் அவர். இதோ அவர் வாக்கு.

**'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்.'**

ஈண்டுப் 'புரைதீர்ந்த' என்பதற்கு உரையாசிரியர்கள் 'குற்றத்தின் நீங்கிய' என்று உரை எழுதுகின்றனர். மற்றவர்களை வருத்தும் குற்றத்தினின்று அது நீங்கியது என்பது பொருள். எனவே, யார்க்கும் தீங்கிழைக்காது பிறர்க்கு இன்பம் பயக்கவல்ல பொய்ம்மையும் மெய்யா கும் நாகரிகம் வள்ளுவர் கண்டது.

இவ்வாறே ஒவ்வொரு பொருள் பற்றியும் வகுத்துப் பேசும் வள்ளுவர் அடிப்படையில் மற்றவர்களுக்குத் தீங்கிழையாப் பெருநெறியை வற்புறுத்துவார். அது தானே உண்மை உலகியலும்! உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் தம்முள் மாறுபாடற்று மகிழ வேண்டும் என்பதுதான் நியதி. அதை விடுத்து, தானே வாழ வேண்டும் என்ற தருக்கில் மற்றவரை வாட விடுவது மனிதப் பண்பாகுமா? ஆகாதே! எனவே, வள்ளுவரை உண்மையில் அறிபவர்—அவர்தம் நூல்வழி வாழ விழை

பவர்—மறந்தும் மற்றவர்களுக்கு மனத்தாலும் தீங் கிழைக்கலாகாது என்ற பெருநெறியை முதலில் உணர் தல் வேண்டும்; உணர்ந்து, அதன் வழி ஒழுகவும் வேண்டும். அன்றுதான் வள்ளுவர் உண்மையில் வாழ்பவ ராவர். வள்ளுவர் காலம் தொடங்கி இன்று வரையில் அவர் தம் நூல் பற்றி எழுந்த உரைகள் பல. அவர்தம் மொழியைப் பொன்னேபோலப் போற்றும் நெறியில் எடுத்தாண்ட நூல்கள் பல. சங்க காலந் தொடங்கி இன்றுவரை எழுந்த எழுத்தோவியங்களில் எல்லாம் வள்ளுவர் கருத்தின் வாடை வீசுவதைக் காணலாம்.

நாடெங்கும் வள்ளுவரைப் பற்றிப் பேசுகின்றோம்; அவர்தம் புகழ் பாடுகின்றோம்; குறள்களை மனப்பாடம் செய்கின்றோம்; ஆனால், அதற்கடுத்த உள்ளத்திறப்பை மட்டும் மறந்துவிடுகிறோம். அன்றாடப் பணிகளை முடித்துப் பட்டு மெத்தையிலோ, பாயிலோ அன்றிப் பருக்கைக் கற்றரையிலோ படுக்கும் ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும், ஒவ்வொரு தமிழனும்-ஏன் ஒவ்வொரு மனிதனும், அன்றாடம் தான் செய்த செயல்களை எண்ணி, அவை எவ்வளவுக் கெவ்வளவு வள்ளுவர் காட்டிய வழிக்கு அப்பால் சென்றுவிட்டன என்று நோக்கினால், அவனுடைய அந்த எண்ணத்தில் உள்ள தவறுகள் தெரியாமல் போகா. தெரிந்த அன்றை நிலையை மறு நாள் ஒப்பிட்டுப் பார்ப்பின் ஓரளவு திருத்தமும் காணப் பெறலாம். அப்படியே நாள்தோறும் எண்ணி எண்ணி ஆராயின், திண்ணியராகிச் செம்மை நெறியில் செல்ல இயலும். ஆனால், நாம் எண்ணுகிறோமா? நெஞ்சில் கை வைத்து நினைத்துப் பாருங்கள்! ஆயிரத்துக்கொரு வர்—இல்லை. கோடிக்கொருவர்தான் எண்ணுகிறோமா? எண்ணினால், இவ்வாறு நாட்டில் பசியும் பிணியும் பகையும் வளருமா? எண்ண வேண்டும். அவை நீங்க வேண்டுமென்ற அவ்வெண்ணத்திற்கு உள்ளம் திறக்க

வேண்டுமே! என்று மனித உள்ளம் வள்ளுவர் காட்டிய வாய்மை நெறி வழி திறக்கப்படுகிறதோ, அன்று உலகம் உய்யும்; உயிர்கள் துன்பற்று உலவும்; விண்ணும் மண்ணும் யாரும் யாவும் இன்நெறியில் இயங்கலாம். அந்த நல்ல நாளுக்கு வழிகாட்டியாக இவ்வள்ளுவர்விழா அமைவதாக! இம்மாநாடு, அந்தநல்ல நாளைக் காட்டும்ஒளி விளக்காக அமைவதாக! அவ்வொளி விளக்கினைக்காண மக்கள் உள்ளங்கள் திறப்பதாக! உள்ளொளி பெருக்க நல்லொளி விளக்கமாகிய வள்ளுவர் வாய்மொழியைப் பற்றி யாதொரு வேறுபாடும் வேற்றுமையும் துயரும் துன்பமுமற்ற எழிலார் இன்ப உலகுக்கு எல்லோரும் செல்வோமாக! அங்கு வசியும் வளனும் சுரக்கும்; எல்லோரும் எல்லாச் செல்வமும் பெறுவர். அந்நாளில் ஏழையும் பணக்காரரும் இரார். உயர்ந்தோர் தாழ்ந்தோர் இருக்க மாட்டார். சாதியும் சமயமும் காழ்ப்புக் கொள்ளா. நீதியும் நிறமும் போட்டியிடா! அந்த நல்ல நாள் நாட்டில் அரும்ப அனைவரும் எண்ணுங்கள். இங்குக் கூடியுள்ள அனைவரும் உள்ளத்தால் எண்ணுங்கள்—தொடர்ந்து எண்ணுங்கள். எண்ணியது பெறும் வரை எண்ணுங்கள். உங்கள் எண்ணம் திண்ணியதாயின், நீங்கள் அந்த நாளை விரைந்து பெறுவீர்கள்.

**'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.'**

என்ற வள்ளுவர் வாக்கை உங்கள் முன்–உங்கள் திறந்த உள்ளத்தின் முன்–வைக்கின்றேன்; உலகம் அவ்வாறு எண்ணட்டும்! அவ்வெண்ணம் ஒரு நல்லுலகை உடனே தோற்றுவிக்கட்டும்! அன்பும் அருளும் அறனும் அந்நாளில் செழிக்க வழியுண்டு, ஆம்! அனைவரும் ஒன்றிய உளத்தினராய் அந்நாள் வேண்டி உளந்திறந்து ஒன்று கூடுவோம். கூடி முன்னேறிச் செல்வோம்! இம்மாநாட்டு நிகழ்ச்சி அவ்வுலகை விரைவில் நம்மிடைக் கொண்டு வர வழிகாட்டுவதாக!

**வாழ்க வள்ளுவர்! வளர்க அறநெறி!**

## ஆசிரியர் அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.

### அவர்கள் எழுதிய நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்திய முதற் சட்டம் | (நாடகம்) | 2 | 50 |
| 2. | சாதி வெறி | ,, | 1 | 00 |
| 3. | வேள் பாரி | ,, | 1 | 00 |
| 4. | பாசம் | (இரு நாடகங்கள்) | 1 | 75 |
| 5. | வாழ்வுப் பாதை | (நாவல்) | 4 | 50 |
| 6. | துன்பச்சுழல் | ,, | 2 | 00 |
| 7. | கறை படிந்த உள்ளம் | (சிறு கதைகள்) | 1 | 37 |
| 8. | கண்டதும் கருத்தும் | (கட்டுரைகள்) | 1 | 00 |
| 9. | மலேயாச் சொற்பொழிவுகள் | ,, | 1 | 50 |
| 10. | கட்டுரைப் பத்து | ,, | 1 | 25 |
| 11. | தமிழன் கண்ட மலேயா | (கடிதங்கள்) | 2 | 00 |
| 12. | சீவகன் கதை | (காப்பியம்) | 2 | 25 |
| 13. | ஆருயிர் மருந்து (மணிமேகலை) | ,, | 1 | 50 |
| 14. | கடவுளர் போற்றும் தெய்வம் | (கண்ணகி) | 1 | 00 |
| 15. | முப்பெருங் காப்பியங்கள் | | 5 | 00 |
| 16. | தமிழ்நாட்டு விழாக்கள் | | 1 | 50 |
| 17. | மனிதன் எங்கு செல்கிறான் | | 1 | 50 |
| 18. | கவிதையும் வாழ்க்கையும் | | 7 | 00 |
| 19. | கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | | 2 | 50 |
| 20. | வையைத் தமிழ் | | 3 | 50 |
| 21. | தமிழக வரலாறு | | 6 | 00 |
| 22. | தமிழ் உரைநடை | | 3 | 50 |
| 23. | பாட்டும் பயனும் | | 2 | 50 |
| 24. | இளமையின் நினைவுகள் | | 2 | 50 |
| 25. | முதியோர் கல்வி | (நான்கு நூல்கள்) | 3 | 00 |
| 26. | கொய்த மலர்கள் | | 3 | 50 |


## தமிழ்க் கலைப் பதிப்பகம்

சென்னை - 30